www.Padasalai.Net www.TrbTnpsc.com

BASED ON THE UPDATED NEW TEXTBOOK




Limited stock Only

ENGLISH மற்றும் தமிழ் மீடியம்

SURA'S

11th std

School Guides

100% SUCCESS

அனைத்து புத்தகக் கடைகளிலும் கிடைக்கிறது

100/100

orders@surabooks.com

call @ 8124201000 | 8124301000

9600175757 / 8056294222 / 7871802000

Available on

surabooks.com

2023-24 பதிப்பு

Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores

சுராவின்

# வணிகவியல்

## மேல்நிலை – முதலாம் ஆண்டு

**சிறப்பம்சங்கள் :**

- புதிதாக திருத்தியமைக்கப்பட்ட பாடநூலின்படி தயாரிக்கப்பட்டுள்ளது.
- அனைத்துப் பாடப்பகுதிகளிலும் மிகுதியான அளவில் கூடுதல் வினாக்கள் விடைகளுடன் தரப்பட்டுள்ளன.
- அரசு மாதிரி வினாத்தாள், முதல் பருவ இடைத்தேர்வு – 2018 [Govt. MQP & First Mid- 2018], காலாண்டுத் தேர்வு – 2018 & 2019 [QY-2018 & 2019], அரையாண்டுத் தேர்வு – 2018 & 2019 [HY - 2018 & 2019], அரசு பொதுத் தேர்வு மார்ச் – 2019, 2020 & மே – 2022 [Mar. - 2019 & 2020; May - 2022], உடனடித் தேர்வு ஜூன் – 2019 & ஆகஸ்ட் – 2022 [June - 2019 & Aug. - 2022], அரசு துணைத்தேர்வு செப்டம்பர் – 2020 & 2021 [Sep. - 2020 & 2021], திருப்புதல் பொதுத்தேர்வு – 2022 [CRT - 2022], மற்றும் பொதுத்தேர்வுக்கான முக்கிய வினாக்கள் [BEQ] ஆங்காங்கே சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.
- உடனடித் தேர்வு ஆகஸ்ட் – 2022 வினாத்தாள் விடைகளுடன் சேர்க்கப்பட்டுள்ளன.

சுரா பப்ளிகேஷன்ஸ்
சென்னை

For Orders Contact
80562 94222 / 81242 01000 / 81243 01000
96001 75757 / 78718 02000 / 9840926027

orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores

*2023-24 புதிய பதிப்பு*
© வெளியீட்டாளர்கள்

ISBN :978-93-5330-555-0
**குறியீட்டு எண் : SG 213**

*எழுதி வழங்கியவர்*
**திரு. பூமிநாதன்** M.Com., B.Ed., M.Phil.

**Our Guides for XI & XII Standard**

- சுராவின் தமிழ் உரைநூல்
- Sura's Smart English
- Sura's Mathematics (EM/TM )
- Sura's Physics (EM/TM)
- Sura's Chemistry (EM/TM)
- Sura's Bio-Botany & Botany (EM/TM) (Short Version & Long Version)
- Sura's Bio-Zoology & Zoology (EM/TM) (Short Version & Long Version)
- Sura's Computer Science (EM/TM)
- Sura's Computer Applications (EM/TM)
- Sura's Commerce (EM/TM)
- Sura's Economics (EM/TM)
- Sura's Accountancy (EM/TM)
- Sura's Business Maths (EM)

# பதிப்பாசிரியர் உரை

11ம் வகுப்பிற்கான சுராவின் **வணிகவியல்** வழிகாட்டியை வெளியிடுவதில் பெருமிதமும் மகிழ்ச்சியும் அடைகிறோம். வணிகவியல் பாடங்களுக்கான வினா விடைகள் / பயிற்சிகள் மிகவும் எளிமையாக, சுலபமாக புரிந்துகொள்ளும் விதத்தில் தரப்பட்டுள்ளன.

சுராவின் வணிகவியல் வழிகாட்டி மாணவர்களின் எல்லாத் தேவைகளையும் கருத்தில் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. பாடநூலை நன்கு மதிப்பாய்வு செய்து மாணவர்கள் எல்லாப் பாடங்களையும் வெகுவாக உட்கிரகித்து அறிந்துகொண்டு தேர்வை சுலபமாக எழுதி அதிக மதிப்பெண்களைப் பெற்று வெற்றியாளர்களாகும் விதத்தில், நமது வெற்றிக்கான இந்த வழிகாட்டி தயாரிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர்களுக்கு பாடம் நடத்துவதிலும், மாணவர்களுக்குக் கற்றுக்கொள்வதிலும் இந்த வழிகாட்டி துணையாக இருக்கும்.

நமது சுராவின் வணிகவியல் வழிகாட்டியில் இது போன்ற பல சிறப்பம்சங்கள் அடங்கியிருந்தாலும், வணிகவியல் மாணவர்கள் புரிந்துகொள்ள உதவிடும் ஆசிரியர்களின் பணியும் மகத்தானது என்பதை மறுப்பதற்கில்லை.

ஆசிரியர்களின் கற்றுத்தரும் பணியில் உறுதுணையாகவும், மாணவர்கள் பாடங்களைக் கற்கும் விதத்தில் ஊக்கம் தரும் வகையிலும் நமது வழிகாட்டி திகழும் என நம்புகிறோம்.

இறையருளை வேண்டுகிறோம்.

நலமே விளைக!

**சுபாஷ் ராஜ்,** B.E., M.S.,
– பதிப்பகத்தார்

***வாழ்த்துக்கள் !!!***

**தலைமை அலுவலகம்**
**சுரா பப்ளிகேஷன்ஸ்**
1620, 'ஜே' பிளாக், 16-ஆவது பிரதான சாலை,
அண்ணா நகர், சென்னை-600 040.
**Phones :** 044 - 4862 9977, 044 - 4862 7755.
**e-mail :** orders@surabooks.com
**website :** www.surabooks.com

**For Orders Contact**
80562 94222
81242 01000
81243 01000
96001 75757
78718 02000
9840926027

24/11/2022



orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com
www.Padasalai.Net
www.surabooks.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores

# பொருளடக்கம்



| அலகு | பாடத் தலைப்புகள் | பக்க எண் |
|---|---|---|
| 1. | அத்தியாயம் 1 - இந்தியத் துணைக் கண்டத்தின் வாணிக வரலாற்றுப் பின்னணி | 1-5 |
| | அத்தியாயம் 2 - தொழிலின் நோக்கங்கள் | 6-10 |
| | அத்தியாயம் 3 - தொழில் நடவடிக்கைகளின் வகைகள் | 11-15 |
| 2. | அத்தியாயம் 4 - தனியாள் வணிகம் | 16-20 |
| | அத்தியாயம் 5 - இந்து கூட்டுக்குடும்பம் மற்றும் கூட்டாண்மை | 21-27 |
| | அத்தியாயம் 6 - கூட்டுப் பங்கு நிறுமம் | 28-31 |
| | அத்தியாயம் 7 - கூட்டுறவு அமைப்பு | 32-36 |
| | அத்தியாயம் 8 - பன்னாட்டு நிறுமங்கள் | 37-40 |
| | அத்தியாயம் 9 - அரசு அமைப்புகள் | 41-46 |
| 3. | அத்தியாயம் 10 - இந்திய ரிசர்வ் வங்கி | 47-51 |
| | அத்தியாயம் 11 - வங்கிகளின் வகைகள் | 52-55 |
| | அத்தியாயம் 12 - வணிக வங்கிகளின் பணிகள் | 56-61 |
| | அத்தியாயம் 13 - பண்டகக் காப்பு | 62-66 |
| | அத்தியாயம் 14 - போக்குவரத்து | 67-71 |
| | அத்தியாயம் 15 - காப்பீடு | 72-76 |
| 4. | அத்தியாயம் 16 - இந்தியாவில் வளர்ந்து வரும் சேவைத் தொழில்கள் | 77-84 |
| 5. | அத்தியாயம் 17 - தொழிலின் சமூக பொறுப்புணர்வுகள் | 85-90 |
| | அத்தியாயம் 18 - தொழில் நன்னெறிகள் மற்றும் நிறுவன ஆளுகை | 91-95 |
| 6. | அத்தியாயம் 19 - தொழில் நிதிமூலங்கள் | 96-103 |
| | அத்தியாயம் 20 - பன்னாட்டு நிதி | 104-108 |
| | அத்தியாயம் 21 - குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மற்றும் சுய உதவிக் குழுக்கள் | 109-114 |
| 7. | அத்தியாயம் 22 - வியாபாரத்தின் வகைகள் | 115-119 |
| | அத்தியாயம் 23 - வழங்கல் வழிகள் | 120-125 |
| | அத்தியாயம் 24 - சில்லறை வியாபாரம் செய்தல் | 126-132 |
| 8. | அத்தியாயம் 25 - பன்னாட்டு வணிகம் | 133-138 |
| | அத்தியாயம் 26 - ஏற்றுமதி மற்றும் இறக்குமதி நடைமுறைகள் | 139-147 |
| | அத்தியாயம் 27 - பன்னாட்டு வணிகத்தின் ஒருங்கிணைப்பாளர்கள் | 148-153 |
| | அத்தியாயம் 28 - செலுத்தல் சமநிலை மற்றும் வாணிபச் சமநிலை | 154-157 |
| 9. | அத்தியாயம் 29 - ஒப்பந்தத்தின் கூறுகள் | 158-162 |
| | அத்தியாயம் 30 - ஒப்பந்த நிறைவேற்றம் | 163-166 |
| | அத்தியாயம் 31 - ஒப்பந்த விடுவிப்பு மற்றும் ஒப்பந்த மீறுகை | 167-170 |
| 10. | அத்தியாயம் 32 - நேர்முக வரிகள் | 171-175 |
| | அத்தியாயம் 33 - மறைமுக வரிகள் | 176-180 |
| | உடனடித்தேர்வு ஆகஸ்ட் - 2022 வினாத்தாள் விடைகளுடன் | 181-188 |





orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores

# அலகு 1 தொழிலின் அடிப்படைக் கூறுகள்

# அத்தியாயம் 1 இந்தியத் துணைக் கண்டத்தின் வாணிக வரலாற்றுப் பின்னணி

## பொருளடக்கம்


1.1. அறிமுகம்
1.2. பண்டமாற்று முறை
1.3. வணிகத் தடைகள்
1.4. தொழில் தடைகளும் அவற்றை நீக்கும் வழிகளும்


www.Padasalai.Net
www.surabooks.com

## பயிற்சி

### I. சரியான விடையைத் தேர்ந்தெடு

**1. பொருட்கள் விற்பனை செய்யும் இடத்திற்கு ______ என்று பெயர்** [QY. & HY. - 2019; Aug. - 2022]

அ. அங்காடி ஆ. சந்தை
இ. நாளங்காடி ஈ. அல்லங்காடி

[விடை. (அ) அங்காடி]

**2. இடத்தடை இதன் மூலம் நீக்கப்படுகிறது.** [BEQ; QY. - 2018; June - 2019; Sep. - 2020]

அ. போக்குவரத்து ஆ. பண்டகசாலை
இ. விற்பனையாளர் ஈ. காப்பீடு

[விடை. (அ) போக்குவரத்து]

**3. அர்த்தசாத்திரம் என்ற புத்தகம் யாரால் எழுதப்பட்டது?**

அ. கௌடில்யர் ஆ. வால்மிகி
இ. திருவள்ளுவர் ஈ. இளங்கோவடிகள்

[விடை. (அ) கௌடில்யர்]

**4. வியாபாரம் மற்றும் வணிகம் ______ பேரரசில் பொதுவானவையாக இருந்தது.** [BEQ; First Mid - 2018; QY. - 2018; Sep. - 2021]

அ. பல்லவர் ஆ. சோழர்
இ. பாண்டியர் ஈ. சேரர்

[விடை. (இ) பாண்டியர்]

**5. ______ முதன்முதலில் சுல்தானாக இருந்தார். அடர்ந்த வனப்பகுதிகளில் பாதை உருவாக்கி வியாபாரம் செய்ய வழி வகுத்தார்.** [CRT - 2022]

அ. பால்பன் ஆ. வாஸ்கோடகாமா
இ. அக்பர் ஈ. அலாவுதின் கில்ஜி

[விடை. (அ) பால்பன்]

### II. குறுவிடை வினாக்கள்

**1. பண்டமாற்றுமுறை என்றால் என்ன?** [BEQ; HY. - 2018; June - 2019; Mar. - 2020; May - 2022]

**விடை :** ஒரு பொருள் மற்றொரு பொருளுக்கு மாற்றாகப் பரிமாற்றம் செய்யப்படும் முறையைப் பண்டமாற்று முறை எனலாம்.



orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores



**2. நாளங்காடி என்றால் என்ன?** [BEQ; First Mid & QY. - 2018; QY. & Mar. - 2019; Sep. - 2020; CRT - 2022]

**விடை :** (i) பாண்டியர் ஆட்சிக் காலத்தில் பொருள்கள் விற்கும் இடத்தினை அங்காடி என அழைக்கப்பட்டது.

(ii) அப்பொருள்களின் விற்பனை, **பகலில் நடந்ததை** நாளங்காடி என அழைக்கப்பட்டது.

**3. அல்லங்காடி என்றால் என்ன?**

**விடை :** (i) பாண்டியர் ஆட்சிக் காலத்தில் பொருள்கள் விற்கும் இடத்தினை அங்காடி என அழைக்கப்பட்டது.

(ii) அப்பொருள்களின் விற்பனை, **இரவில் நடந்ததை** நாளங்காடி என அழைக்கப்பட்டது.

## III. சிறுவிடை வினாக்கள்

**1. வணிகம் பொருள் தருக.**

**விடை :** (i) **பண்டங்கள் மற்றும் பணிகள் பரிமாற்றம்** செய்யும் ஓர் ஒழுங்கு முறை அமைப்பு வணிகம் என்றழைக்கப்படுகிறது.

(ii) பொருளாதார நடைமுறைப் பணிகளோடு தொடர்புடைய உற்பத்தி, பரிமாற்றம், பகிர்வு, பொருட்கள் மற்றும் சேவைகளின் நுகர்வு தொடர்பான பணிகளை மேற்கொள்ளும் துறையே வணிகம் எனப்படும்.

(iii) உற்பத்தியாளருக்கும் நுகர்வோருக்குமிடையில் வணிகம் முக்கியப் பங்காற்றுகிறது.

**2. மருவூர்ப்பாக்கம் மற்றும் பட்டினப்பாக்கம் - விளக்குக.**

**விடை : மருவூர்ப்பாக்கம் :**

(i) பூம்புகார் போன்ற பெரிய நகரங்கள் மருவூர்ப்பாக்கம் (உள்நாட்டு நகரம்) என அழைக்கப்பட்டன. உணவுப் பொருள்கள் மற்றும் இதர பொருள்கள் வியாபாரம் செய்யக் கூடிய இடங்களில், அங்காடிகளையும் பெரு வியாபாரிகளையும் கொண்டிருந்தன.

(ii) **எ.கா. :** தொண்டி, கொற்கை, பூம்புகார், முசிறி ஆகும்.

**பட்டினப்பாக்கம் :**

(i) பட்டினப்பாக்கம் என்பது **கடலோர நகரம்** ஆகும்.

(ii) எ.கா. முத்துக்கள், பவளங்கள், மீன் பிடிப்பதிலும், உப்பு உற்பத்தியிலும் இடம் பெற்றுள்ளன.

**3. பாண்டியர் ஆட்சிக்காலத்தில் உருவாக்கப்பட்ட துறைமுகங்கள் யாவை?** [HY. - 2018; Sep. - 2021]

**விடை :** பாண்டியர் ஆட்சி காலத்தில் உருவாக்கப்பட்ட துறைமுகங்கள் கொற்கை, சாலியூர், காயல்பட்டினம், மருங்காவூர்பட்டினம், குமரி ஆகிய இடங்கள் ஆகும்.

## IV. பெருவிடை வினாக்கள்

**1. வணிகத்தின் பல்வேறு தடைகளைக் கூறுக. (ஏதேனும் 5)** [BEQ; First Mid; QY. & HY. - 2018; Mar. - 2019]

**விடை :** (i) ஆள்சார் தடை

(ii) இடத்தடை

(iii) காலத்தடை

(iv) இடர் மற்றும் பொருட்கள் தரம் கெடாமல் இருக்க தடை

(v) நட்ட இடர்பாட்டு தடை

(vi) அறிசார் தடை

(vii) பண்டப் பரிமாற்றத் தடை

(viii) நிதித் தடை

(ix) பொருட்களைத் துல்லியமாக தயாரிப்பத்தில் தடை

(x) பொருட்களை உற்பத்தி செய்கின்ற இடத்திலிருந்து நுகர்வோருக்கு நேரடி வீட்டிற்கு கொண்டு செல்லுதல்.

**2. பண்டமாற்று முறைக்கான நிபந்தனைகளாகக் கூறப்பட்டுள்ளன யாவை?** [BEQ; First Mid - 2018; Sep. - 2020; Aug. - 2022]

**விடை : 1. உபரி இருப்பு வைக்க இயலாத நிலை :** பொருட்கள் தனதுத் தேவைக்கும் அதிகமாகக் கையிருப்பு இல்லையெனில் பண்டமாற்று முறை நடைபெறாது.

**2. இருவருக்கும் (வாங்குபவர் - விற்பவர்) நேரடித் தொடர்பு இல்லை :**

(i) வாங்குபவரும் விற்பவரும் நேருக்கு நேராகச் சந்திக்க வேண்டியது இம்முறையில் மிகவும் அவசியம்.

(ii) ஆனால் இம்முறையில் சந்திக்க வாய்ப்பே இல்லை.

(iii) இதனால் பண்டமாற்று முறை நடைபெறாது.

**3. இருவருடையத் தேவைகளும் ஒத்துப்போகாமல் இருத்தல் :**

(i) இருவரில் முதலாமவரின் உபரிப்பொருட்கள் இரண்டாமவருக்குத் தேவையாகவும்.

(ii) இரண்டாமவருடைய உபரிப்பொருட்கள் முதலாமவருக்குத் தேவையாகவும் (இருவரின் தேவையும்) ஒத்துப்போக வேண்டும்.

(iii) இல்லையெனில் பண்டமாற்று நிகழாது

**4. பொதுவான மதிப்பீட்டு அளவு இல்லை :**

(i) ஒவ்வொரு பொருளுக்கும் தனித்தனி மதிப்புண்டு.

(ii) மதிப்பீட்டில் யாதொரு பொது (பண) மதிப்பும் பின்பற்றப்படுவதில்லை.

(iii) பொருட்கள் மதிப்பீட்டு ஒப்புமையில் தடைகள் உள்ளன.

(iv) இதனால் பண்டமாற்று நிகழாது.

orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores

# அத்தியாயம் 2 தொழிலின் நோக்கங்கள்

## பொருளடக்கம்


2.1. மனிதச் செயல்பாடுகள்
2.2. பொருளாதார நடவடிக்கைகளின் வகைகள்
2.3. தொழிலின் தன்மைகள்
2.4. தொழிலின் நோக்கங்கள்


## பயிற்சி

### I. சரியான விடையைத் தேர்ந்தெடு

**1. தொழிலின் முதன்மைக் குறிக்கோள் _______.**
[BEQ; QY. & HY. - 2018; HY. - 2019; Sep. - 2021]

அ. இலாபம் ஈட்டுதல்
ஆ. இலாபம் ஈட்டாமல் இருத்தல்
இ. சிறப்புத் தேர்ச்சி
ஈ. மேற்கூறிய எதுவுமில்லை

**[விடை. (அ) இலாபம் ஈட்டுதல்]**

**2. மருத்துவர் தொழில் என்பது ____.** [BEQ; QY. - 2018 & 2019]

அ. வேலைவாய்ப்பு  ஆ. தொழில்
இ. சிறப்புத் தொழில்  ஈ. தனியார் வணிகம்

**[விடை. (இ) சிறப்புத் தொழில்]**

**3. பின்வருவனவற்றுள் எது வியாபார நடவடிக்கையின் சிறப்பியல்புகள் இல்லை?**
[BEQ; Govt. MQP - 2018; Sep. - 2020; CRT & May - 2022]

அ. பொருட்கள் மற்றும் சேவையை உருவாக்குதல்
ஆ. இடர் ஏற்றல்
இ. பொருள் மற்றும் சேவை பரிமாற்றம் (அ) விற்பனை
ஈ. சம்பளம்/கூலி

**[விடை. (ஈ) சம்பளம்/கூலி]**

**4. அன்பு மற்றும் பாசம் அல்லது சமூக சேவை உள்நோக்கம் ஆகியவற்றால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள்.**
[First Mid - 2018; QY. - 2019; Mar. - 2020; Aug. - 2022]

அ. பொருளாதாரச் செயல்பாடுகள்
ஆ. பண நடவடிக்கைகள்
இ. பொருளாதாரச் சார்பற்ற செயல்பாடுகள்
ஈ. நிதி நடவடிக்கைகள்

**[விடை. (இ) பொருளாதாரச் சார்பற்ற செயல்பாடுகள்]**

### II. குறுவிடை வினாக்கள்

**1. பொருளாதார நடவடிக்கைகள் என்றால் என்ன?**

விடை : (i) வாழ்வாதாரத்திற்குத் தேவையான பணம், நிதிசார்ந்த ஆதாயங்கள் (இலாபம்) ஈட்டுவதற்காக மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் பொருளாதார நடவடிக்கை எனப்படும்.

(ii) (எ.கா.) பழவியாபாரி – பழங்களை விற்பனை செய்வது.

**2. தொழில் என்றால் என்ன?**

விடை : இலாபம் ஈட்டும் நோக்குடன் பொருட்களை உற்பத்தி செய்வது, கொள்முதல் செய்வது, விற்பனை செய்வது போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வது தொழில் ஆகும். (எ.கா) உற்பத்தியாளர், வியாபாரி.

**3. வேலை என்றால் என்ன?** [CRT - 2022]

விடை : வேலை என்பது **கூலி அல்லது ஊதியத்திற்காக** மற்றவர்களுக்குப் பணி ஆற்றுவது ஆகும். மற்றவர்களை பணியமர்த்துபவர், பணியமர்த்துநர் என்றும் அவரால் பணியமர்த்தப்பட்டவர்கள் பணியாளர்கள் என்றும் அழைக்கப்படுகின்றனர். (எ.கா.) எழுத்தர்கள், வங்கி அலுவலர்கள், மேலாளர்கள்.

### III. சிறுவிடை வினாக்கள்

**1. மனிதச் செயல்பாடுகள் என்றால் என்ன? விளக்குக.**

விடை : மனிதன், தனது தனிப்பட்ட விருப்பங்களையும், தேவைகளையும் பூர்த்தி செய்து கொள்வதற்காக மேற்கொள்ளும் நடவடிக்கைகளை மனிதச் செயல்பாடுகள் என்று கூறலாம்.

மனிதச் செயல்பாடுகளை, பொருளாதாரச் செயல்பாடுகள், பொருளாதாரம் சாராச் செயல்பாடுகள் என இரு வகைகளாகப் பிரிக்கலாம்.



orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com
www.Padasalai.Net www.surabooks.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores



- மனிதச் செயல்பாடுகள்
  - பொருளாதாரம் சார்ந்த செயல்பாடுகள்
    - தொழில்
      - வியாபாரி
      - உற்பத்தியாளர்
    - சிறப்புத்தொழில்
      - மருத்துவர்
      - வழக்கறிஞர்
      - பட்டயக் கணக்காளர்
      - பொறியாளர்
    - தொழில்
      - எழுத்தர்
      - மேலாளர்
  - பொருளாதாரம் சாராச் செயல்பாடுகள்
    - சமுதாயப் பணி
    - தொண்டு
    - இறைப்பணி
    - நாட்டுப்பற்று
    - அன்பு, பாசம்

**2. சிறுகுறிப்பு வரைக [அ] தொழில் [ஆ] சிறப்புத் தொழில்**

**விடை : (அ) தொழில் :** [June - 2019; Sep. - 2020; Aug. - 2022]

(i) இலாபம் ஈட்டும் நோக்குடன், பொருட்களை உற்பத்தி செய்வதும், விநியோகம், கொள்முதல் மற்றும் விற்பனை நடவடிக்கைகளை மேற்கொள்வதும் தொழிலாகும்.

(ii) தொழிலின் நடவடிக்கைகள் என்பது.
1. மூலப் பொருட்களை வாங்குவது
2. பொருட்களை உற்பத்தி செய்வது
3. நுகர்வோரிடம் பொருட்களை சென்றடையச் செய்வது.

**(ஆ) சிறப்புத் தொழில் :** [May - 2022]

அந்தந்ததுறையால், அதற்கென நிர்ணயம் செய்யப்பட்ட, உயர்கல்வித் தகுதி மற்றும் நிபுணத்துவம் பெற்றவர்களால் வழங்கப்படும் சிறப்பான பணிகள் சிறப்புத் தொழில்கள் ஆகும்.

**(எ.கா.)** வழக்கறிஞர்கள், பட்டயக் கணக்காளர்கள், மருத்துவர்கள், பொறியாளர்கள் வழங்கும் பணிகள்.

**3. தொழிலின் கருத்துக்களை விவரி.**

**விடை :** (i) மனிதத் தேவையைப் பூர்த்தி செய்ய பொருட்களை உற்பத்தி செய்தல், வாங்குதல் மற்றும் விற்பனை செய்தல் ஆகும்.

(ii) இது பொருட்கள் சேவைகள் தொடர்புடையது.

(iii) பொருட்கள் மற்றும் சேவைகளின் பரிமாற்றம் முக்கியமானது.

(iv) பொருட்கள் வாங்குவதும், விற்பதும் தொடர்ந்து நடைபெற வேண்டும்.

(v) இலாபம் ஈட்டுதல் நோக்கமாக இருக்க வேண்டும்.

(vi) தொழில் என்பது இடர்ப்பாடுகளை உள்ளடக்கியது.

## IV. பெருவிடை வினாக்கள்

**1. தொழிலின் சிறப்பியல்புகள் யாவை? (ஏதேனும் 5)** [Aug. - 2022]

**விடை :** (i) **பொருட்களை உற்பத்தி செய்தல்/திரட்டுதல் :** மனித தேவையை பூர்த்தி செய்ய பொருட்களை உற்பத்தி செய்தல் அல்லது ஒன்று திரட்டல் வேண்டும்.

(ii) **விற்பனை அல்லது பரிமாற்றம் :** தொழிலின் மிக முக்கிய தன்மை என்பது பொருட்கள் மற்றும் சேவைகளை விற்பனை செய்தல் அல்லது பரிமாற்றம் செய்தல் ஆகும். தனிநபர் தன்னுடைய சுய தேவைக்காக துணி நெய்தல் அது தொழில் செயல்பாடு ஆகாது.

(iii) **பொருட்கள் மற்றும் சேவைகள் தொடர்புடையது:** பொருட்கள் உற்பத்தி செய்தல் / திரட்டுதல் என்பது நுகர்வு பொருட்களான துணி, பேனா, பிரஷ், பைகள் ஆகியவற்றையும் உற்பத்தி பொருட்களான இயந்திரம் சார்ந்ததாகும். சேவைகள் என்பது மின்சாரம், எரிவாயு, குடிநீர் வழங்குதல் போக்குவரத்து, வங்கி, காப்பீடு தொடர்புடையதாகும்.

(iv) **ஒழுங்கு முறையில் தொடர்புடையது :** தனிப்பட்ட முறையில் வாங்கி விற்பது என்பது தொழில் ஆகாது. தொழில் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக நடைபெற வேண்டும்.

(v) **இலாப நோக்கம் :** தொழிலின் மிக முக்கிய நோக்கம் இலாபம் ஈட்டுவது ஆகும். மனித இனம் தன்னுடைய தேவைகளை பூர்த்தி செய்துகொண்டு தன்னுடைய பொருளாதார நடவடிக்கைகளை மேம்படுத்தினால் தொழில் எனலாம்.

(vi) **இடர்பாட்டிற்கான கூறு :** தொழிலில் இலாபம் ஈட்டுதல் என்பது நிச்சயமற்றதாகும். ஒரு வகையில் தன்னுடைய தொழிலை திறம்பட நிர்வாகம் செய்தாலும் இலாபம் என்பது மற்ற காரணிகளை சார்ந்து உள்ளது. அவையாவன, நுகர்வோர் விருப்பு, வெறுப்பு, மூலப்பொருள் பற்றாக்குறை, போக்குவரத்து சிக்கல், மின்சாரம் பற்றாக்குறை ஆகியன ஆகும். இதன் மூலம் இலாபம் ஈட்டுதல் என்பது நிச்சயமற்றது ஆகும். ஆகவே தொழில் செயல்பாடுகள் இடர்பாடுகளை உள்ளடக்கியதாகும்.

www.Padasalai.Net www.Surabooks.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or
Available at All Leading Bookstores



**2. தொழில், சிறப்புத் தொழில் மற்றும் வேலைவாய்ப்பு - ஓர் ஒப்பீடு செய்க. (ஏதேனும் 5)** [BEQ; CRT & May - 2022]

விடை :

| தொழில் | சிறப்புத் தொழில் | வேலைவாய்ப்பு |
|---|---|---|
| **1. உருவாக்கும் முறை :** தோற்றுவிப்பாளர்களின் முடிவுகள் பதிவு மற்றும் பிற நடைமுறைகள் அனைத்தும் சட்டத்திற்குட்பட்டது. | சிறப்புத் தொழில் அமைப்பை உருவாக்குதல், உறுப்பினர் சான்று பெறுதல் | சேவைக்கான ஒப்பந்தம் அமைப்பது, நியமன கடிதம் பெறுதல். |
| **2. பணியின் தன்மை :** சரக்கு மற்றும் சேவையைப் பொது மக்களுக்கு அளித்தல். | சிறப்புத் தேர்ச்சி பெற்ற சேவையை வழங்குதல். | பணியாளர்களுக்கு வழங்கிய செயலைச் செய்தல். |
| **3. தகுதி :** குறைந்தபட்ச தகுதி என்று ஏதுமில்லை. | குறிப்பிட்ட பிரிவில் சிறப்பு தகுதியும் / பயிற்சியும் பெறுதல். | குறைந்த பட்சத் தகுதி தேவையில்லை. |
| **4. அடிப்படை நோக்கம் :** சமுதாயத்தின் தேவையைப் பூர்த்தி செய்து இலாபம் ஈட்டுதல் | சேவை புரிதல் | முதலாளிகளுக்கு செயலை செய்து முடிப்பதுடன் கூலி/ சம்பளம் பெறுதல். |
| **5. மூலதனம் :** நிறுவனத்தின் அளவைப் பொறுத்து மூலதன அளவு மாறும். | இதை உருவாக்க வரையறுக்கப்பட்ட நிதி தேவைப்படும். | மூலதனம் ஏதும் தேவையில்லை. |
| **6. வெகுமதி :** இலாபம் | தொழில்முறை கட்டணம் | கூலி / சம்பளம் |
| **7. இடர் :** இலாபம் நிச்சயமான மற்றும் நிச்சயமற்றதாகும். | கட்டணம் நிச்சயமானது மற்றும் நிலையானது. | நிலையான கூலி/ சம்பளம் இடர் ஏதுமில்லை. |

**3. தொழிலின் நோக்கங்களை விவரி.** [BEQ; QY. - 2018 & 2019; Mar. - 2020]

**விடை : தொழிலின் நோக்கங்கள் பின்வருமாறு:**

**(i) பொருளாதார நோக்கங்கள் :**

1. தொழில்கள் பொருளாதார நோக்கம் என்பது இலாபம் ஈட்டுவதே ஆகும்.
2. மேலும் இலாபம் ஈட்டுவதற்கு நுகர்வோரை உருவாக்குதல், புதிய நுட்பங்களைக் கண்டுபிடித்தல் வளங்களை முழுமையாகப் பயன்படுத்துதல் போன்ற நோக்கங்களே மிக முக்கியமானதாகும்.

**(ii) சமூக நோக்கங்கள் :**

1. சமூக நலனைப் பேணுவது என்பது சில தொழிலமைப்புகளை, சமுதாயத்திற்கு நன்மை அளிக்கக் கூடிய வகையில் பயன்படுத்தப்பட வேண்டும்.
2. எந்த தொழில் நடவடிக்கைகளும் சமுதாயத்திற்கு சிக்கல் ஏற்படுத்தும் வகையில் அமையக்கூடாது.

**(iii) நிறுவன நோக்கங்கள்:**

1. தொழிலமைப்பின் மிக முக்கிய நோக்கம் தொடர்ந்து செயல்பாடுகள் மூலம் பொருளாதாரத்திற்கு உதவும் வகையில் அமையப்பெற வேண்டும்.
2. அவை, நிறுவன விரிவாக்கம் மற்றும் நவீன மயமாக்கம், நுகர்வோருக்கு தரமான பொருள்களை வழங்குதல், நுகர்வோருக்குத் திருப்திபடுத்துதல் ஆகியன மூலமாக அமையலாம்.

**(iv) மனித நோக்கங்கள் :**

1. தொழிலமைப்பு தன்னுடைய பணியாளர் நலன் மற்றும் எதிர்காலத் தேவையை நிறைவேற்றக் கூடிய வகையில் செயல்பட வேண்டும்.
2. மேலும் இயலாதவர்கள், ஏழ்மை நிலையில் உள்ளவர்கள், நலம் காக்க உதவ வேண்டும். பணியாளர்களின், பொருளாதார, சமூக உளவியல் சார்ந்த தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடியவையாக அமைய வேண்டும்.

**(v) தேசிய நோக்கங்கள் :**

1. தொழில் நிறுவனம், ஒரு நாட்டினுடைய மிக முக்கிய அங்கமாக கருதப்படுவதால் அவை நாட்டின் நோக்கங்களையும், விருப்பங்களையும் நிறைவேற்றுகிறது.
2. கடமை வகையில் தன்னுடைய குறிக்கோளை அமைத்து தெளிவுபடுத்த வேண்டும்.
3. ஒரு நாட்டின் நோக்கம் என்பது, மக்களுக்கு வேலைவாய்ப்பை அளித்தல், அரசிற்கு வருவாய் ஈட்டுதல், சரக்கு மற்றும் சேவை உற்பத்தியில் தன்னிறைவு அடைதல், சமூக நீதியை நிலைநாட்டுதல் ஆகியவை மிக முக்கியமானதாகும்.
4. எனவே ஒரு தொழில் அமைப்பு தன்னுடைய குறிக்கோளை நிர்ணயம் செய்யும் போது மேற்கூறிய நோக்கங்களை கருத்தில் கொள்ள வேண்டும்.

orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or
Available at All Leading Bookstores

# அலகு 2 தொழில் அமைப்புகளின் வடிவங்கள்

# அத்தியாயம் 4 தனியாள் வணிகம்

## பொருளடக்கம்

4.1. தொழில் அமைப்பு
4.2. தனியாள் வணிகம்
4.3. சிறப்பியல்புகள்
4.4. தனியாள் வணிகத்தின் நன்மைகளும் குறைபாடுகளும்

www.Padasalai.Net www.surabooks.com

## பயிற்சி

### I. சரியான விடையைத் தேர்ந்தெடு

**1. கீழ்க்கண்டவற்றில் எது பழமையான வியாபார அமைப்பு வடிவம்?** [BEQ; QY. - 2018; Mar. & HY. - 2019; Sep. - 2021]

அ. தனியாள் வணிகம்
ஆ. கூட்டாண்மை
இ. கூட்டுறவுச் சங்கம்
ஈ. நிறுமம்

**[விடை. (அ) தனியாள் வணிகம்]**

**2. எந்த அமைப்பு ஒரே ஒருவராக உரிமையாளர், நிறுவனர் மற்றும் மேலாளர் என்ற வகையில் இருக்கும்?** [May - 2022]

அ. கூட்டு நிறுவனம் ஆ. அரசு நிறுவனம்
இ. கூட்டுறவுச் சங்கம்
ஈ. தனியாள் வணிகம்

**[விடை. (ஈ) தனியாள் வணிகம்]**

**3. தனியாள் வணிகத்தின் மிகப்பெரிய குறைபாடு** [QY. - 2019 ; Mar. - 2020; Aug. 2022]

அ. வரையறு பொறுப்பு ஆ. வரையறாப் பொறுப்பு
இ. அமைப்பெளிமை ஈ. விரைவான முடிவு

**[விடை. (ஆ) வரையறாப் பொறுப்பு]**

**4. பின்வருவனவற்றுள் எந்த ஒன்று தொழில் அமைப்பு இல்லாதது?** [BEQ; HY. - 2018; CRT - 2022]

அ. கூட்டுப்பங்கு நிறுமம்
ஆ. தனியாள் வணிகம்
இ. அரசு நிறுமம் ஈ. கூட்டுறவு

**[விடை. ஆ. தனியாள் வணிகம்]**

### II. குறுவிடை வினாக்கள்

**1. தனியாள் வணிகர் என்று அழைக்கப்படுபவர் யார்?** [Sep. - 2021]

விடை : தனிநபர் தன் மூலதனத்தைக் கொண்டு, தனது சொந்த திறமை மற்றும் அறிவைப் பயன்படுத்தி, வியாபார நடவடிக்கைகளைத் தனது சொந்தப் பொறுப்பில், **மேலாண்மை செய்து நடத்துபவர்** தனியாள் வணிகர் ஆவார்.

**2. கூட்டுரு சாரா பேரளவு நிறுவனங்களைப் பற்றிச் சுருங்கக் கூறுக.**

விடை : (i) கூட்டுருவாக்கம் பெறாத நிறுவனங்களில் உரிமையாளர்களும், தொழிலும் ஒன்றாகவே கருதப்படுகிறது இதில் உரிமையும், மேலாண்மையும் ஒருவரையே சாரும்.

(ii) உரிமையாளர் வியாபாரத்தை நேரடியாக கட்டுப்படுத்த இயலும்.
(எ.கா.) கூட்டாண்மை, இந்துக் கூட்டுக்குடும்பம்.



orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or
Available at All Leading Bookstores



**3. கூட்டுரு நிறுவனங்களைப் பற்றிச் சுருக்கமாக கூறுக.** [Sep. - 2020]

விடை : (i) கூட்டுவாக்கம் பெற்ற அமைப்புகள் தனக்கென்று ஒரு சட்டத்தன்மையைப் பெற்று ஒருபுனைவு நபர் என்ற முறையில் உரிமையாளர்களிடமிருந்து தனித்து ஒரு இயக்கமாகச் செயல்படுகிறது. இதில் உரிமையும் மேலாண்மையும் பிரிக்கப்படுகின்றன.

(ii) உரிமையாளர்கள் மேலாண்மையில் நேரிடையாகப் பங்கேற்க இயலாது.

(எ.கா.) கூட்டுப்பங்கு நிறுமங்கள் மற்றும் கூட்டுறவு சங்கங்கள்.

## III. சிறுவிடை வினாக்கள்

**1. வரையறாப் பொறுப்பு என்றால் என்ன?** [Mar. - 2019; Sep. - 2021]

விடை : தனியாள் வணிகரின் பொறுப்பு **வரையறுக்கப்படாதது.** அதன் விளைவாக அவரது வியாபாரக் கடன்களை செலுத்த தொழிலின் சொத்துக்கள் போதுமானதாக இல்லையென்றால் தன் சொந்த சொத்துக்களிலிருந்தும் கடனீந்தோருக்குச் செலுத்த வேண்டும். எனவே அவரின் பொறுப்பு முதலீட்டுத் தொகையுடன் நின்று விடாமல், தன் சொந்த சொத்திற்கு ஈடாகிறது. இதனையே வரையறாப் பொறுப்பு என்கிறோம்.

**2. தனியாள் வணிகத்திற்கு சில உதாரணங்களை கூறு.** [QY. - 2019;CRT - 2022]

விடை :

| | | |
|---|---|---|
| (i) | **குறைந்த மூலதனம்** | : இனிப்பு கடை, பெட்டிகடை. |
| (ii) | **விரைவான முடிவு** | : பங்குதாரர், மருத்துவர். |
| (iii) | **குறைந்த இடர்பாடு** | : ஊர்தி பழுது பார்க்கும் தொழில், சில்லறை விற்பனை நிலையம். |
| (iv) | **வாடிக்கையர் விருப்பு வெறுப்பு** | : அழகு நிலையம், தையலகம். |

## IV. பெருவிடை வினாக்கள்

**1. தனியாள் வணிகத்தின் சிறப்பியல்புகள் யாவை? (ஏதேனும் 5)** [June & QY. - 2019; Sep - 2020; CRT & May - 2022]

விடை : (i) **தனி நபர் உரிமை :**

1. இது தனி நபரால் நடத்தக் கூடிய அமைப்பாகும். தனியாள் வணிகர் ஒருவரே தேவையான மூலதனத்தைச் செலுத்துகிறார்.
2. தனியாள் வணிகத்தில் அவர் ஒருவரே உரிமையாளராக இல்லாவிட்டாலும் அதன் அமைப்பு முழுவதையும் அவரே கட்டுப்படுத்துகிறார்.

(ii) **தலையீடற்ற செயல்பாடு மற்றும் விரைவான முடிவு :**

1. தனியாள் வணிகர் தனது வியாபாரத்தில் தலையீடின்றிச் செயல்படுகிறார்.
2. தனியாள் வணிகர் தனது அறிவுத்திறன் மற்றும் பட்டறிவின் மூலம் குறுக்கீடின்றிச் செயல்படுகிறார்.
3. தனி உரிமையாளர் உடனடியாகவும் விரைவாகவும் முடிவு எடுக்கிறார்.

(iii) **வரையறாப் பொறுப்பு :**

1. தனியாள் வணிகரின் பொறுப்பு வரையறுக்கப்படாதது.
2. அதன் விளைவாக அவரது வியாபாரக் கடன்களைச் செலுத்தத் தொழிலின் சொத்துகள் போதுமானதாக இல்லையென்றால் தன் சொந்த சொத்துகளை பறிமுதல் செய்ய கடனீந்தோருக்கு உரிமை உண்டு.

(iv) **முழு இலாபத்தையும் அனுபவித்தல் :**

1. அந்நிறுவனத்தின் முழு இலாபத்தையும் அனுபவிக்கும் உரிமை தனியாள் வணிகருக்கு உண்டு.
2. தனது கடின உழைப்பின் மூலம் ஈட்டிய இலாபத்தின் உந்துதலால் அவர் தனது வணிகத்தை மேலும் விரிவாக்கம் செய்கிறார்.

(v) **அரசு விதிமுறைகள் பின்பற்றாமை :**

1. தனியாள் வணிகர் அரசின் விதிமுறைகளின் குறுக்கீடு இன்றிச் செயல்படுகிறார்.
2. இவ்வமைப்பை உருவாக்குவதிலோ, மேலாண்மை செய்வதிலோ அல்லது கலைப்பதிலோ, அரசின் விதிமுறைகள் பின்பற்ற வேண்டிய கட்டாயம் இல்லை.

(vi) **குறைந்த மூலதனம் மற்றும் வரையறுக்கப்பட்ட மேலாண்மை திறன் :**

1. தனியாள் வணிகர் தனி ஒருவரே மூலதனம் வழங்குவதால் அது சிறிய அளவிலேயே இருக்கும். அதனால் நிதித்தடை ஏற்பட வாய்ப்புகள் அதிகம்.
2. தனி உரிமையாளரின் மேலாண்மை திறன் குறைவாக இருக்கும் சூழ்நிலையில் நிறுவன விரிவாக்கம் பாதிக்கப்படலாம்.

**2. தனியாள் வணிகத்தின் நன்மைகளை விவரி. (ஏதேனும் 5)** [BEQ; QY. - 2018; Mar. - 2020; Sep. - 2021]

விடை : (i) **எளிதான அமைப்பு :**

1. தனியாள் வணிகம் மட்டுமே வியாபார அமைப்பு வடிவங்களில் **சட்ட சடங்குமுறை ஏதுமின்றி** துவக்கலாம்.
2. ஒப்பந்தம், பதிவு போன்றவை இவ்வமைப்பிற்கு அவசியமில்லையாதலால் தொழில் முனைய விரும்புவர் எவரும் தொடங்கலாம்.

(ii) **கடின உழைப்பிற்கு நேரடி ஊக்குவிப்பு :**

1. முயற்சிக்கும் வெகுமதிக்கும் நேரடியாக தொடர்பு இருப்பதால் தனியாள் வணிகர் இலாபம் முழுவதற்கும் அவரே உரிமையாளர் ஆகிறார்.
2. இது அவருடைய வியாபாரத்தை ஊக்குவித்து, அயராது உழைக்கச் செய்கிறது.

(iii) **குறைந்த மூலதனம் :**

1. தனியாள் வணிகத்தின் சிறப்பான நன்மையே குறைந்த மூலதனம் ஆகும்.
2. அவர் குறைந்த மூலதனத்துடன் தொழில் தொடங்க இயலும்.

(iv) **கடன் தகுதி :**

1. வியாபாரக் கடன்களைத் தனது சொந்த சொத்துக்களிலிருந்து தீர்ப்பதால் கடனீந்தோர் எளிதாக கடன் தர முன்வருவர்.
2. அதனால் அவருக்குத் தேவையான அளவு கடன் வசதி எளிதாகக் கிடைக்கும்.

www.Padasalai.Net www.surabooks.com
orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or
Available at All Leading Bookstores



**(v) வாடிக்கையாளருடன் நேரடித் தொடர்பு:**

1. வாடிக்கையாளரின் விருப்பங்களைத் தெரிந்திருப்பதால் அவர்களின் தேவைகளை எளிதாக நிறைவேற்றுகிறார்.
2. அவரின் மரியாதையான வரவேற்பு மற்றும் இணக்கமான சூழல்களைப் புரிந்து கொண்டு நிறைவேற்றுகிறார்.

**(vi) நெகிழ்வுத்தன்மை :**

தனியாள் வணிகர் சந்தை நிலவரத்திற்கு ஏற்ப வாடிக்கையாளரின் விருப்பத்திற்கு இணங்க தன் வியாபார நிலைகளை மாற்றிக்கொள்ளலாம்.

**3. தனியாள் வணிகரின் குறைபாடுகளை விவரி.**

**விடை : (i) அளவான முதல் :** [CRT & Aug. - 2022]

1. தனியாள் வணிகரின் மூலதனம் வரையறுக்கப்பட்டது. ஆகவே அவரின் வியாபார நடவடிக்கைகள் ஓர் எல்லையைத் தாண்டிச் செல்ல வாய்ப்புக் குறைவு.
2. அவரின் **கடன் பெறும் திறனும் குறைவாகவே இருப்பதாலும்** மற்றும் அதிகமான மூலதனம் தேவைப்படும் தொழிலைத் துவக்க முடியாமையும் குறைபாடுகளாக இருக்கின்றன.

**(ii) வரையறுக்கப்பட்ட மேலாண்மைத் திறன் :**

1. வியாபார நடவடிக்கைகள் அனைத்தும் தனி ஒரு மனிதரால் கட்டுப்படுத்தப்படுகிறது.
2. அவரின் அறிவும் திறமையும் குறிப்பிட்ட அளவிற்கு மேல் வியாபார நடவடிக்கையில் செலுத்த வேண்டி இருப்பதால் அதிகப்படியான மன அழுத்தம் ஏற்படுவதுடன் தவறான முடிவெடுக்க ஏதுவாகிறது.
3. வரையறுக்கப்பட்ட மேலாண்மைத் திறமையே அவரின் வியாபாரத்தை விரிவாக்கம் செய்வதைத் தடை செய்கிறது.

**(iii) வரையறாப் பொறுப்பு :**

1. வியாபாரத்தின் உரிமையாளரின் பொறுப்பு என்பது வரையறுக்கப்படாதது.
2. கடனீந்தோர்கள் தமது கடன்களைத் தனியாள் வணிகரின் சொந்தச் சொத்துக்களிலிருந்தும் சரிக்கட்டிக் கொள்ள வாய்ப்பு இருப்பதால், தனிநபரின் பொறுப்பு வரையறாப் பொறுப்பாக உள்ளது.

**(iv) சிறப்புத் தேர்ச்சியின்மை :**

1. தனியாள் வணிக அமைப்பு சிறிய அளவில் இருப்பதால் அதன் நிதி ஆதாரம் வரையறுக்கப்பட்டது.
2. பல்வேறு துறைகளில் தேர்ச்சி பெற்றவர்களையும் பணியமர்த்தப் போதிய பொருளாதார வளம் இல்லாத காரணத்தினால் அதிக நன்மைகளைப் பெற இயலாது.
3. அவர் ஒருவரே உற்பத்தி, சந்தையிடுதல், கணக்குப்பதிவியல், கடிதத் தொடர்பு போன்ற பணிகளை ஒருவரே கையாள முடியாது.

**(v) அவசர முடிவு :**

1. அவசர முடிவுகள் நிறுவனத்திற்கு நன்மை பயப்பதாக இருந்தாலும் சில நேரங்களில் வியாபாரத்தை அழிவுப் பாதைக்குச் செல்ல வழி வகுத்துவிடும்.
2. அவசரக்காரனுக்குப் புத்தி மட்டு என்ற பழமொழிக்கு இணங்க இச்செயலும் இருக்கும்.

## அரசு தேர்வு வினாக்கள்

### 1 மதிப்பெண்

**1. கீழ்க்கண்டவற்றுள் எது கூட்டுரு-சாரா நிறுவனமாகும்?** [BEQ; Govt. MQP - 2018]

அ. கூட்டுப் பங்கு நிறுமம் ஆ. தனியாள் வணிகம்
இ. அரசு நிறுமம் ஈ. கூட்டுறவு சங்கம்

**[விடை. (ஆ) தனியாள் வணிகம்]**

**2. பின்வருவனவற்றுள் எவை தனியாள் வணிகத்தின் சிறப்பியல்புகளில் இல்லை?** [June - 2019]

அ. தனி நபர் உரிமை ஆ. வரையறு பொறுப்பு
இ. முழு இலாபத்தையும் அனுபவிக்கும் உரிமை
ஈ. இரகசியம் காத்தல்

**[விடை. (ஆ) வரையறு பொறுப்பு]**

### 2 மதிப்பெண்கள்

**1. எந்த வியாபார அமைப்பை சட்ட சடங்கு முறை ஏதும் இன்றி துவக்கலாம்? அதன் பொருளை கூறுக.**

**விடை : தனியாள் வணிகம்** [BEQ; Govt. MQP - 2018]

**பொருள் :**

தனியாள் வணிகம் என்பது வியாபார அமைப்பு வடிவங்களில் ஒன்றாகும். தனிநபர் தன் மூலதனத்தைக் கொண்டு தனது சொந்தத் திறமை மற்றும் அறிவைப் பயன்படுத்தி வியாபார நடவடிக்கைகளைத் தனது சொந்தப் பொறுப்பில் மேலாண்மை செய்து பயன்பெறும் அமைப்பாகும்.

**2. ஒரு வணிக நிறுவனத்தின் சொத்துகள் ரூ. 1,00,000. ஆனால் அந்நிறுவனம் வெளியாட்களுக்கு தர வேண்டிய கடன் ரூ. 1,40,000. இதில் கூறப்பட்டுள்ளபடி அந்த பொறுப்பின் பெயர் என்ன? கடனீந்தோர் பின்வரும் நிறுவனங்களின் மீது என்ன நடவடிக்கை எடுக்க முடியும்?**

**(I) இது தனியாள் வணிகமாக இருந்தால்**

**(II) அது [அ] மற்றும் [ஆ] என்பவர்கள் சமமான கூட்டாளிகளாக இருந்தால்.**

[BEQ; Govt. MQP - 2018]

orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or
Available at All Leading Bookstores



விடை : (I) தனியாள் வணிகமாக இருந்தால் அது வரையறாப் பொறுப்பு.

கடனீந்தோர் எடுக்கும் நடவடிக்கை வியாபாரக் கடன்களைச் செலுத்தத் தொழிலின் சொத்துகள் போதுமானதாக இல்லையென்றால் தன் சொந்தச் சொத்துகளிலிருந்து கடனீந்தோருக்குச் செலுத்த வேண்டும்.

(II) கூட்டாளியாக இருந்தால் வரையறுக்கப்பட்ட பொறுப்பு

**3. பின்வருவனவற்றுள் எவை தனியாள் வணிகத்திற்கு பொருந்தும்? ஏன்?**

**[அ] மளிகை [ஆ] மருந்துக்கடை**

**[இ] கைத்தொழில் மையம் [ஈ] சட்ட நிறுமம்**

**[உ] இணையதள அமைப்பு.** [BEQ ; First Mid - 2018]

விடை : (i) மளிகைக்கடை, கைத்தொழில் மையம் இவை இரண்டும் தனியாள் வணிகத்திற்கு மிகவும் பொருத்தமானது.

(ii) ஏனெனில் இவ்விருத் தொழில்களுக்கும் குறைந்த அளவு முதலும், குறைந்த கல்வியறிவும் போதுமானது.

(iii) இவைகளைத் தொடங்குவதற்குக் கடினமான சட்டச் சடங்குகள் கிடையாது. ஓர் அதிகாரியிடம் உரிமம் பெற்றால் போதுமானது.

**4. தனியாள் வணிகத்தின் மூன்று பண்புகளை விவரி.**

[BEQ; QY. & HY. - 2018; Mar. - 2020]

விடை : (i) **தனிநபர் உரிமை :** இது **தனி நபரால்** நடத்தக் கூடிய அமைப்பாகும். தனியாள் வணிகர் ஒருவரே தேவையான மூலதனத்தைச் செலுத்துகிறார். தனியாள் வணிகத்தில் அவர் ஒருவரே உரிமையாளராக செயல்படுகிறார்.

(ii) **தலையீடற்ற செயல்பாடு மற்றும் விரைவான முடிவு :** தனியாள் வணிகர், தனது வியாபாரத்தில் தலையீடின்றிச் செயல்படுகிறார். அதனால் அவர் வணிகம் சார்ந்த முடிவுகளை விரைவாக எடுக்கிறார்.

(iii) **குறைந்த மூலதனம் :** தனியாள் வணிகத்தில் அவர் குறைந்த முதலீடு செய்தால் போதுமானது. தொழிலை தொடங்கலாம்.

**5. சுரேஷ் சொந்தமாக ஒரு தொழில் தொடங்குகிறார் அவருடைய தந்தையும், சகோதரரும் அவருக்கு உதவியாக உள்ளனர். இது எவ்வகை வியாபார அமைப்புஎனக் கூறி அதனைப் பற்றி குறிப்பு வரைக.** [May - 2022]

விடை : நிறுவனத்தின் இந்த அமைப்பு 'தனி உரிமையாளர்' என்று அழைக்கப்படுகிறது. தனியாள் வணிகம் என்பது வியாபார அமைப்பு வடிவங்களில் ஒன்றாகும். தனிநபர் தன் மூலதனத்தைக் கொண்டு தனது சொந்தத் திறமை மற்றும் அறிவைப் பயன்படுத்தி வியாபார நடவடிக்கைகளைத் தனது சொந்தப் பொறுப்பில் மேலாண்மை செய்து பயன்பெறும் அமைப்பாகும். தனிநபர் ஒருவர் தனியாகவோ அல்லது பணியாளர்களைக் கொண்டோ தொழிலை நடத்தலாம்.

## 3 மதிப்பெண்கள்

**1. சுதாகர் என்பவர் ஒரு நடுத்தர வர்க்க குடும்பத்தைச் சேர்ந்தவர். அவர் தன்னுடைய குடும்ப வருமானத்தைப் பெருக்குவதற்காக ஒரு மளிகைக் கடையை தொடங்க விரும்புகிறார். உங்களுடைய கருத்துப்படி அவர் எந்த வகையான வியாபாரத்தை தொடங்கலாம்? அதனுடைய நன்மைகளில் ஏதேனும் இரண்டினை எழுதுக.**

[BEQ; Govt. MQP - 2018]

விடை : சுதாகர் தனியாள் வணிகத்தை தொடங்கலாம்.

**நன்மைகள் :**

(i) **எளிதான அமைப்பு**

தனியாள் வணிகம் மட்டுமே வியாபார அமைப்பு வடிவங்களில் **சட்ட சடங்குமுறை ஏதுமின்றித் துவக்கலாம்.** ஒப்பந்தம், பதிவு போன்றவை இவ்வமைப்பிற்கு அவசியமில்லையாதலால் தொழில் முனைய விருப்பமுடையவர் எவரும் இத்தொழிலைத் தொடங்கலாம்.

(ii) **கடின உழைப்பிற்கு நேரடி ஊக்குவிப்பு**

முயற்சிக்கும் வெகுமதிக்கும் நேரடியாக தொடர்பிருப்பதால் தனியாள் வணிகர் இலாபம் முழுவதற்கும் அவரே உரிமையாளர் ஆகிறார். இது அவருடைய வியாபாரத்தை ஊக்குவித்து அயராது உழைக்கச் செய்கிறது.

**2. கோவிந்த் என்பவர் சொந்தமாகத் தொழில் தொடங்கினார். அவருடைய தந்தை கணக்குகளை பராமரிக்கவும், சகோதரர் மாலையில் வாடிக்கையாளர்களைப் பார்த்துக் கொள்ள உதவினர். கோவிந்த் தந்தைக்கும், சகோதரருக்கும் மாதச் சம்பளம் வழங்கினார். இது எவ்விதமான வியாபார அமைப்பு எனக் கூறுக. மேலும் அவ்வியாபார அமைப்பின் ஏதேனும் இரண்டு குறைபாடுகளைக் கூறுக.** [Mar. - 2019]

விடை : இது தனியாள் வணிக அமைப்பைச் சார்ந்தது.

**குறைபாடுகள் :**

(i) **அளவான முதல் :**

1. தனியாள் வணிகரின் மூலதனம் வரையறுக்கப்பட்டது. ஆகவே அவரின் வியாபார நடவடிக்கைகள் ஓர் எல்லையைத் தாண்டிச் செல்ல வாய்ப்புக் குறைவு.
2. அவரின் **கடன் பெறும் திறனும் குறைவாகவே இருப்பதாலும்** மற்றும் அதிகமான மூலதனம் தேவைப்படும் தொழிலைத் துவக்க முடியாமையும் குறைபாடுகளாக இருக்கின்றன.

(ii) **வரையறாப் பொறுப்பு :**

1. வியாபாரத்தின் உரிமையாளரின் பொறுப்பு என்பது வரையறுக்கப்படாதது.
2. கடனீந்தோர்கள் தமது கடன்களைத் தனியாள் வணிகரின் சொந்தச் சொத்துக்களிலிருந்தும் சரிக்கட்டிக் கொள்ள வாய்ப்பு இருப்பதால், தனிநபரின் பொறுப்பு வரையறாப் பொறுப்பாக உள்ளது.

www.Padasalai.Net www.surabooks.com
orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores



### 5 மதிப்பெண்கள்

**1.** **பாலு என்பவர் அரசு வேலையிலிருந்து ஓய்வு பெற்றவர். அவர் தற்போது ஓய்வு ஊதியம் பெறுபவர். அவர் தன்னுடைய மகனுக்கு எந்த ஒரு சரியான வேலையும் கிடைக்கவில்லையே என்று வருத்தப்பட்டுக் கொண்டிருக்கிறார். அவருக்கு ஏதாவது ஒரு வேலையை பார்த்து கொடுத்தாலும் அவர் அதில் நீண்ட நாள் இருப்பதில்லை. பாலுவின் நண்பரான சபாபதி வெற்றிகரமான ஒரு தொழில் நடத்தி வருகிறார். அவர் தன்னுடைய நண்பரின் மகனுக்கு தனியாள் வணிகம் ஒன்றை அமைத்துத் தருமாறு அறிவுறுத்துகிறார்.** [BEQ; Govt. MQP - 2018]

(i) **தனியாள் வணிகம் வரையறுக்க**

(ii) **தனியாள் வணிகத்தின் ஏதேனும் நான்கு சிறப்பியல்புகளை விளக்குக.**

**விடை :** (i) J.J.ஹேன்சன் என்பவரது கூற்றுப்படி, "தனியாள் வணிகம் என்பது வியாபார அலகின் ஒரு வகையாகும். அதில் ஒரு நபர் தனது சொந்த பொறுப்பில் மூலதனத்தை ஏற்படுத்தி நிறுவனத்தின் இடர்ப்பாடுகளையும் ஏற்றுக்கொண்டு வியாபாரத்தை மேலாண்மை செய்வதாகும்".

(ii) 1. **தனி நபர் உரிமை :** இது தனி நபரால் நடத்தக் கூடிய அமைப்பாகும். தனியாள் வணிகர் ஒருவரே தேவையான மூலதனத்தைச் செலுத்துகிறார். தனியாள் வணிகத்தில் அவர் ஒருவரே உரிமையாளராக இல்லாவிட்டாலும் அதன் அமைப்பு முழுவதையும் அவரே கட்டுப்படுத்துகிறார்.

2. **தலையீடற்ற செயல்பாடு மற்றும் விரைவான முடிவு :** தனியாள் வணிகர் தனது வியாபாரத்தில் தலையீடின்றிச் செயல்படுகிறார். தனியாள் வணிகர் தனது அறிவுத்திறன் மற்றும் பட்டறிவின் மூலம் குறுக்கீடின்றிச் செயல்படுகிறார். தனி உரிமையாளர் உடனடியாகவும் முடிவு எடுக்கிறார்.

3. **வரையறாப் பொறுப்பு :** தனியார் வணிகரின் பொறுப்பு வரையறுக்கப்படாதது. அதன் விளைவாக அவரது வியாபாரக் கடன்களை செலுத்த தொழிலின் சொத்துகள் போதுமானதாக இல்லையென்றால் தன் சொந்த சொத்துகளை பறிமுதல் செய்ய கடனீந்தோருக்கு உரிமை உண்டு.

4. **முழு இலாபத்தையும் அனுபவித்தல் :** அந்நிறுவனத்தின் முழு இலாபத்தையும் அனுபவிக்கும் உரிமை தனியாள் வணிகருக்கு உண்டு. தனது கடின உழைப்பின் மூலம் ஈட்டிய இலாபத்தின் உந்துதலால் அவர் தனது வணிகத்தை மேலும் விரிவாக்கம் செய்கிறார்.

## கூடுதல் வினாக்கள்

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக

**1 மதிப்பெண்**

**1.** **தனியார் வணிகத்தில் முடிவு எடுக்கப்படுவது**

அ. விரைவாக ஆ. தாமதமாக
இ. கலந்து ஆலோசித்து ஈ. எதுவுமில்லை

**[விடை. (அ) விரைவாக]**

**2.** **தனியாள் வணிகத்தில் வியாபார இரகசியங்களை ........... இயலும்.**

அ. காக்க இயலும் ஆ. காக்க இயலாது
இ. எதுவுமில்லை ஈ. அனைத்தும்

**[விடை. (அ) காக்க இயலும்]**

**3.** **தனியாள் வணிக்கத்தைப் பதிவு செய்ய வேண்டிய ...........**

அ. தேவையில்லை ஆ. கட்டாயமாக்கப்பட்டது
இ. விருப்பத்திற்குட்பட்டது ஈ. எதுமில்லை

**[விடை. (அ) தேவையில்லை]**

**4.** **நெகிழ்வுத் தன்மை உடைய வணிகம்** [BEQ]

அ. தனியாள் வணிகம் ஆ. கூட்டுப்பங்கு நிறுமம்
இ. கூட்டாண்மை ஈ. கூட்டுறவு சங்கம்

**[விடை. (அ) தனியாள் வணிகம்]**

**5.** **ஒரு நபர் மட்டும் முதலீடு செய்து நடத்தும் வணிகம்**

அ. கூட்டாண்மை ஆ. கூட்டுப்பங்கு நிறுமம்
இ. தனியாள் வணிகம் ஈ. கூட்டுறவுச் சங்கம்

**[விடை. (இ) தனியாள் வணிகம்]**

### சிறுவிடை வினாக்கள் 3 மதிப்பெண்கள்

**1.** **தனியாள் வணிகத்தில் இரகசியத்தன்மை எப்படி காப்பாற்ற இயலும்?**

**விடை :** (i) தனியாள் வணிகத்தில் அவர் ஒருவரே உரிமையாளராதலால் தனது தொழில் பற்றி ரகசியங்களை எளிதாகக் காப்பாற்றலாம்.

(ii) அவர், தொழில் இரகசியத்தை வெளியே கூறினால் தனக்கு நட்டம் ஏற்படும் என்ற காரணத்தினால் **வியாபார இரகசியம் நன்கு காக்கப்படும்.**

**2.** **தனியாள் வணிகம் - வரைவிலக்கணம் தருக.**

**விடை :** வீலர் என்பவரின் கூற்றுப்படி, "தனியாள் வணிகம் என்பது வியாபார அமைப்பின் ஒரு வடிவமாகும். அது தனி ஒரு மனிதனுக்குச் சொந்தமானதும் கட்டுப்பாட்டுக்குட்பட்டதுமான வியாபார அமைப்பாகும். அவர் தன் சொத்தை வணிக வெற்றி அல்லது தோல்வி என்ற துணிகரச் செயலில் ஈடுபடுத்தி இலாபத்தைப் பெறுகிறார்".

☆ ☆ ☆

orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or
Available at All Leading Bookstores

# அலகு 3 சேவைத் தொழில்கள் I

# அத்தியாயம் 10 இந்திய ரிசர்வ் வங்கி

## பொருளடக்கம்


10.1. சேவைத் தொழிலின் தேவை
10.2. வங்கிச் சேவை
10.3. இந்திய வங்கிகள் – ஓர் வரலாற்றுப் பின்னணி
10.4. வங்கி இலக்கணம்
10.5. மைய வங்கி – இலக்கணம்
10.6. இந்திய ரிசர்வ் வங்கியின் தோற்றம்
10.7. இந்திய ரிசர்வ் வங்கியின் கட்டமைப்பு
10.8. இந்திய ரிசர்வ் வங்கியின் பணிகள்


www.Padasalai.Net
www.surabooks.com

## பயிற்சி

### I. சரியான விடையைத் தேர்ந்தெடு

**1. ரூபாய் நோட்டுகளை வெளியிடுவதற்கு எந்த வங்கிக்கு அதிகாரம் உள்ளது.** [June - 2019; Sep. - 2021]

அ. மைய வங்கி
ஆ. வணிக வங்கி
இ. கூட்டுறவு வங்கிகள்
ஈ. வெளிநாட்டு வங்கிகள் **[விடை. (அ) மைய வங்கி]**

**2. இந்திய மைய வங்கி என்பது** [Mar. - 2020; CRT - 2022]

அ. பி.என்.பி. ஆ. எஸ்.பி.ஐ.
இ. ஐ.சி.ஐ.சி.ஐ ஈ. ஆர்.பி.ஐ

**[விடை. (ஈ) ஆர்.பி.ஐ]**

**3. இந்திய ரிசர்வ் வங்கி ஏப்ரல் 1, .................. ஆண்டு முதல் தன் பணிகளைத் தொடங்கியது.** [BEQ; QY & HY. - 2018; Sep. - 2020]

அ. 1936 ஆ. 1935 இ. 1934 ஈ. 1933

**[விடை. (ஆ) 1935]**

**4. வங்கியர்கள் பணத்தை கையாள்பவர்கள் மட்டுமல்ல ........... க்கு வழிகாட்டுபவர்களாகவும் இருக்கிறார்கள்.**

அ. பொருளாதார வளர்ச்சி
ஆ. வர்த்தக வளர்ச்சி
இ. தொழில் வளர்ச்சி
ஈ. சேவை வளர்ச்சி

**[விடை. (அ) பொருளாதார வளர்ச்சி]**

**5. கீழ்க்கண்டவற்றில் எது மைய வங்கியின் பணி அல்ல?**

அ. ஒரு நாட்டின் வங்கி அமைப்புகளுக்கு வழிகாட்டுதல் மற்றும் வங்கி அமைப்பு முறைகளை ஒழுங்குபடுத்துதல்
ஆ. பொது மக்களுடன் தொடர்பு கொள்ளுதல்
இ. அரசாங்க வங்கியாளராக நடத்தல்
ஈ. மற்ற வங்கிகளின் வைப்பு கணக்குகளைப் பராமரித்தல்

**[விடை. (ஆ) பொது மக்களுடன் தொடர்பு கொள்ளுதல்]**



orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or
Available at All Leading Bookstores



## II. குறுவிடை வினாக்கள்

**1. சேவை தொழில்களில் உள்ள சேவைகள் யாவை?**

**விடை :** (i) கல்வி, மருத்துவம், சுகாதாரம் போன்ற சேவைத் தொழில்கள் பல நூற்றாண்டுகளாக இருந்து வருகின்றன.

(ii) உலக வர்த்தகத்தில் சேவைத் தொழில்கள் 1970ஆம் ஆண்டிற்குப் பின்னரே அதிக முக்கியத்துவம் பெற்று வருகிறது.

(iii) உலகப் பொருளாதாரத்தின் மிகவும் ஆற்றல் வாய்ந்த துறையாகச் சேவைத் துறை உருவாகியுள்ளது.

**2. வங்கியின் பொருளை எழுதுக.**

**விடை :** 1949ஆம் ஆண்டின் வங்கி ஒழுங்குமுறைச் சட்டத்தின்படி, "முதலீடு செய்வதற்கோ, கடன் வழங்குவதற்கோ, கேட்ட உடன் அல்லது காசோலை, வரைவோலை அல்லது பணவிடை மற்றுமுள்ள முறைகளில் திரும்பக் கொடுப்பதற்கோ, பொதுமக்களிடமிருந்து வைப்பு தொகைகளைப் பெற்றுக் கொள்ளும் செயல் வங்கியியல்" எனப்படும்.

**3. மைய வங்கி பற்றிச் சுருக்கமாக விளக்குக.**

[QY. & HY. - 2018, HY. - 2019]

**விடை :** "ஒரு நாட்டின் பண மற்றும் வங்கிக் கட்டமைப்பின் உச்ச நிலையமாகவும், தேசியப் பொருளாதார நலனுக்காகவும் சிறந்த முறையில் செயல்படும் வங்கி அந்த நாட்டின் மைய வங்கி எனப்படும்", என டிகாக் அவர்கள் வரைவிலக்கணம் வகுத்துள்ளார்.

## III. சிறுவிடை வினாக்கள்

**1. இந்திய ரிசர்வ் வங்கியின் பணிகள் யாவை? [ஏதேனும் 3]**

**விடை :** இந்திய ரிசர்வ் வங்கியின் பணிகளை மூன்று தலைப்புகளில் தொகுக்கலாம்.

1. தலைமை மற்றும் மேற்பார்வைப் பணிகள்
2. பாரம்பரியப் பணிகள் மற்றும்
3. மேம்பாட்டுப் பணிகள்

**2. இந்திய ரிசர்வ் வங்கியின் தோற்றம் பற்றிக் கூறுக.**

**விடை :** (i) இம்பீரியல் பாங்க் ஆப் இந்தியா பண வெளியீடு மற்றும் மைய வங்கிக்கான பிற கடமைகளை ஆற்றி வந்தது.

(ii) 1926 ஆம் ஆண்டில் ஹில்டன் – யங் ஆணையம் அல்லது இந்திய நாணய மற்றும் நிதியியல் தொடர்பான இராயல் ஆணையம் ஒரு மைய வங்கி உருவாக்கப் பரிந்துரைத்தது.

(iii) அதன் விளைவாக இந்திய ரிசர்வ் வங்கிச் சட்டம் 1934-இல் உருவாக்கப்பட்டு இந்திய ரிசர்வ் வங்கி ஏப்ரல் 1, 1935 முதல் செயல்பாட்டிற்கு வந்தது.

(iv) இந்திய ரிசர்வ் வங்கியின் ₹5 கோடி மூலதனம் ₹100 மதிப்புள்ள முழுவதும் செலுத்தப்பட்ட பங்குகளால் உருவாக்கப்பட்டது.

(v) அதன் தலைமை அலுவலகம், கொல்கத்தாவில் இருந்தது பின்னர் 1937ல் மும்பைக்கு மாற்றப்பட்டது.

(vi) இந்திய ரிசர்வ் வங்கி 1947வரை, பர்மா நாட்டிற்கும், ஜூன் 1948 வரை பாகிஸ்தான் நாட்டிற்கும் மைய வங்கியாகச் செயல்பட்டது.

**3. இந்திய ரிசர்வ் வங்கியின் நிர்வாகத்தில் ஈடுபட்டுள்ள நபர்கள் யார்?** [QY. - 2018; CRT & Aug. - 2022]

**விடை :** இந்திய ரிசர்வ் வங்கி மத்திய இயக்குநர்கள் வாரியத்தால் நிர்வகிக்கப்படுகிறது. இந்த வாரியத்தின் 21 உறுப்பினர்களும் இந்திய அரசால் நியமிக்கப்படுவார்கள்.

அவர்கள் பற்றிய விவரம்,

(i) ஒரு ஆளுநர் மற்றும் நான்கு துணைநிலை ஆளுநர்கள் நான்கு ஆண்டுகளுக்குப் பதவி வகிக்கும் வகையில் நியமிக்கப்படுவார்கள்.

(ii) பல்வேறு துறைகளில் இருந்து பத்து இயக்குநர்கள்.

(iii) இரண்டு அரசு அதிகாரிகள்.

(iv) நான்கு இயக்குநர்கள் (வட்டார வாரியங்களில் இருந்து ஒவ்வொருவர் ).

## IV. பெருவிடை வினாக்கள்

**1. இந்திய ரிசர்வ் வங்கியின் பல்வேறு பணிகளை விரிவாக வகைப்படுத்துக. (ஏதேனும் 5)**

[QY. - 2018 & 2019; Mar. - 2020; CRT - 2022]

**விடை :** (i) **தலைமை மற்றும் மேற்பார்வை பணிகள் :**

1. உலக நிதி நிறுவனங்களில் இந்தியாவின் பிரதிநிதி.
2. இந்திய வங்கிகளின் கட்டமைப்பினை ஒழுங்குபடுத்துதல் மற்றும் மேற்பார்வையிடுதல்.
3. பணவியல் உச்சநிலை அதிகாரி.
4. பொருளாதார அளவுருக்களை கூர்ந்து கண்காணித்தல்.
5. புதிய சவால்களுக்கு உடனடியாகப் பதிலளிப்பது.

(ii) **பாரம்பரிய பணிகள் :**

1. அரசின் வங்கியர் மற்றும் நிதி ஆலோசகராகச் செயல்படுதல்.
2. ரூபாய் நோட்டுகளை அச்சிட்டு வெளியிடுவதில் முற்றுரிமை.
3. வங்கியர்களின் வங்கியர்
4. கடன் மற்றும் பணப்புழக்கத்தின் கட்டுப்பாட்டாளர்.
5. இறுதிநிலைக் கடன் ஈவோர்.
6. தீர்வக அமைப்பு சேவைகள்.
7. அந்நியச் செலாவணி இருப்புகளின் பாதுகாப்பாளர்.
8. அந்நியச் செலாவணி விகிதத்தின் பராமரிப்பு.
9. நம்பகத்தன்மையுள்ள தகவல் சேகரிப்பு மற்றும் வெளியீடு.

(iii) **மேம்பாட்டுப் பணிகள் :**

1. பொதுமக்களிடையே வங்கி பழக்கங்களை வளர்ப்பது.
2. குறை தீர்வு நடவடிக்கைகள்.

www.Padasalai.Net www.surabooks.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores

அத்தியாயம் 11

# வங்கிகளின் வகைகள்

## பொருளடக்கம்

11.1. அறிமுகம்
11.2. வங்கிகளின் வகைகள்

## பயிற்சி

### I. சரியான விடையைத் தேர்வு செய்க

**1. கீழ்க்கண்டவற்றில் எது தொழிற்துறை வங்கி அல்ல?** [BEQ; Govt. MQP - 2018]

அ. ICICI ஆ. HSBC
இ. SIDBI ஈ. IDBI

[விடை. (ஆ) HSBC]

**2. உள்ளூர் பகுதி வங்கிகள் ஊக்குவித்து வருவது** [QY. - 2019]

அ. கிராம சேமிப்பு
ஆ. வணிகச் சேமிப்பு
இ. தொழிற்துறை வளர்ச்சி
ஈ. விவசாய வளர்ச்சி

[விடை. (அ) கிராம சேமிப்பு]

**3. வெளிநாட்டு வங்கிகள் தங்கள் செயல்பாடுகளை இந்தியாவில் ஆரம்பித்த ஆண்டு.** [QY. - 2019]

அ. 1978 ஆ. 1979
இ. 1980 ஈ. 1981

[விடை. (இ) 1980]

### II. குறுவிடை வினாக்கள்

**1. வணிக வங்கிகளின் பொருள் தருக.**

விடை : வணிக வங்கிகள் பொதுமக்களிடமிருந்து வைப்புகளைப் பெற்று, இலாபம் சம்பாதிப்பதற்காக வர்த்தகர்கள், தனிநபர்கள் ஆகியோருக்கும் விவசாயம், தொழிற்சாலைகள், போக்குவரத்து போன்ற துறைகளுக்கும் கடன்களை வழங்குகின்றன.
(எ.கா.) ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா, கரூர் வைஸ்யா வங்கி.

**2. தொழிற்துறை வங்கிகள் பற்றி நீவிர் அறிவது யாது?**

விடை : தொழில்களுக்கான நிதிகளைப் பெரிய அளவில் வழங்குவது, அவைகளின் விரிவாக்கம், நவீனமயமாக்கல் ஆகியவற்றிற்கு நிதி அளிப்பது போன்ற சேவைகளைச் செய்வது வளர்ச்சி வங்கிகள் எனும் தனி வகை வங்கிகள் ஆகும். மேலும் அவை தொழிற்துறை வங்கிகள் எனவும் அழைக்கப்படுகின்றன.
(எ.கா.) இந்தியத் தொழில் நிதிக்கழகம், முத்ரா வங்கி.

**3. வெளிநாட்டு வங்கிகள் என்றால் என்ன?** [BEQ; QY. - 2018; Mar. & HY. - 2019]

விடை : (i) வெளிநாட்டில் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தையும், இந்தியாவில் கிளை அலுவலகத்தையும் கொண்ட வங்கிகள் வெளிநாட்டு வங்கிகள் என்று அழைக்கப்படுகின்றன.
(ii) இந்த வங்கிகள் பெரிய நகரங்களில் மற்றும் துறைமுக நகரங்களில் அமைக்கப்பட்டு, பன்னாட்டு நிறுவனங்களுக்குச் சேவை புரிகின்றன.
(iii) (எ.கா.) பாங்க் ஆப் அமெரிக்கா – அமெரிக்கா. பார்க்லேஸ் பாங்க் – இங்கிலாந்து

### III. சிறுவிடை வினாக்கள்

**1. உள்ளூர் பகுதி வங்கிகள் பற்றிச் சிறு குறிப்பு வரைக. இரண்டு உதாரணங்களைத் தருக.**

விடை : (i) உள்ளூர் பகுதி வங்கி (LAB) திட்டம் ஆகஸ்ட் 1996 இல்இந்திய ரிசர்வ் வங்கியால் அறிமுகப்படுத்தப்பட்டது.
(ii) கிராமப்புறம் மற்றும் சிறு நகர்ப்புறப் பகுதிகளில் சிறிய தனியார் வங்கிகளாக உள்ளூர் பகுதி வங்கிகள் அமைக்கப்படுகின்றன.
(iii) ஒவ்வொரு வங்கியும் அருகில் உள்ள இரண்டு அல்லது மூன்று மாவட்டங்களை இணைத்துச் சேவை செய்கிறது.



orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or
Available at All Leading Bookstores



(எ.கா.) (i) கரையோர உள்ளூர் பகுதி வங்கி – விஜயவாடா ஆந்திரப் பிரதேசம்.

(ii) கிருஷ்ணா பீமா ஸ்ம்ருதி உள்ளூர் பகுதி வங்கி – மஹபூப் நகர், ஆந்திரப் பிரதேசம்.

**2. வட்டாரக் கிராமிய வங்கிகளின் நோக்கங்கள் யாவை?** [BEQ; HY. - 2018; June - 2019]

**விடை :** (i) கூட்டுறவுச் சங்கங்களோடு சேர்ந்து கிராமப்புறப் பொருளாதாரத்தை மேம்படுத்தச் செய்வதாகும்.

(ii) கிராமப்புற பொதுமக்களிடமிருந்து வைப்புகளைத் திரட்டி கிராமப்புற கைவினைஞர்களுக்கும், சிறிய தொழில் முனைவோருக்கும், விவசாயிகளுக்கும் கடனுதவி அளிக்கிறது.

(iii) இவ்வங்கிகள் **வேளாண்மை** மற்றும் **கிராம மேம்பாட்டுக்காக** தேசிய வங்கிகளால் ஒழுங்குப்படுத்தப்படுகின்றன.

## IV. பெருவிடை வினாக்கள்

**1. பல்வேறு வகையான வங்கிகளைச் செயல்பாடுகளின் அடிப்படையில் வகைப்படுத்தி உதாரணம் தருக. (ஏதேனும் 5)**

**அல்லது**

**வங்கிகள் பல வகைப்படும் பின்வரும் வங்கிகளை உதாரணத்துடன் சுருக்கமாக விளக்குக.**

**(i) வணிக வங்கிகள்** [BEQ; Govt. MQP - 2018]

**(ii) வளர்ச்சி வங்கிகள்**

**(iii) கூட்டுறவு வங்கிகள்**

**(iv) வெளிநாட்டு வங்கிகள்**

**விடை : வங்கிகளின் வகைகள் :**

வங்கிகளை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

(i) செயல்பாடுகளின் அடிப்படையில்

(ii) இந்திய ரிசர்வ் வங்கியால் வழங்கப்பட்ட தகுதி அடிப்படையில்

(iii) உரிமையாளர் முறை அடிப்படையில்

**செயல்பாடுகளின் அடிப்படையில் வங்கிகளை வகைப்படுத்தல்:**

(i) **மைய வங்கி :** ஒரு நாட்டின் பணம் மற்றும் வங்கிக் கட்டமைப்பின் உச்சநிலையமாகவும், தேசியப் பொருளாதார நலனுக்காகவும் சிறந்த முறையில் செயல்படும் வங்கி அந்த நாட்டின் மைய வங்கி எனப்படும். இந்தியாவில், இந்திய ரிசர்வ் வங்கி மைய வங்கியாகச் செயல்படுகிறது.

(ii) **வணிக வங்கிகள் :** இவ்வகை வங்கிகள் பொதுமக்களிடமிருந்து வைப்புகளைப் பெற்று, இலாபம் சம்பாதிப்பதற்காக வர்த்தகர்கள், தனிநபர்கள் ஆகியோருக்கும் விவசாயம், தொழிற்சாலைகள் போக்குவரத்து போன்ற துறைகளுக்கும் கடன்களை வழங்குகின்றன. **(எ.கா.)** ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா, கரூர் வைஸ்யா வங்கி, ஸ்டாண்டர்டு சார்ட்டர்டு வங்கி.

(iii) **வளர்ச்சி வங்கிகள் :** தொழில்களுக்கான நிதிகளைப் பெரிய அளவில் வழங்குவது, அவைகளின் விரிவாக்கம், நவீனமயமாக்கல் ஆகியவற்றிற்கு நிதி அளிப்பது போன்ற சேவைகளைச் செய்வது வளர்ச்சி வங்கிகள் எனும் தனி வகை வங்கிகள் ஆகும்.

**(எ.கா.)** இந்தியத் தொழில் நிதிக் கழகம் IFCI, இந்தியச் சிறு தொழில்கள் வளர்ச்சி வங்கி SIDBI, முத்ரா வங்கி (குறுந்தொழில் வளர்ச்சிக்காக).

(iv) **கூட்டுறவு வங்கிகள் :** இந்தியாவில் உள்ள அனைத்துக் கூட்டுறவு வங்கிகளும் அதன் வாடிக்கையாளர்கள் அல்லது அதன் உறுப்பினர்களாக உள்ள விவசாயிகள், சிறிய வர்த்தகர்கள் போன்றவர்களுக்குச் சொந்தமானது. இந்தியக் கூட்டுறவு வங்கிகள் நகரப்புறங்களை அல்லது கிராமப்புறங்களை அடிப்படையாகக் கொண்டவை.

**(எ.கா.)** தேசிய வேளாண் கூட்டுறவுச் சந்தைப்படுத்தல் கூட்டமைப்பு இந்தியா லிமிடெட், தமிழ்நாடு மாநிலத் தலைமை கூட்டுறவு வங்கி – தலைமை அலுவலகம் சென்னை.

(v) **வெளிநாட்டு வங்கிகள் :** வெளிநாட்டில் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தையும் இந்தியாவில் கிளை அலுவலகத்தையும் கொண்ட வங்கிகள் வெளிநாட்டு வங்கிகள் என்று அழைக்கப்படுகின்றன.

**(எ.கா.)** பாங்க் ஆப் அமெரிக்கா – அமெரிக்கா, பார்க்லேஸ் பாங்க் – இங்கிலாந்து.

(vi) **வட்டாரக் கிராமிய வங்கிகள் :** வட்டார கிராமிய வங்கிச் சட்டம் 1976 இன் படி மத்திய அரசு, மாநில அரசு மற்றும் ஒரு பங்களிப்பு வங்கி ஆகியோர் கூட்டாக இணைந்து இது அமைக்கப்படுகிறது. 50: 15:35 என்ற விகிதத்தில் இவர்கள் பங்கு மூலதனம் வழங்குகின்றனர்.

**(எ.கா.)** பாண்டியன் கிராம வங்கி – மதுரை, பல்லவன் கிராம வங்கி – சேலம்.

(vii) **சிறப்பு வங்கிகள் :** அரசாங்கத்தால் சிறப்பு நோக்கங்களுக்காகச் சில வங்கிகள் உருவாக்கப்படுகின்றன. இந்திய ஏற்றுமதி இறக்குமதி வங்கிச் சட்டம் 1981 இன் படி இந்திய ஏற்றுமதி இறக்குமதி வங்கி உருவாக்கப்பட்டது. அதன் முக்கிய நோக்கம் இந்திய வணிகர்களின் சர்வதேச வர்த்தகத்தை மேம்படுத்துவதாகும்.

**(எ.கா.)** இந்திய ஏற்றுமதி இறக்குமதி வங்கி– EXIM வங்கி, தேசிய வீட்டு வசதி வங்கி (NHB).

www.Padasalai.Net www.surabooks.com
orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores



**2. உரிமையாளர்கள் முறை அடிப்படையில் வங்கிகளை வகைப்படுத்துக.**

விடை : 1. **அரசு வங்கிகள் அல்லது பொதுத்துறை வணிக வங்கிகள் :**

எந்த ஒரு வங்கியின் பங்குகளில் 51 **சகவிகிதத்திற்கும்** குறைவில்லாத பங்குகளை அரசு பெற்றிருந்தால், அது அரசு வங்கிகள் அல்லது பொதுத்துறை வணிக வங்கிகள் என்று அழைக்கப்படுகின்றன.

**(எ.கா.)** 1. பாரத ஸ்டேட் வங்கி (SBI)
2. இந்தியத் தொழில் மேம்பாட்டு வங்கி (IDBI)

2. **பொதுக் கூட்டுரு வகை வங்கிகள் :**

ஒவ்வொரு பொதுக் கூட்டுரு வங்கியும், பாராளுமன்றத்தின் தனிச் சட்டத்தால் உருவாக்கப்பட்டு இந்திய அரசுக்கு முழு சொந்தமானதாக உள்ளன.

**(எ.கா.)** IFCI, SIDBI, EXIM வங்கி

3. **தனியார் துறை வணிக வங்கிகள் :**

1. தனி நபர்களுக்குச் சொந்தமான அனைத்து வங்கி நிறுவனங்களும் தனியார் துறை வணிக வங்கிகள் என்று அழைக்கப்படுகின்றன.
2. அனைத்துக் கூட்டுறவு வங்கிகளும், அதன் உறுப்பினர்களான பொதுமக்களுக்குச் சொந்தமானவை.

## அரசு தேர்வு வினாக்கள்

### 1 மதிப்பெண்

**1. பாரத ஸ்டேட் வங்கி என்பது** [BEQ; QY. - 2018]

அ. பி.என்.பி
ஆ. எஸ்.பி.ஐ.
இ. ஐ.சி.ஐ.சி.ஐ
ஈ. ஆர்.பி.ஐ

**[விடை. (ஆ) எஸ்.பி.ஐ.]**

**2. முத்ரா வங்கி ............ வங்கிக்கு உதாரணம்** [HY. - 2019]

அ. வெளிநாடு
ஆ. வளர்ச்சி
இ. கூட்டுறவு
ஈ. வணிக

**[விடை. (ஆ) வளர்ச்சி]**

### 2 மதிப்பெண்கள்

**1. 2013 ஆம் ஆண்டு நிறுமச் சட்டத்தின் சிறப்பம்சங்கள் இரண்டினை கூறுக.** [BEQ; First Mid - 2018]

விடை : **2013ஆம் ஆண்டு நிறுமச்சட்டத்தின் சிறப்பம்சங்கள் :**

(i) 1956 ஆம் ஆண்டுடைய 658 பிரிவுகளுடன் உள்ள நிறுமச்சட்டத்திற்குப் பதிலாக 470 பிரிவுகளுடன் உள்ள 2013 ஆம் ஆண்டு நிறுமச் சட்டம் உள்ளது.

(ii) 2013 ஆம் ஆண்டின் நிறுமச்சட்டம் ஒரு விரிவான ஆலோசனை வழங்கவும் கற்றுக் கொள்ளத்தக்கதுமான நடைமுறைகளையும் மத்திய அரசுக்கு வழங்குகிறது.

## கூடுதல் வினாக்கள்

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக

### 1 மதிப்பெண்

**1. கீழ்க்கண்டவற்றில் எது வளர்ச்சி வங்கி அல்ல?**

அ. இந்தியத் தொழில் நிதிக் கழகம்
ஆ. இந்தியச் சிறு தொழில்கள் வளர்ச்சி வங்கி
இ. முத்ரா வங்கி
ஈ. ஸ்டாண்டர்டு சார்ட்டர்டு வங்கி

**[விடை. (ஈ) ஸ்டாண்டர்டு சார்ட்டர்டு வங்கி]**

**2. தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டம்**

அ. 1983
ஆ. 1980
இ. 1986
ஈ. 1982

**[விடை. (அ) 1983]**

### குறுவிடை வினாக்கள் — 2 மதிப்பெண்கள்

**1. தனியார்துறை வங்கிகள் என்றால் என்ன?**

விடை : (i) தனிநபர்களுக்குச் சொந்தமான அனைத்து வங்கி நிறுவனங்களும் தனியார் துறை வங்கிகள் என அழைக்கப்படுகின்றன.

(ii) (எ.கா.) தமிழ்நாடு மெர்கன்டைல் பாங்க், லட்சுமி விலாஸ் பாங்க், கரூர் வைஸ்யா பாங்க்.

**2. வணிக வங்கி தொடர்பாளர்கள் பற்றிச் சுருக்கமாக விளக்குக.**

விடை : (i) வங்கித் தொடர்பாளர்கள் மாதிரி முறையானது 2006 இல் வங்கி மூலம் சேவைகளை ஒவ்வொரு இல்லந்தோறும் வழங்குவதற்காக அறிமுகப்படுத்தப்பட்டது.

(ii) அரசு சார்பற்ற நிறுவனங்கள் அல்லது தனிநபர்கள் அல்லது முன்னாள் இராணுவத்தினர் போன்றோர் வங்கி தொடர்பாளர்களாக விண்ணப்பிக்க முடியும்.

www.Padasalai.Net
www.surabooks.com
orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or
Available at All Leading Bookstores



## சிறுவிடை வினாக்கள் 3 மதிப்பெண்கள்

**1. நாட்டுப்புற வங்கியர் என்பவர் யார்?**

விடை : (i) இந்தியாவின் ஆரம்பகால வங்கியர் நாட்டுப்புற வங்கியரே.

(ii) குறிப்பிட்ட சில இனத்தைச் சார்ந்தவர்கள் வட்டிக்குக் கடன் கொடுக்கும் தொழிலைச் செய்து வந்தனர்.

(iii) (எ.கா.) தமிழ்நாட்டில் – செட்டியார்கள், மும்பையில் – மார்வாடிஸ், ஷ்ராப்புகள்.

(iv) இவைகள் இந்திய ரிசர்வ் வங்கியால் வங்கியர்கள் என அங்கீகரிக்கப்படவில்லை.

(v) எனினும் மக்கள் இவர்களிடம் கடன் பெறுவதையே விரும்புகின்றனர்.

(vi) காரணம்

(அ) எந்த நேரத்திலும் பணம் பெறலாம்

(ஆ) குறைந்த அளவு சட்ட சடங்குகள்

(இ) நேரடியாக மற்றும் உடனடியான அணுகுமுறை.

**2. விவசாய மற்றும் கூட்டுறவு வங்கிகளின் பயன்களைக் குறிப்பிடுக.**

விடை : (i) உறுப்பினர்களுக்கான சேவையைக் கிராமப்புற மற்றும் விவசாய வளர்ச்சிக்காக வழங்குவது கூட்டுறவுச் சங்கங்களின் முக்கிய நோக்கமாகும்.

(ii) கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதியளிப்பதற்காக மாநில அரசாங்கங்களுக்கு நிதிகள் மற்றும் மானியங்களை வழங்குகிறது.

(iii) நீர்ப்பாசனச் சேமிப்பு, நீர்ப்பாசன முறை, வேளாண்மைக் காப்பீடு, கிராமப்புறத் துப்புரவு போன்ற திட்டங்களில் (NCDC) கவனம் செலுத்துகிறது.

☆☆☆

www.surabooks.com
www.Padasalai.Net

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or
Available at All Leading Bookstores

# அலகு 4 சேவைத் தொழில்கள் II

# அத்தியாயம் 16 இந்தியாவில் வளர்ந்து வரும் சேவைத் தொழில்கள்

## பொருளடக்கம்


16.1. தனி உரிமையியல்
16.2. ஏட்டுக்கடன் முகமை
16.3. பெயர்ச்சியியல்
16.4. புறத் திறனீட்டல்
16.5. மின்னணு வணிகம்


## பயிற்சி

### I. சரியான விடையைத் தேர்ந்தெடு

**1. எந்த ஒரு தொடர்ச்சியான உறவு வணிகத்திற்கான உரிமத்தை வழங்குகிறது, பயிற்சி அளிக்கிறது. கிளை விற்பனை செய்வதை கருத்தில் கொள்வது....... என அழைக்கப்படுகிறது.**

அ. தனி உரிமையியல் ஆ. ஏட்டுக்கடன் முகமை
இ. அளிப்புத் தொடர் மேலாண்மை
ஈ. பரிமாற்றம் **[விடை. (அ) தனி உரிமையியல்]**

**2. மின்னணு வலைப்பின்னல்கள் மூலம் பொருட்களை வாங்குதல் மற்றும் விற்பனை செய்தல்............ என அழைக்கப்படுகிறது.**

[BEQ; Mar. - 2019; Mar. & Sep. - 2020; Aug. - 2022]

அ. மின்னணு வணிகம் ஆ. இணையதளம்
இ. வலைதளம் ஈ. வர்த்தகம்

**[விடை. (அ) மின்னணு வணிகம்]**

**3. உற்பத்தியாளரிடமிருந்து பொருட்களை நுகர்வோருக்கு எடுத்துச் செல்லும் செயலுக்கு..............என பெயர்.**

அ. போக்குவரத்து ஆ. பெயர்ச்சியியல்
இ. வழங்கல் முறை ஈ. சந்தையியல்

**[விடை. (அ) போக்குவரத்து]**

**4. பெயர்ச்சியியலின் முக்கிய நன்மை.**

[BEQ; HY. - 2018; June & HY. - 2019]

அ. உற்பத்தி மேம்பாடு
ஆ. செலவுகளை குறைத்தல்
இ. இலாபம் ஈட்டுதல் ஈ. பண்டகக்காப்பு

**[விடை. (ஆ) செலவு குறைப்பு]**

**5. புற ஒப்படைப்பின் முக்கிய நன்மை...........**

[QY. - 2019; Mar. - 2020]

அ. உற்பத்தித் திறன் ஆ. செலவு குறைப்பு
இ. திறன் ஈ. அலகுகள்

**[விடை. (ஆ) செலவு குறைப்பு]**



orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or
Available at All Leading Bookstores



## II. குறுவிடை வினாக்கள்

**1. தனி உரிமம் பெற்றவர் என்பவர் யார்?** **[Mar. & HY. -2019]**

விடை : ஒரு வியாபார நிறுவனத்தின் வணிகக் குறியீட்டை சட்டப்படி பயன்படுத்த உரிமம் பெற்ற ஒரு தனி நபரை தனி உரிமம் பெற்றவர் என அழைக்கிறோம்.

**2. தனி உரிமையியல் இரண்டு தீமைகளைக் கூறுக.**

(i) தனி உரிமம் கட்டணம் **[BEQ; QY. - 2018]**

(ii) நிலையான உரிமைத்தொகை செலுத்துதல்

**3. தொழில் செயல்முறை புறத்திறனீட்டல் (BPO) என்றால் என்ன?** **[Aug. - 2022]**

வெளி நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்த அடிப்படையில் சிறப்பு வேலைகளை (அ) செயல்களைப் பெறுவதற்கு தொழில் செயல்முறை புறத்திறனீட்டல் என்று பெயர். வாடிக்கையாளர்கள் சேவை மையம் மற்றும் புள்ளிவிவரங்களைக் கணினிமயமாக்குதல் போன்ற செயல்களை எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம்.

**4. பெயர்ச்சியியல் என்றால் என்ன?** **[BEQ]**

விடை : சந்தையுடன் தொடர்புடைய போக்குவரத்து பணி பெயர்ச்சியியலில் மிக முக்கியப் பங்கை வகிக்கிறது. மேலும் மிக நேர்த்தியான ஒன்றுக்கொன்று தொடர்புடைய போக்குவரத்தின் விரிவாக்கமே பெயர்ச்சியியல் எனப்படுகிறது.

## III. சிறுவிடை வினாக்கள்

**1. தனி உரிமையியலின் வகைகள் யாவை?** **[June - 2019; Mar. - 2020]**

விடை : தனி உரிமையியல் இரு பிரிவுகளாக பிரிக்கப்படுகிறது. அவை,

அ) தயாரிப்பு பொருள் அல்லது வர்த்தக பெயர் தனி உரிமையாக்கல்.

ஆ) வணிக வடிவமைப்பு தனி உரிமை.

**அ) தயாரிப்புப் பொருள் அல்லது வர்த்தகப் பெயர் தனி உரிமை**

(i) இது உற்பத்திச்சார்ந்த பொருட்கள் தொடர்புடையதாக உள்ளது.

(ii) அப்பொருளை விற்கும் நோக்குடன் தனி உரிமம் அளித்தவர் செயல்படுகிறார்.

(iii) (எ.கா.) பதஞ்சலி பொருட்கள், பாரத் பெட்ரோலியம், Kidzee முதலியன.

**ஆ) வணிக வடிவமைப்புத் தனி உரிமை**

(i) ஒரு வாணிபத்தின் அனைத்து வர்த்தக அம்சங்களையும் உள்ளடக்கிய செயல்பாடுகளை தனி உரிமை ஒப்பந்த அடிப்படையில் வழங்கப்படுமாயின் அது "வணிக வடிவமைப்பு தனி உரிமை" எனப்படும்.

(ii) இந்தத் தொகுப்பில் பயிற்சி வழங்குதல், நிறுவனத்தின் பெயரை முழுமையாகப் பயன்படுத்துதல் மற்றும் அதற்கு உறுதுணையாக இருத்தல் போன்றவை இதில் அடங்கும்.

(iii) (எ.கா.) கே.எப்.சி, டைட்டான், சோடியாக், லக்மே.

**2. ஏட்டுக்கடன் முகமையில் உள்ள படிநிலைகள் யாவை? (ஏதேனும் 3)**

விடை : (i) உரிமைப் பேராள் (Factor) வாடிக்கையாளர்களின் பெறுதற்குரிய மாற்றுச் சீட்டுக்களில் எந்தத் தொகை மற்றும் கால அளவிற்குத் தாம் கொள்முதல் செய்யத் தயாராக உள்ளாரோ அதை வரையறை செய்கிறார்.

(ii) வாடிக்கையாளர்களுக்குப் பொருட்களை விற்று சரக்குப்பட்டியலில் நிலுவையாக உள்ள தொகையினை சட்டப்படி உரிமை மாற்றம் செய்து சரக்குப் பட்டியலின் நகல்களை உரிமைப்பேராள்களுக்கு அனுப்புகிறார்.

(iii) சரக்குப் பட்டியலின் மதிப்பில் 80% வரையிலான குறுகியகாலக் கடனை தமது வாடிக்கையாளர்களுக்கு பேராள் அளிக்கின்றார்.

(iv) வாடிக்கையாளர் சரக்குப்பட்டியலுக்குரியத் தொகையை அளித்த உடன் சரக்குப் பட்டியல் மதிப்பில் மீதமுள்ள 20% தொகையை பேராள் வாடிக்கையாளருக்கு அளிப்பார்.

(v) பேராள் 20% தக்க வைத்தல் தொகையைக் கழிக்க பின், வாடிக்கையாளர் தமது கணக்கிலிருந்து பணத்தை எடுக்க அனுமதிக்கப்படுகின்றார்.

**3. வாங்குபவர்கள் மீது மின்னணு வணிகவியல் ஏற்படுத்தும் தாக்கம் என்றால் என்ன?** **[Mar. - 2019]**

விடை : (i) உலகத்தின் மூலை முடுக்குகளில் கிடைக்கும் பொருட்களைப் பற்றி வாங்குபவர்கள் கூட மின்னணு வணிகத்தில் அறிய முடிகிறது.

(ii) நேரம் காலம் இல்லாமல் (7×24) எப்போது வேண்டுமானாலும் மின்னணு வணிகத்தின் மூலம் பொருட்களை வாங்கலாம்.

(iii) இடைநிலையர்கள் இல்லாமல் நேரடியாகப் பொருட்களை விற்பனை செய்வதால் இயல்பாகப் பொருட்கள் வாங்கும் கடைகளின் விலைகளைவிடக் குறைவாக உள்ளது.

(iv) மின்னணு வணிகம் மூலமாக புத்தகம் வாங்குதல், மென்பொருட்கள் வாங்குதல் என்பது கண்ணிமைக்கும் நேரத்தில் சாத்தியம்.

(v) வாடிக்கையாளர்கள் மின்னணு மூலம் நடத்தப்படும் ஏலத்தில் எளிதாகப் பங்குபெற முடிகிறது.

(vi) பயன்படுத்தியப் பொருட்களைக் கூட மின்னணு வணிகத்தின் மூலம் விற்பனை செய்யலாம்.



Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores



## IV. பெருவிடை வினாக்கள்

**1. தனி உரிமையியலின் நன்மைகளைக் கூறுக. (ஏதேனும் 5)**

(i) **இடர்களைக்குறைத்தல்:** தனி உரிமம் பெற்றவர் ஏற்கெனவே சட்டப்படி நடைபெறுகின்ற வியாபாரத்தின் வாணிப உரிமையை பெறுவதால், புதியதாக ஒரு வாணிபத்தைக் துவங்குவதில் உள்ள இடர்களில் இருந்து விடுபடுகிறார்.

(ii) **வணிக விரிவாக்கம்:** பிராந்திய, தேசிய மற்றும் உலகளாவிய கூடுதல் செலவினங்கள் இல்லாமல் தங்களுடைய வர்த்தகத்தை விரிவுப்படுத்த ஒரு வாய்ப்பு கிடைக்கிறது.

(iii) **விளம்பரச் செலவு:** வர்த்தகம் சார்புடைய விளம்பரங்கள் அனைத்தும் பொதுவானதாக இருப்பதால் குறைந்த செலவில் பெரும்பாலான விளம்பரச் செலவுகளை தனி உரிமையானர் மூலம் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

(iv) **செயல்பாட்டிற்கு உறுதுணையாக இருத்தல்:** தனி உரிமம் நிதி ஆதாரத்தை ஏற்படுத்துவது மட்டுமல்லாமல் எந்த இடத்தில் வியாபாரத்தை அமைப்பது, அதை வடிவமைக்கும் முறை, பணியாளர்களுக்கு பயிற்சி வழங்குதல் மற்றும் அன்றாட நடவடிக்கைகளை கையாளும் முறை ஆகியவற்றை முடிவெடுத்து அவைகளை செவ்வனே செய்யும் வழிமுறையை வகுக்கிறது.

**2. ஏட்டுக்கடன் முகமையின் சிறப்பியல்புகளை விவரி.**
[Mar. - 2019; Sep. - 2020]

**அல்லது**

**ஒரு நிறுவனம் பொருட்களைக் கடனுக்கு விற்பனை செய்கிறது. அவ்வாறு பொருட்களை கடனுக்கு விற்கும் போது வாங்கியவர் மீது பெற்றவரால் மாற்றுச்சீட்டு எழுதப்படுகிறது. அது ஒரு சிறிய மற்றும் நடுத்தரமான வியாபார நிறுவனமாக இருந்தால், நடைமுறை முதலின் கணிசமான பகுதி மாற்றுச்சீட்டில் முடங்கி விடுகிறது. இந்த இடரைப்போக்குவதற்கு, ஏட்டுக் கடன் முகமை என்ற சேவை உருவாக்கப்பட்டது. அதன் இயல்புகள் ஏதேனும் மூன்றினை விளக்குக.**
[BEQ; Govt. MQP - 2018]

விடை : (i) **கடன் ஏடுகளைப் பராமரித்தல் :** தனது வாடிக்கையாளரான வணிகரின் ஏட்டுக்கடன்களை பராமரிக்கும் முழுப் பொறுப்பினை தனி உரிமை பேராளன் ஏற்றுக் கொள்கிறார்.

(ii) **கடன் எல்லைகளை நிர்வகித்தல் :** வாராக்கடன் தொடர்பான நிதிச் சுமையைத் தனி உரிமைப் பேராளன் ஏற்றுக்கொள்கிறார். இதனால் வணிகத்தன்மையுடைய முதன்மை வணிகத்தின் மீது முழுக் கவனம் செலுத்துகிறார்.

(iii) **ரொக்க முன்பணம் :** ஏறத்தாழ கடன் விற்பனையில் ஏறக்குறைய 80 விழுக்காடு முன்கூட்டியே வணிகர் பெற்று வருகிறார். இதனால் தன்னுடைய வியாபார நீர்மைத் தன்மை பாதிக்கப்படுகிறது.

(iv) **வசூல் சேவை :** வாடிக்கையாளர்களுக்கு நினைவு கூறச் செய்தல், பகுதியளவு கடனை வசூலித்தல், காசோலை வசூலித்தல், ஏனைய சேவைகளும் இந்த நிதிச் சேவையில் அடங்கும்.

(v) **தனது வாடிக்கையாளர் மூலம் வணிகருக்கு ஆலோசனை கூறுதல்:** தனி உரிமை பேராளர் கடந்த காலங்களில் வாடிக்கையாளர்களிடம் ஏற்பட்ட அனுபவத்தின் அடிப்படையில் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய கடன் தகுதி மற்றும் வாராக்கடன் தொடர்பான வியாபார செய்திகளை உடனுக்குடன் வழங்குதல்.

## அரசு தேர்வு வினாக்கள்

### 1 மதிப்பெண்

**1. பெயர்ச்சியியலின் முக்கிய நன்மை.**
[BEQ; HY. - 2018; June & HY. - 2019]

அ. உற்பத்தி மேம்பாடு
ஆ. செலவுகளைக் குறைத்தல்
இ. இலாபம் ஈட்டுதல்
ஈ. பண்டகக்காப்பு

**[விடை. (ஆ) செலவுகளைக் குறைத்தல்]**

**2. பின்வருவனவற்றுள் எது மின்னணு வணிக முறை அல்ல?** [May - 2022]

அ. நுகர்வோர்களுக்கு இடையேயான வணிகம் (C2C)
ஆ. தொழில் நிறுவனத்திற்கும் வாடிக்கையாளருக்கும் இடையேயான வணிகம் (B2C)
இ. மொத்த வியாபாரிக்கும் சில்லறை வியாபாரிக்கும் இடையேயான வணிகம் (W2R)
ஈ. தொழில் நிறுவனங்களுக்கு இடையேயான வணிகம் (B2B)

**[விடை. (இ) மொத்த வியாபாரிக்கும் சில்லறை வியாபாரிக்கும் இடையேயான வியாபாரம் (W2R)]**

orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or
Available at All Leading Bookstores



## கூடுதல் வினாக்கள்

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக

1 மதிப்பெண்

**1. தனி உரிமை வழங்குபவர்கள் _______ ஐக் கட்டணமாக பெறுகின்றனர்.**

அ. தரகு ஆ. சம்பளம்
இ. உரிமைத் தொகை ஈ. கழிவு

**[விடை. (இ) உரிமைத் தொகை]**

**2. உரிமைப்பேராள் சரக்குப்பட்டியலின் மதிப்பில் _______ % குறுகிய காலக் கடனை தமது வாடிக்கையாளருக்கு அளிக்கின்றார்.** [BEQ]

அ. 60% ஆ. 80% இ. 40% ஈ. 20%

**[விடை. (ஆ) 80%]**

**3. ஒன்றுக்கொன்று தொடர்புடைய போக்குவரத்தின் விரிவாக்கமே _______ எனப்படுகிறது.** [BEQ]

அ. பெயர்ச்சியியல் ஆ. தீர்மானித்தல்
இ. மேலாண்மை
ஈ. இவற்றில் எதுவுமில்லை

**[விடை. (அ) பெயர்ச்சியியல்]**

**4. சேவை சார்புடைய துறைகளில் தற்போது _______ முறை பெருகி வருகிறது.**

அ. பெயர்ச்சியியல் ஆ. புறத்திறனீட்டல்
இ. வழங்கல் வழி
ஈ. இவற்றில் எதுவுமில்லை

**[விடை. (ஆ) புறத்திறனீட்டல்]**

**5. டெல்லாய்ட்டி சங்கத்தின் 2015ஆம் ஆண்டின் அறிக்கையின்படி இணைய தளத்தின் மூலம் நடைபெறும் சில்லறை வணிகம் இந்தியாவின் மொத்த வருவாயில் _______ விழுக்காட்டிற்கு பங்களிக்கிறது.**

அ. 10 ஆ. 15 இ. 20 ஈ. 25

**[விடை. (இ) 20]**

**6. _______ முறையில் தொழில் நிறுவனம் சம்பந்தப்பட்ட வாடிக்கையாளருக்கு நேரடியாகப் பொருளை விற்கின்றது.**

அ. C2B ஆ. B2B இ. B2G ஈ. B2C

**[விடை. (ஈ) B2C]**

**7. வளரும் நாடுகளுக்கு புற ஒப்படைப்பு வழங்கப்படுவதன் சிறப்பு நோக்கம்...............**

அ. குறைவான கூலி ஆ. நிலம்
இ. மூலதனம் ஈ. காரணிகள்

**[விடை. (அ) குறைவான கூலி]**

**8. எவ்விதமான நன்மைக்காக புற ஒப்படைப்பு மேற்கொள்ளப் படுகிறது?**

அ. உலகளாவிய கிராம வளர்ச்சி
ஆ. போக்குவரத்து
இ. தொழிற்சாலை
ஈ. நேரம் மற்றும் பணம்

**[விடை. (ஈ) நேரம் மற்றும் பணம்]**

**9. பணியமர்த்தல், கடன் சேகரிப்பு, ஆலோசனை போன்ற முழுமையான சேவைகள் வழங்குவதற்கு ஒப்புக்கொடுக்கும் ஒரு நிபந்தனை................ என்று அழைக்கப்படுகிறது.**

அ. முதிர்வு ஏட்டுக்கடன் தரகு வணிகம்
ஆ. தேசிய ஏட்டுக்கடன் தரகு வணிகம்
இ. அனைத்து சேவை ஏட்டுக்கடன் தரகு வணிகம்
ஈ. துணை நாடாத ஏட்டுக்கடன் தரகு வணிகம்

**[விடை. (இ) அனைத்து சேவை ஏட்டுக்கடன் தரகு வணிகம்]**

**10. பெயர்ச்சியியலில் அரசாங்கம் தன் ஆதிக்கத்தை எதன் வழியாக செயலாக்குகிறது?**

அ. சட்டங்கள் வழியாக
ஆ. செலவுகளை குறைத்தல்
இ. போக்குவரத்து வழியாக
ஈ. பகிர்ந்தளித்தல் வழியாக

**[விடை. (ஈ) பகிர்ந்தளித்தல் வழியாக]**

**11. எது சிறந்த நீண்டகால மேலாண்மையை குறித்து இயங்குகிறது.** [BEQ]

அ. பெயர்ச்சியியல்
ஆ. வழங்கல் வழி சங்கிலி மேலாண்மை
இ. தேவை
ஈ. அளிப்பு

**[விடை. (அ) பெயர்ச்சியியல்]**

**12. சிறந்த முறையை தேர்ந்தெடுக்கவும், மாற்று முடிவுகளை பகுப்பாய்வு செய்யவும் உதவ அடையாளம் காட்டும் சிறந்த மாதிரி எது?**

அ. வழிகாட்டு மாதிரிகள்
ஆ. அட்டவணையிட்ட செயல்பாட்டு மாதிரிகள்
இ. சரக்கிருப்பு மாதிரிகள்
ஈ. மாற்று ஏற்பாடுகள் உள்ளடக்கிய பகுப்பாய்வு மாதிரிகள்

**[விடை. (ஆ) அட்டவணையிட்ட செயல்பாட்டு மாதிரிகள்]**

**13. ஒரு நிறுவனம் எந்த வகையான நடவடிக்கைகளை புற ஒப்படைப்புச் செய்கின்றன?**

அ. மைய ஆ. இணை
இ. வாணிக ஈ. வணிகம்சாரா

**[விடை. (ஆ) இணை]**

www.Padasalai.Net
www.surabooks.com
orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or
Available at All Leading Bookstores



**14. வரவேற்பு அலுவலக பணியை புற ஒப்படைப்புச் செய்வதன் மூலம் எந்த விதமான செலவுகளைக் குறைக்க முடியும்.............**

அ. காகித வேலை ஆ. கோப்பு வேலை
இ. ரசீது ஈ. உற்பத்தி

**[விடை. (ஆ) கோப்பு வேலை]**

## II. குறுவிடை வினாக்கள் 2 மதிப்பெண்கள்

**1. ஏட்டுக்கடன் தரகு முகவர் என்பவர் யார்?**

**விடை :** ஒரு நிறுவனம் தனது பொருட்களை **ரொக்கம் மற்றும் கடன் அடிப்படையில் விற்பனை செய்கிறது.** கடன் விற்பனையினால் சிறு மற்றும் நடுத்தர வணிகர்களின் நடப்பு மூலதனமானது கணிசமான அளவு பெறுதற்குரிய மாற்றுச் சீட்டுகளாக மாறிவிடுவதால் நிறுவனத்தின் நீர்மைதன்மை பாதிக்கிறது. மேற்கண்ட இடர்களை சமாளிக்கும் பொருட்டு ஒரு தரகு நிதிச் சேவை செயல்படுகிறது. அதற்கு பெறுதல்கள் மீதான தரகு நிதிச்சேவை எனவும் அழைக்கப்படுகிறது. இது ஏட்டுக்கடன் வசூல் முகமை என்று அழைக்கப்படும்.

**2. புறத்திறனீட்டல் வரையறுக்க.**

**விடை :** ஒரு நிறுவனம் வெளியாட்களிடம் பணியை ஒப்படைப்புச் செய்து அதை தன் நிறுவனத்தின் மூலம் எப்போதும் போல் சந்தையிடுதலை புறத்திறனீட்டல் அல்லது புற ஒப்படைப்பு என அழைக்கப்படுகிறது.

**3. புற ஒப்படைப்பின் தேவைகள் என்ன?**

**விடை :** (i) முதன்மை நடவடிக்கைகளின் மீது கவனம் செலுத்துதல்.
(ii) செலவுகளை குறைத்தல்
(iii) இலாபத்தை அதிகரித்தல்
(iv) வேலை வாய்ப்புக்களை ஊக்குவித்தல்

**4. எந்த வகையில் தொழில் செயல்முறை புற ஒப்படைப்பு முக்கியமென நினைக்கிறாய்?**

**விடை :** (i) திறனை உயர்த்திக்கொள்ள, அதில் நிபுணத்துவம் பெற.
(ii) செலவுகளைக் குறைத்து இலாபத்தை அதிகரிக்க.
(iii) பொருளாதாரம் மேம்பாடு அடைய.
(iv) தேவைக்கேற்ப சேவைகளைப் பரிமாற்றம் செய்ய.

**5. அறிவுசார் செயல்முறை புற ஒப்படைப்புச் செய்தலின் நன்மைகள் என்ன?**

**விடை :** (i) அறிவை மட்டுமே பயன்படுத்தும் நோக்கம்.
(ii) சிறந்தத் திறமைகளைப் பயன்படுத்துதல்.
(iii) சிக்கலான பிரச்சனைகளுக்குத் தீர்வைக் கண்டறிதல்.
(iv) இடர்களைக் குறைத்தல்.

**6. பெயர்ச்சியியல் தேவை யாது?**

**விடை :** ஒரு நிறுவனம் சிறந்தபெயர்ச்சியியல் மேலாண்மையை நல்ல ஒழுங்குமுறைபடுத்தப்பட்ட போக்குவரத்து, பண்டகக் காப்பு, உற்பத்தி பொருட்களை கையாளுதல் சிறந்த தகவலுடன் கூடிய தேவை பெயர்ச்சியியலில் தேவைப்படுகிறது. மேலும் இந்தியாவை பொருத்தமட்டில் பெரும்பான்மையான போக்குவரத்து முறைகள் சாலை மற்றும் இரயில் வழியாகவே நடைபெறுகிறது.

**7. பெயர்ச்சியியல் முக்கியத்துவத்தை பற்றி எழுதுக.**

**விடை :** பெயர்ச்சியியல் தொடர்புடைய பல உற்பத்தி சார்புடைய செயல்களின் முடிவுகளை ஆய்வு செய்து தீர்மானித்து, தேவைக்கேற்ப தளர்த்தி, ஒருங்கிணைந்த அமைப்பு முறையாக உற்பத்திப் பொருட்களை பகிர்ந்தளித்தலில் ஈடுபடுகிறது.

**8. பெயர்ச்சியியல் வகைகள் யாவை?**

**விடை :** (i) முடிவெடுத்தலின் அடிப்படையில்
(ii) பங்கெடுக்கும் நபர்களின் அடிப்படையில்
(iii) பெயர்ச்சியியலில் இணைந்து கொள்ள செயல்களின் அடிப்படையில்
(iv) பெயர்ச்சியியலில் சேராத செயல்களின் அடிப்படையில்.

## சிறுவிடை வினாக்கள் 3 மதிப்பெண்கள்

**1. பெயர்ச்சியியலின் நன்மைகள் விவரி.**

**விடை :** (i) பொருட்களின் தயாரிப்பு வடிவமைப்பு,
(ii) தளவாட அமைவிடம், சந்தை மூலங்களை தெரிவுசெய்தல், உற்பத்தி கட்டமைப்பு,
(iii) விநியோகஸ்தர் அல்லது வணிகர் வலையமைப்பு, வடிவமைப்பு, பண்டகசாலை அமைவிடம், தளவாட வரைபடம் மற்றும் பெயர்ச்சி பங்கீட்டு வடிவமைப்பு, உற்பத்தி திட்டம்,
(iv) சரக்கிருப்பு மேலாண்மை, சரக்கிருப்பின் நிலைகள் போக்குவரத்து வகையைத் தேர்வு செய்தல் சரக்கை கப்பலில் ஏற்றுதலின் அளவு,
(v) வழித்தடத்தை முடிவு செய்தல் மேலும் போக்குவரத்து ஒப்பந்தவியல் தொகுப்பு மூலப்பொருளை கையாளுதல் ஆகும்.

www.Padasalai.Net www.surabooks.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores

# அலகு 5 தொழிலின் சமூகப் பொறுப்புணர்வுகள் மற்றும் தொழில் நன்னெறிகள்

## அத்தியாயம் 17 தொழிலின் சமூகப்பொறுப்புணர்வுகள்

பொருளடக்கம்

17.1. சமூகப் பொறுப்புணர்வின் கருத்து
17.2. சமூகப் பொறுப்புணர்வுக்கான தேவை
17.3. சமூகப் பொறுப்புணர்வு சார்ந்த வாதங்கள்
17.4. சமூகப் பொறுப்புணர்வின் வகைகள்
17.5. பல்வேறு ஆர்வக் குழுக்களுக்கான பொறுப்புணர்வுகள்

### பயிற்சி

**I. சரியான விடையைத் தேர்ந்தெடு**

**1. எந்த வகையான பொறுப்புணர்வு சமுதாயத்திற்கு நன்மை தரத்தக்கதாக உள்ளது?**

அ. சட்டம் ஆ. நெறிமுறை
இ. ஒழுங்குணர்வு ஈ. பொருளாதாரம்

**[விடை. (இ) ஒழுங்குணர்வு]**

**2. சமூகப் பொறுப்புணர்வு தொழில் நிறுவனங்களின் பங்குதாரர்களை தவிர ......க்கும் உண்டு.**

அ. பங்குதாரர்கள் ஆ. பணியாளர்கள்
இ. அரசு ஈ. நிறுவனம்

**[விடை. (ஈ) நிறுவனம்]**

**3. தொழிலின் சமூகப் பொறுப்புணர்வு என்பது நிறுவனத்திற்கு எவ்வாறு உதவுகிறது?** [BEQ]

அ. இலாபத்தை அதிகரித்தல்
ஆ. இலாபம்
இ. நிலைத்தன்மை
ஈ. சமநிலை

**[விடை. (இ) நிலைத்தன்மை]**

**4. சமூகப் பொறுப்புணர்வு வணிகத்தில் பண்டங்களை வழங்குகிறது** [June - 2019]

அ. அதிக விலை ஆ. குறைந்த விலை
இ. நியாயமான விலை ஈ. மிதமான விலை

**[விடை. (இ) நியாயமான விலை]**

**5. பின்வருவனவற்றில் எது ஊழியர்களின் சமூக பொறுப்புணர்வு ஆகாது.** [BEQ; HY. - 2019; Sep. - 2020]

அ. நியாயமான ஊதியம் ஆ. சரியான வசதிகள்
இ. சமூகப் பாதுகாப்பு ஈ. சுரண்டல்

**[விடை. (ஈ) சுரண்டல்]**



orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or
Available at All Leading Bookstores



## II. குறுவிடை வினாக்கள்

**1. சமூக அதிகாரம் என்பதன் பொருள் தருக** **[BEQ]**

**விடை :** (i) தொழில் செய்பவர்களிடம் கணிசமான அளவு சமுதாய அதிகாரம் உள்ளது. அவர்கள் மேற்கொள்ளும் செயல் நடவடிக்கைகள் மக்களின் எதிர்கால வாழ்க்கையைத் தீர்மானிப்பதாக அமைகிறது.

(ii) நாட்டின் மேம்பாடு கருதி வேலைவாய்ப்பு, பொருளாதார முன்னேற்ற அளவு மற்றும் அனைத்துத் தரப்பினருக்கும் வருமானத்தைப் பகிர்ந்தளித்தல் போன்றவற்றை தீர்மானிக்கும் உயர் பொறுப்பு, தொழில் நிறுமங்களுக்கு உண்டு.

**2. தடையற்ற நிறுவனம் என்றால் என்ன?**

**விடை :** (i) தொழில் நிறுவனங்கள் சமூக உரிமைகளை மறுத்து அதிக பயன் அடைந்து வருகின்றனர்.

(ii) (எ.கா.) அரசு நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தின் மூலம் கலப்படம், கள்ளச்சந்தை மற்றும் சமூகத்திற்கு எதிரான நடைமுறைகள் போன்றவற்றைக் கட்டுப்படுத்துகின்றது. இருந்த போதிலும், அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளை பின்பற்றுவது சமூகப் பொறுப்புணர்வின் அவசியமான ஒன்றாகும். அத்தகைய செயல்பாடு தொழிலில் தடையற்று முடிவெடுக்கும் உரிமையை பாதிக்கிறது.

**3. தொழில் முறை நன்னெறி பொறுப்புணர்வு என்றால் என்ன?** **[Mar. - 2020]**

**விடை :** (i) இது **சமுதாயத்தால் எதிர்பாக்கப்படும் ஒரு வகை பொறுப்பாகும்.** ஆனால் இப்படிப்பட்ட பொறுப்புகள் சட்டத்தில் குறிப்பிடப்படாதவையாகும்.

(ii) (எ.கா.) ஒரு நிறுவனம் தனது பொருட்கள் குறித்து விளம்பரம் மேற்கொள்ளும்போது, அத்தகைய விளம்பரம் மத உணர்வுகள் மற்றும் மக்களின் கண்ணியம் மதிக்கத்தக்க வகையில் இருத்தல் வேண்டும்.

(iii) இத்தகைய பொறுப்புகளை தொழில் அமைப்புகள் தானே விருப்பப்பட்டு கடைபிடிக்க வேண்டும்.

## III. சிறுவிடை வினாக்கள்

**1. சமூகப் பொறுப்புணர்வு என்பதன் பொருளுக்கான இலக்கணம் தருக.**

**விடை :** பீட்டர் எஃப் டிரக்கர் என்பவரின் கூற்றுப்படி, சமூகப் பொறுப்புணர்வு என்பது, "சமுதாயப் பொதுநலன் மேம்பாடு கருதி, உரிய நபர், சமுதாய நம்பிக்கைக்குரிய அடிப்படை மேன்மை, சமுதாய ஒற்றுமை உறுதித்தன்மை, மற்றும் நிலைத்தன்மை போன்றவற்றில் பங்களிப்பை ஏற்படுத்துவது ஆகும்".

**2. சமூகப் பொறுப்புணர்வின் வகைகளை வரிசைப்படுத்துக. (ஏதேனும் 3)** **[BEQ; Sep. - 2020]**

**விடை :** (i) பொருளாதாரப் பொறுப்புணர்வு

(ii) சட்டப் பொறுப்புணர்வு

(iii) தொழில் நன்னெறிமுறைப் பொறுப்புணர்வு

(iv) தன் விருப்பப் பொறுப்புணர்வு.

## IV. பெருவிடை வினாக்கள்

**1. சமூகப் பொறுப்புணர்வுவின் தேவைகளை விளக்குக. (ஏதேனும் 5)**

**விடை : சமூகப் பொறுப்புணர்வுக்கான தேவை :**

(i) **சுய ஆர்வம் :**

1. தொழில் அமைப்புகள் சந்தையில் நிலைத்து செயல்படுவதற்கு சமுதாய எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற முனைகின்றன.
2. பொதுவாக சமூகத்தின் தேவை மற்றும் எதிர்பார்ப்புகளை நிறைவு செய்வதன் மூலம், தொழில் உரிமையாளர்கள் அங்கீகரிக்கப்படுகின்றனர்
3. (எ.கா.) அதிக ஊதியம் வழங்குதல், சாதகமான பணிச்சூழலை ஏற்படுத்துதல், தொழிலாளர்களை ஊக்குவித்து, உற்பத்தியை அதிகரித்தல், பணியாளர் சுழற்சி மற்றும் வருகைப் பதிவு இன்மையை குறைத்தல்.

(ii) **சமுதாய உருவாக்கம் :**

1. நாட்டின் வளங்களை முழுமையாகப் பயன்படுத்துவதன் மூலம் தொழில் நிறுமங்கள் ஒரு நல்ல சமுதாயத்தை உருவாக்குகின்றன.
2. எனவே தொழில் நிறுமங்கள். மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவு செய்ய வேண்டும்.
3. தொழில் செய்பவர்கள் சமுதாயத் தேவைகளைப் பூர்த்தி செய்வதோடு மட்டுமல்லாமல் மக்களின் நலன் கருதி நாட்டின் வளங்களைப் பயன்படுத்த வேண்டும்.

(iii) **சமூக அதிகாரம் :**

1. தொழில் செய்பவர்களிடம் கணிசமான அளவு சமுதாய அதிகாரம் உள்ளது.
2. நாட்டின் மேம்பாடு கருதி வேலைவாய்ப்பு, பொருளாதார முன்னேற்ற அளவு மற்றும் அனைத்துத் தரப்பினருக்கும் வருமானத்தைப் பகிர்ந்தளித்தல் போன்றவற்றை தீர்மானிக்கும் உயர் பொறுப்பு தொழில் நிறுமங்களுக்கு உண்டு.

(iv) **சமுதாயத்தின் உருவகம் :**

1. சமூக எதிர்பார்ப்புகளை தொழில் நிறுமங்களால் நிறைவேற்ற முடியும் என்ற எண்ணத்தை மக்கள் மனதில் ஏற்படுத்த வேண்டும்.
2. ஒரு வெற்றிகரமான தொழில் மூலம் தொழிலாளர் மத்தியில் நல்ல உறவுமுறை ஏற்படுத்துதல், நுகர்வோர் மற்றும் பொருள் பகர்வாளர்களுக்கும் உதவி புரிய இயலும்.

www.Padasalai.Net www.Surabooks.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or
Available at All Leading Bookstores



(v) **பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வு :**

1. தற்போது தொழிலாளர்கள் மற்றும் நுகர்வோர்கள் தங்களின் உரிமைகள் பற்றி நன்கு அறிந்துள்ளனர்.
2. நுகர்வோர்கள் தரமான பொருட்களுக்கு சரியான விலையைக் கொடுக்கவும் மற்றும் தொழிலாளர்கள் உழைப்பிற்கேற்ற ஊதியம் பெறவும் விரும்புகின்றனர்.

**2. சமூகப் பொறுப்புணர்வை நீங்கள் எவ்வாறு வகைப்படுத்துவீர்கள்?** [Mar. & HY. - 2019]

**விடை :** சமூகப் பொறுப்புணர்வினை நான்கு பெரும் பிரிவுகளாக பிரிக்கலாம்.

(i) **பொருளாதார பொறுப்புணர்வு :**

1. அடிப்படையில் தொழில் அமைப்புகள் அனைத்தும் தங்களின் பொருளாதார நலனை மேம்படுத்திக் கொள்ள இயங்கி வரும் அமைப்புகளாகும்.
2. அப்படி பொருளாதார நலனை அடைய முனையும் பொழுது சமூகப் பொறுப்புகளும் நிறைவேற்றப்படுகின்றன என்பதில் ஐயமில்லை.
3. (எ.கா) மக்களுக்கு தேவைப்படும் பொருள்களை தரமாக வழங்குதல், நியாயமான இலாபம் ஈட்டல் நுகர்வோரின் புகார்களை தீர்த்தல், மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்துதல் போன்ற பல சமூகப் பொறுப்புகளும் நிறைவேற்றப்படுகின்றன.

(ii) **சட்டப் பொறுப்புணர்வு :** ஒவ்வொரு தொழில் அமைப்புகளும் அதற்கான சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு செயல்படுத்துவதற்கான வடிவமைப்பை ஏற்படுத்த வேண்டும். அத்தகைய சட்ட திட்டங்கள், சமுதாய நலனை கருத்தில் கொண்டு உருவாக்கப்பட்டது.

(iii) **தொழில் நன்னெறிமுறை பொறுப்புணர்வு :**

1. இது சமுதாயத்தால் எதிர்பார்க்கப்படும் ஒரு வகை பொறுப்பாகும். ஆனால் இப்படிப்பட்ட பொறுப்புகள் சட்டத்தில் குறிப்பிடப்படாதவையாகும்.
2. (எ.கா.) ஒரு நிறுவனம் தனது பொருட்கள் குறித்து விளம்பரம் மேற்கொள்ளும்போது, அத்தகைய விளம்பரம் மத உணர்வுகள் மற்றும் மக்களின் கண்ணியம் மதிக்கத்தக்க வகையில் இருத்தல் வேண்டும்.

(iv) **தன் விருப்ப பொறுப்புணர்வு :**

1. இத்தகைய பொறுப்பு, ஒரு நிறுவனம் மேற்கொள்ளும் தன்னார்வ நடவடிக்கைகளை குறிக்கின்றது.
2. (எ.கா) கல்வி நிறுவனங்களுக்கு நன்கொடை அளித்தல், அல்லது வெள்ளம் மற்றும் நில நடுக்கத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள மக்களுக்கு உதவி செய்தல்.

# அரசு தேர்வு வினாக்கள்

## 3 மதிப்பெண்கள்

**1. சமூகப் பொறுப்புணர்வு சார்ந்த தொழில் நிறுவனங்கள் மூலம் பணியாளர்கள் பெறும் நன்மைகள் யாவை ?** [BEQ; HY. - 2018]

**விடை :** (i) பணியாளர்களின் கூலி மற்றும் ஊதியத்தை குறித்த காலத்தில் தொடர்ந்து வழங்குதல்

(ii) பணியாற்றுவதற்கு ஏற்ற இணக்கமான சூழ்நிலையை உருவாக்குதல் மற்றும் இதர வசதி வாய்ப்புகளை நல்குதல்.

(iii) நல்ல தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்தித் தருதல்.

(iv) பணிப் பாதுகாப்பு மற்றும் சமூகப் பாதுகாப்பினை உருவாக்குதல் அதாவது வருங்கால வைப்பு நிதி குழுக் காப்பீடு, ஓய்வூதியம் மற்றும் பணிஓய்வு பயன்பாடு போன்ற வசதிகள்.

(v) அவர்கள் வாழ்க்கைதரத்தை மேம்படுத்துதல் அதாவது வீட்டு வசதி, போக்குவரத்து வசதி, சிற்றுண்டி சாலை வசதி, குழந்தை காப்பகங்கள் மற்றும் பிற வசதிகள்.

(vi) குறித்த காலத்தில் பயிற்சி அளித்து அவர்களின் செயல்திறனை தரம் உயர்த்துதல்.

## 5 மதிப்பெண்கள்

**1. தொழிலின் சமூகப் பொறுப்புணர்வின் மூலம் நன்மை பெறும் குழுக்களை விவரி.** [BEQ; QY. - 2018]

**விடை :** பல்வேறு ஆர்வ குழுக்கள், தொழில் சார்ந்த பொறுப்புணர்வுகள்:

(i) **உரிமையாளர்கள் மீதான பொறுப்புணர்வு:** எவர் ஒருவர் சொந்த மூலதனம் கொண்டு ஒரு தொழிலைத் தொடங்கி அதில் ஏற்படும் இடர்களை ஏற்கின்றாரோ அவரே தொழிலின் உரிமையாளராவார். அத்தகைய உரிமையாளர் ஏற்கும் தொழில் தொடர்பான பொறுப்புணர்வுகள் கீழ்வருமாறு.

1. தொழிலைச் சிறப்பாக இயக்குதல்
2. மூலதனம் மற்றும் வளங்களைச் சரியான முறையில் பயன்படுத்துதல்.
3. மூலதனத்தின் மீதான வளர்ச்சியை வரவேற்கும் வகையில் இருத்தல்.
4. நியாயமான வருமானம் தொடர்ந்து அளிக்கத்தக்க வகையில் மூலதனத்தை முறையாக முதலீடு செய்தல் போன்றவைகளாகும்.

(ii) **முதலீட்டாளர்கள் மீதான பொறுப்புணர்வு:** தொழிலுக்குத் தேவையான நிதியினை மூலதனமாக கீழ்க்கண்ட வழிகளில் எவர் ஒருவர் அளிக்கின்றாரோ அவரே முதலீட்டாளர்கள் என அழைக்கப்படுகின்றார்.

orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores



**முதலீட்டாளர்களின் பொறுப்புகள் பின்வருமாறு:**

1. மூலதனத்தின் பாதுகாப்பை உறுதி செய்தல்,
2. முதலீட்டின் மீதான வட்டியைத் தொடர்ந்து செலுத்துதல்.
3. குறித்த காலத்திற்குள் மூலதனத்தொகையை திருப்பிச் செலுத்துதல் போன்றவைகளாகும்.

(iii) **பணியாளர்கள் மீதான பொறுப்புகள் :** எந்த ஒரு தொழில் அமைப்பிற்கும் பணியாளர்கள் அல்லது தொழிலாளர்கள் மிகவும் அவசியமாகும். இத்தகைய பணியாளர்கள் நிறுவனத்தின் நலன் கருதி தங்களுடைய திறனை முழுமையாக செலவிடுகின்றனர்.

**பணியாளர்கள் தொடர்பான பொறுப்புணர்வுகளைக் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தலாம் :**

1. பணியாளர்களின் கூலி மற்றும் ஊதியத்தை குறித்த காலத்தில் தொடர்ந்து வழங்குதல்.
2. பணியாற்றுவதற்கு ஏற்ற இணக்கமான சூழ்நிலையை உருவாக்குதல் மற்றும் இதர வசதி வாய்ப்புகளை நல்குதல்.
3. நல்ல தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்தித் தருதல்.
4. பணிப் பாதுகாப்பு மற்றும் சமூகப் பாதுகாப்பினை உருவாக்குதல்.
5. அவர்கள் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தல்.
6. குறித்த காலத்தில் பயிற்சி அளித்து அவர்களின் செயல்திறனை தரம் உயர்த்துதல்.

(iv) **பொருள் அளிப்பாளர்கள் தொடர்பான பொறுப்புணர்வுகள்:** உற்பத்தியாளர் மற்றும் வியாபாரிகளுக்கு தேவையான கச்சாப் பொருட்களை யார் வழங்குகின்றாரோ அவரே பொருள் வழங்குநர் எனப்படுவார்.

**வழங்குநரின் பொறுப்புகள் பின்வருமாறு :**

1. பொருட்கள் கொள்முதல் செய்வதற்கான தொடர் ஆணையை வழங்குதல்.
2. நியாயமான விதிமுறைகள் மற்றும் பொறுப்புறுதிகளை வழங்குதல்.
3. கடனுக்கான காலக்கெடுவினை நியாயமான முறையில் அளித்தல்.
4. கடன் தொகையை தவணைக் காலத்திற்குள் திருப்பிச் செலுத்துதல்.

(v) **வாடிக்கையாளர் தொடர்பான பொறுப்புகள் :** வாடிக்கையாளரின் ஆதரவு இல்லாமல் எந்த தொழிலும் செயல்படுவதில்லை. தொழிலின் சமூகப் பொறுப்புணர்வில் வாடிக்கையாளர்கள் ஒரு முக்கிய அங்கமாக உள்ளனர்.

அவர்களின் பொறுப்புகள் பின்வருமாறு :

1. பொருட்கள் மற்றும் சேவைகள் வாடிக்கையாளரின் தேவையை நிறைவேற்றும் வகையில் இருக்க வகை செய்ய வேண்டும்.
2. பொருட்கள் மற்றும் சேவைகள் தரத்தில் மேம்பட்டு இருத்தல் வேண்டும்.
3. பொருட்கள் மற்றும் சேவைகள் தடையின்றி தொடர்ந்து அளிக்கப்பட வேண்டும்.

**2. சமூகப் பொறுப்புணர்வுக்குச் சாதகமான விவாதங்களைப் புரிந்து கொள்ளுமாறு எடுத்துக்காட்டுகளுடன் விவாதிக்க.** [Sep. - 2020]

விடை : (i) **பங்குநர்களின் நலன் பாதுகாத்தல் :**

1. ஒரு தொழில் நிறுவனம் அதன் கூட்டாளிகளின் அல்லது பங்குதாரர்களின் நலனைப் பாதுகாக்கும் வகையில் செயல்படுகின்றது.
2. (எ.கா.) பங்குதாரர்கள், கூட்டாளிகள், வாடிக்கையாளர்கள், பணியாளர்கள் மற்றும் விநியோகிப்பாளர்கள் போன்றவர்கள்.

(ii) **சமுதாய மேம்பாடு :**

1. தொழில், சமுதாயத்தின் ஒரு அங்கமாக செயல்படுகிறது. இது சமுதாயத்தின் ஆதரவு உள்ளீடாக விளங்குகிறது.
2. சமூகப் பொறுப்புணர்வின் நடத்தையானது தொழில் மற்றும் சமூகத்திற்கு இடையேயான நல்லுறவை வலுப்படுத்துவதற்கு அவசியமானதாக கருதப்படுகிறது.

(iii) **சமுதாய தாக்கத்தை அளவிடுதல் :**

1. ஒரு தொழில் நிறுவனம் தனது செயல்பாட்டிற்கு உட்பட்ட காலத்தில், பல முடிவுகள் மற்றும் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன.
2. இத்தகைய செயல் நடவடிக்கைகள் சமுதாயத்தின் நலன்கள் மற்றும் மதிப்புகள் மீது நிலையான தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

(iv) **முறையான சமூக அதிகாரம் :**

1. பெரும்பாலான நிறுவனங்கள் சமூக அதிகாரத்தின் மூலம் பலதரப்பட்ட செயல்பாடுகளை போற்றத்தக்க வகையில் மேற்கொள்கின்றன.
2. சமுதாய பொறுப்புணர்வு இன்மையின் மூலம் சமூக அதிகாரம் தவறாக பயன்படுத்தப்படுகின்றது.

(v) **சட்டப்பூர்வ தன்மை :**

1. இது நிறுமங்களின் சமூகப் பொறுப்புணர்வைப் போற்றத்தக்க ஒரு பண்பாக விளங்குகிறது.
2. சமூகப் பொறுப்புணர்வு தொழிலின் பொருளாதார நோக்கங்களை அடைய பெரிதும் உதவுகிறது.
3. மேலும் சமூக வாழ்க்கையை உயர்த்துவதன் மூலம், தொழிலின் சிறந்த வாடிக்கையாளர்கள், ஊழியர்கள் மற்றும் நல்ல நண்பர்களை பெற முடிகின்றது.

orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or
Available at All Leading Bookstores



(vi) **ஆற்றல் (அ) திறன் :**

1. தொழில் அமைப்புகள் மற்றும் அதன் நிர்வாகிகள் பொருளாதாரம் சார்ந்த பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் திறமைமிக்கவர்களாக திகழ்கின்றனர்.
2. அதுபோன்று சமுதாயத்தில் ஏற்படுகின்ற பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பதற்கு திறன்கொண்ட தலைவர்களின் பங்களிப்பை சமுதாயம் எதிர்நோக்குகிறது.

# கூடுதல் வினாக்கள்

## சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக

**I மதிப்பெண்**

**1. தொழிலை சிறப்பாக இயக்குதல் ________ ன் பொறுப்புணர்வு.**

அ. முதலீட்டாளர் ஆ. உரிமையாளர்
இ. பணியாளர் ஈ. வாடிக்கையாளர்

**[விடை. (ஆ) உரிமையாளர்]**

**2. இலாபம் ஈட்டல், தரமான பொருட்களை வழங்குதல், நுகர்வோரின் புகார்களைத் தீர்த்தல் போன்றவைகள் ________ பொறுப்புணர்வு ஆகும்.**

அ. சட்ட ஆ. நன்நெறி முறை
இ. தன் விருப்ப ஈ. பொருளாதார

**[விடை. (ஈ) பொருளாதார]**

**3. சுனாமி, நிலநடுக்கத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவது ________ பொறுப்புணர்வு.** [BEQ]

அ. நன்நெறி முறை ஆ. சட்ட
இ. தன் விருப்ப ஈ. பொருளாதார

**[விடை. (இ) தன் விருப்ப]**

**4. ஒவ்வொரு தொழில் அமைப்புகளும் அதன் விதிமுறைகளுக்கு உட்பட்டு செயல்படுவது ________ பொறுப்புணர்வு ஆகும்.**

அ. தன் விருப்ப ஆ. சட்ட
இ. பொருளாதார ஈ. நன்நெறி முறை

**[விடை. (ஆ) சட்ட]**

**5. ________ பொறுப்புணர்வு தொழிலின் பொருளாதார நோக்கங்களை அடைய பெரிதும் உதவுகிறது.**

அ. தன் விருப்ப ஆ. சமூக
இ. பொருளாதார ஈ. சட்ட

**[விடை. (ஆ) சமூக]**

**6. ________ பொறுப்புணர்வு தொழில் நிறுமங்களை ஒரு நல்ல கூட்டுரு குடிமகனாக ஆக்குகிறது.**

அ. சமுதாய ஆ. பொருளாதார
இ. சட்ட ஈ. இவை அனைத்தும்

**[விடை. (அ) சமுதாய]**

## குறுவிடை வினாக்கள் 2 மதிப்பெண்கள்

**1. பங்குதாரர்கள் என்று யாரை அழைக்கலாம்?**

விடை : (i) எவர் ஒருவர், சொந்த மூலதனம் கொண்டு ஒரு தொழிலைத் தொடங்கி அதில் ஏற்படும் **இடர்களை ஏற்கின்றாறோ, அவரே தொழிலின் உரிமையாளர்** அல்லது **பங்குதாரர்** ஆவார்.

(ii) எவர் ஒருவர் நிறுமத்தின் பங்குகளை வாங்குகிறாரோ அவரும் பங்குதாரர் ஆவர்.

## சிறுவிடை வினாக்கள் 3 மதிப்பெண்கள்

**1. தொழிலின் சமூகப் பொறுப்புணர்வின் தேவை என்ன என்பது பற்றி நீர் ஏன் சிந்தனை செய்யக் கூடாது?**

விடை : (i) ஒவ்வொரு தொழில் உரிமையாளர்களும் தங்களின் தொழில் மூலம் பெறும் இலாபத்தில் ஒரு பகுதியை சமுதாய மேம்பாட்டிற்காகப் பயன்படுத்த வேண்டும்.

(ii) சமுதாய எதிர்பார்ப்புக்களை, வேலைவாய்ப்பு, மருத்துவ சுகாதார வசதி, கல்வி வசதி போன்றவைகளை நிறைவேற்ற வேண்டும்.

(iii) தொழிலாளர்களுக்கு உழைப்புக்கேற்ற ஊதியம் வழங்க வேண்டும்.

(iv) நுகர்வோருக்குக் கலப்படமற்ற, தரமானப் பொருட்களை நியாயமான விலையில் வழங்க வேண்டும்.

(v) ஏமாற்று வணிக முறைகள், சுரண்டல்களைத் தவிர்த்து நாட்டின் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு தொழில் செய்ய வேண்டும்.

(vi) சமூக எதிர்பார்ப்புகள் தொழில் நிறுவனங்களால் நிறைவேற்ற முடியும் என்ற நம்பிக்கையை மக்கள் மனதில் ஏற்படுத்த வேண்டும்.

**2. தொழில் அமைப்புகளுக்கு சமூகப் பொறுப்புணர்வின் அவசியம் யாது என்பதை வெளிக்கொணர்க?**

விடை : (i) ஒரு தொழில் நிறுவனம் சமுதாய நலனைப் புறக்கணித்தால், அந்த நிறுவனத்தை அரசு எடுத்துக்கொள்ளும் (நாட்டுடைமையாக்கல் அபாயம் ஏற்படும்).

(ii) ஒவ்வொரு தொழில் நிறுவனமும் அரசால் வழங்கப்பட்ட சாலை, குடிநீர், மின்சாரம் போன்ற பொதுவான வசதிகளைத் தான் பயன்படுத்துகின்றன. அதனால் சமுதாய நலனை புறக்கணிக்கக் கூடாது.

(iii) ஒவ்வொரு தொழில் நிறுவனமும் மனிதனின் உடல் உழைப்பைப் பயன்படுத்தித்தான் இலாபம் ஈட்டுகிறது. இதனால் சமுதாய நலனை முக்கியமாகக் கருத்தில் கொள்ள வேண்டும்.

orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or
Available at All Leading Bookstores



(iv) ஒவ்வொரு தொழில் நிறுவனமும் சமுதாயத்தை (நுகர்வோர்களை) நம்பித்தான் பொருட்களையும், சேவைகளையும் உற்பத்தி செய்கின்றன. எனவே சமுதாய நலனுக்கு எதிராகத் தங்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடாது.

(v) ஒவ்வொரு தொழில் நிறுவனமும் சமுதாயத்தின் எதிர்பார்ப்புகள், தேவைகளை நிறைவேற்றி மக்கள் மனதில் அந்நிறுவனம் பற்றிய நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும்.

## பெருவிடை வினாக்கள் — 5 மதிப்பெண்கள்

**1. சமூகப் பொறுப்புணர்வுக்கு எதிரான விவாதங்கள் யாவை?**

விடை : (i) **கருத்து தெளிவின்மை :**

1. சமூகப் பொறுப்புணர்வு என்பதன் பொருள் தெளிவாக வரையறுக்கப்படாமல் உள்ளது.
2. இத்தகைய சூழ்நிலையில் சமூகப் பொறுப்புணர்வு கோட்பாட்டை செயல்படுத்துவதில் சிக்கல் ஏற்படுகிறது.

(ii) **பொருளாதார இலக்குகளை தளர்த்தல் :**

1. சமூகப் பொறுப்புணர்வை ஏற்றுகொள்வதன் மூலம், வணிகப் பொருளாதார இலக்குகளையும் சமரசம் செய்கின்றன.
2. தொழில் என்பது ஒரு பொருளாதாரம் சார்ந்த நிறுவனமாகும். மேலும் அதன் உரிமையாளர்களுக்கு அதிகபட்ச இலாபம் ஈட்டுவதை முக்கிய நோக்கமாகக் கொண்டு செயல்படுகின்றன.

(iii) **சமூகத்திறன் இன்மை :**

1. தொழில் அமைப்புகள் மற்றும் அதன் மேலாளர்கள் சமூகம் சார்ந்த கடமைகளைப் பற்றி நன்கு அறிவதில்லை.
2. இதனால் அரசு மற்றும் அரசு சாரா நிறுவனம் போன்ற சிறப்பு சமூக சேவை நிறுவனங்கள், சமூகப் பிரச்சனைகளை அல்லது சவால்களைச் சந்திக்க வேண்டியுள்ளது.

(iv) **நுகர்வோர் மீதான சுமை :**

1. தொழில் அமைப்புகள் சமூகம் சார்ந்த பிரச்சினைகளில் ஈடுபடுகின்றபோது, அதற்கான செலவு அதிகரிக்கின்றது.
2. அத்தகைய செலவினங்களை ஈடுகட்ட தொழில் நிறுவனங்கள் பொருளின் விலையை உயர்த்தி அந்தச் சுமையை நுகர்வோர்களுக்கு மாற்றிவிடுகின்றன.

(v) **அதிகாரமற்ற பொறுப்பு :**

1. தொழில் அமைப்புகள் பொருளாதாரம் சார்ந்த அதிகாரங்களை மட்டுமே கொண்டுள்ளது.
2. ஆனால், அது சமூகம் சார்ந்த அதிகாரங்கள் கொண்டவை அல்ல. சமூக அதிகாரத்தை சமூகப் பொறுப்புணர்வுடன் திணிப்பது ஓர் நியாயமற்றதாகும்.

(vi) **பொறுப்புகளை தவறாக பயன்படுத்துதல்:**

1. சமூகப் பொறுப்புக்களை ஏற்பதன் மூலம், நிறுமத்தின் திட்டங்களை நிறைவேற்றும் நேரம் மற்றும் வளங்கள் குறைகின்றன.
2. இதனால் தொழில் அமைப்புகள் மேலும் நலிவடைய வாய்ப்பு உள்ளது.

(vii) **அளவுகோல் இன்மை :**

1. வணிகத்தில் எந்தவொரு முடிவையும் எடுப்பதற்கு இலாபம் ஒரு பொதுவான அளவுகோலாக விளங்குகிறது.
2. வியாபார அமைப்புகளின் மீது சமுதாய பொறுப்பை திணிப்பதன் மூலம் வியாபார முடிவு எடுக்கும் துல்லியமாக இலாபம் என்ற பொது அளவுகோலால் சரியாக அளக்க முடிவதில்லை.

☆☆☆

www.Padasalai.Net
www.surabooks.com
orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores

# அத்தியாயம் 18 தொழில் நன்நெறிகள் மற்றும் நிறுவன ஆளுகை

## பொருளடக்கம்


| | |
|---|---|
| 18.1. | தொழில் நன்நெறிகள் – கருத்து |
| 18.2. | தொழில் நெறிமுறையின் அடிப்படைக் கூறுகள் |
| 18.3. | தொழில் நெறிமுறையின் விதிகள் |
| 18.4. | பெருநிறுவன ஆளுகை |
| 18.5. | இந்தியாவில் பன்னாட்டு நிறுமங்கள் |
| 18.6 | பன்னாட்டு தரக்குறியீடுகள் |


## பயிற்சி

### I. சரியான விடையைத் தேர்ந்தெடு

**1. பின்வருவனவற்றில் எது சமுதாயத்திற்கு பொருட்களின் விற்பனையை அதிகரிக்கச் செய்ய உதவுகிறது?** [Mar. - 2020]

அ. வணிகத்தின் வெற்றி

ஆ. விதிகள் மற்றும் ஒழுங்கு முறைகள்

இ. ஒழுக்கவியல்

ஈ. தொழில்முறை நிர்வாகம்

**[விடை. (இ) ஒழுக்கவியல்]**

**2. நெறிமுறைகளுக்கான தேவைகள் ________.** [Mar. - 2019]

அ. உயர்மட்ட மேலாண்மை

ஆ. நடுத்தர அளவிலான மேலாளர்கள்

இ. மேலாண்மையில் இல்லாத தொழிலாளர்கள்

ஈ. மேற்கண்ட அனைத்தும்

**[விடை. (ஈ) மேற்கண்ட அனைத்தும்]**

**3. பின்வருவனவற்றில் எது ஒரு தொழில் நிறுவனத்தில் பயனுள்ள நன்நெறி நடைமுறைகளை உறுதி செய்யவில்லை?**

அ. ஒரு வெளியீட்டின் குறியீடு

ஆ. பணியாளர்களின் ஈடுபாடு

இ. இணக்க வழிமுறைகளை நிறுவுதல்

ஈ. இவற்றில் எதுவும் இல்லை

**[விடை. (அ) ஒரு வெளியீட்டின் குறியீடு]**

**4. தலைமை நிர்வாகத்தின் பங்கு என்பது, அதன் முழு அமைப்பு எதைநோக்கி வழி நடத்த வேண்டும்?** [HY. - 2018]

அ. பொது நடத்தை ஆ. அமைப்பு நடத்தை

இ. நேர்மையான நன்நெறி நடத்தை

ஈ. தனி நபர் நடத்தை

**[விடை. (இ) நேர்மையான நன்நெறி நடத்தை]**

**5. நிலையான நடைமுறைகளுக்கு வழிவகுக்கும் பணியாளர்களின் நெறிமுறை நடத்தை என்பது ________.**

அ. நன் நடத்தை ஆ. நெறிமுறை நடத்தை

இ. மோசமான நடத்தை ஈ. சரியாக முடிவெடுத்தல்

**[விடை. (ஈ) சரியாக முடிவெடுத்தல்]**



orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores



## II. குறுவிடை வினாக்கள்

**1. நன்நெறி என்றால் என்ன?** [June - 2019]

**விடை :** (i) நன்நெறி என்ற சொல் "எதோஸ்" எனும் கிரேக்க மொழிச் சொல்லில் இருந்து பெறப்பட்டது. அதன் பொருள் நடத்தை, விதிமுறைகள், சமுதாய ஒழுங்குணர்வு ஆகும்.

(ii) சரியான மற்றும் தவறான, நன்மை மற்றும் தீமையைத் தீர்மானிக்க உதவும் ஒழுங்குணர்வின் தராதரங்களிலிருந்து பெறப்பட்ட நடத்தையை நிர்வகிப்பதே "நன்நெறி" எனப்படும்.

**2. தொழில் நெறிமுறையின் அடிப்படைக் கூறுகள் ஏதேனும் இரண்டை குறிப்பிடுக.**

(i) உயர்நிலை மேலாண்மையின் ஆதரவு.

(ii) நன்நெறி நடத்தை விதிகளை உருவாக்குதல் மற்றும் பரப்புதல்.

**3. பெருநிறுவன ஆளுகை இலக்கணம் தருக.**

"பெருநிறுவன ஆளுகை என்பது சம்பந்தப்பட்ட தொழில் அமைப்பில் நேர்மை, வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புத் தன்மை போன்றவற்றை மேப்படுத்தும் ஒரு செயல்" என உலக வங்கி வரையறுக்கிறது.

## III. சிறுவிடை வினாக்கள்

**1. தொழில் நெறிமுறைகளின் கருத்து என்ன?**

**விடை :** (i) சமுதாயப் பார்வையில் தொழில் அமைப்புக்கள் பொது மக்களுக்குத் தேவையானப் பொருட்களையும், சேவைகளையும் வழங்குகிறது.

(ii) அதேசமயம் தனிப்பட்ட பார்வையில் இலாபம் ஈட்டுவதை முதன்மை நோக்கமாகக் கொண்டுள்ளது.

(iii) ஆனால் ஒரு தனிமனிதனின் பார்வையில் இலாபம் ஈட்டும் சுயநலம் மிகுந்த அமைப்பே வணிக நிறுவனம் எனவும் கருதப்படுகிறது.

(iv) இதில் யாருடைய பார்வை தவறு என விவாதிக்க முடியாது.

(v) ஒட்டு மொத்தமாக எந்த ஒரு தொழிலமைப்பின் தனிப்பட்ட நோக்கத்தையும் மற்றும் சமூக நோக்கத்தையும் இணைக்கும் பாலமாக வியாபார நன்நெறி விதிகள் செயல்படுகின்றன.

**2. பன்னாட்டு நிறுமங்கள் இந்தியாவிற்கு தேவையா? [ஏதேனும் 3]**

இந்தியாவில் பன்னாட்டு நிறுமங்களின் தேவைக்கான காரணங்கள் பல உள்ளன. அவற்றை கீழ்க்காணலாம்.

(i) இந்தியாவில் மிகப் பெரிய சந்தை வாய்ப்பு இருப்பது.

(ii) உலக அளவில் பொருளாதாரத்தில் மிக வேகமாக வளர்ந்து வரும் நாடுகளில் இந்தியா முக்கிய இடத்தைப் பெறுகிறது.

(iii) அரசின் சாதகமான கொள்கைகள் மூலம் அன்னிய நேரடி முதலீடு பெருமளவு இந்தியாவிற்குள் வருவது.

(iv) அரசு கொள்கைகளை தநர்த்தி அதன் மூலம் பன்னாட்டு முதலீட்டை ஈர்க்க தொடர் முயற்சிகளை மேற்கொண்டு வருவது.

## IV. பெருவிடை வினாக்கள்

**1. தொழில் நெறிமுறைகளின் அடிப்படைக் கூறுகளை விளக்கவும்.** [June - 2019; Mar. - 2020]

**விடை :** தொழில் அமைப்புகள் சிறப்பாக செயல்படுவதற்கு சில அடிப்படை தொழில் நெறிமுறைகள் அவசியமாகிறது.

(i) **உயர்நிலை மேலாண்மையின் ஆதரவு :**

1. நன்நெறி விதிகளை ஏற்படுத்துவது ஒவ்வொரு தொழிலமைப்பின் அடிப்படைக் கடமையாகும்.
2. அப்படி நன்நெறி விதிமுறைகளை உருவாக்குவதில் உயர்மட்ட மேலாண்மையின் தார்மீக ஆதரவு இன்றியமையாதது.
3. தார்மீக நன்நெறி விதிமுறைகளை உருவாக்க ஒவ்வொரு தொழிலமைப்பும் ஒரு குழுவை அமர்த்தி அதில் அனைத்து ஊழியர்களின் பிரதிநிதிகளும் இடம்பெறச் செய்ய வேண்டும்.

(ii) **நன்நெறி நடத்தை விதிகளை உருவாக்குதல் மற்றும் பரப்புதல் :**

1. தொழில் அமைப்புகள் நன்நெறி விதிகளை உருவாக்கி, அதை எழுத்து வடிவில் பணிபுரியும் அனைவருக்கும் புரியும்படி தெரிவிக்க வேண்டும்.
2. இந்த நன்நெறி விதிகள் தொழில் அமைப்பில் இயங்கும் ஒவ்வொரு பிரிவிற்கும் தனித்தனியே உருவாக்கிட வேண்டும்.

(iii) **நன்நெறி விதிமுறைகளை கடைபிடிப்பதைக் கண்காணித்தல் :**

மேற்கூறிய நன்நெறி விதிமுறைகளை ஒவ்வொரு பிரிவும் அல்லது துறையும் முறையாக கடைபிடிக்கின்றனவா என ஆய்வு செய்ய கண்காணிப்பு அவசியம். இதனை நன்நெறி கண்காணிப்பு என்று அழைப்பர்.

(iv) **அனைத்து ஊழியர்களையும் ஈடுபடுத்துதல்:**

நன்நெறி விதிகளுக்கு பணியாளர்களின் முழு ஆதரவைத் திரட்ட நன்நெறி விதிகளை உருவாக்குவதற்கு முன்பாக அதைப்பற்றி சம்பந்தப்பட்ட பணியாளர்களிடம் பல்வேறு மட்டங்களில் விவாதம் நடத்தி அவர்களின் எண்ணப்போக்கை அறிந்து அதற்கு ஏற்றப்படி பணியாளர்கள் அனைவரையும் உள்ளடக்கிய ஒரு நன்நெறி குழு உருவாக்கப்பட வேண்டும்.

(v) **நன்நெறி பலனை அளித்தல் :**

1. நன்நெறி விதிகளினால் விளைந்திட்ட பலனை ஆய்வு செய்ய நன்நெறி தணிக்கை அவசியம்.

www.Padasalai.Net www.surabooks.com
orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores



ஆனால் சில வகைச் செயல்களை எண் ரீதியாக வெளிப்படுத்துவது கடினம்.

2. (எ.கா) ஊழியர்களின் ஆற்றல், ஒழுக்கம், பொருளின் தரம், கவனம் போன்றவைகள்.

**2. பெருநிறுவன ஆளுமையின் நன்மைகளை குறிப்பிடுக. [ஏதேனும் 5]**

(i) நல்ல பெருநிறுவன ஆளுகை மூலம் நிறுவனத்தின் வெற்றியை உறுதி செய்ய மற்றும் பொருளாதார மேம்பாட்டை ஏற்படுத்த இயலும்.

(ii) தொழில் அமைப்புகளின் நிலையான வளர்ச்சியை உறுதிப்படுத்துகிறது.

(iii) பல்வேறுபட்ட பங்குதாரர்களின் நலன்களைச் சீரமைத்தல்.

(iv) முதலீட்டாளர்களின் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்துதல் மற்றும் அதன் மூலம் முதலீட்டை அதிகரிக்க செய்தல்.

(v) நிறுமங்களுக்கான மூலதனச் செலவினைக் குறைக்கின்றன.

(vi) பங்கு விலையின் மீது நேர்முறை தாக்கத்தைக் கொண்டுள்ளது.

## அரசு தேர்வு வினாக்கள்

### 2 மதிப்பெண்கள்

**1. குறியீடு என்பதன் பொருள் என்ன? [BEQ; HY. - 2019]**

விடை : குறியீடு என்பது பொருட்களின் தரம், பாதுகாப்பு, வேலைவாய்ப்பு, நேர்மையான சந்தை முறைகள், நல்வாழ்வுத் திட்டங்கள், பணிபுரியும் இடத்தில் பாதுகாப்பு ஆகியவைகளை உள்ளடக்கியது.

### 3 மதிப்பெண்கள்

**1. பெருநிறுவன ஆளுகை மூலம் பங்குதாரர்கள் பெரும் நன்மைகள் யாவை? [Mar. - 2020]**

விடை : (i) பல்வேறுபட்ட பங்குதாரர்களின் நலன்களைச் சீரமைத்தல்.

(ii) முதலீட்டாளர்கள் (அ) பங்குதாரர்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்துதல் மற்றும் அதன் மூலம் முதலீட்டை அதிகரிக்கச் செய்தல்.

(iii) அமைப்புகள் பங்குதாரர்களின் பயன்பாட்டை சரியான முறையில் கையாளுகிறது.

(iv) வள ஆதாரங்கள் சிறந்த முறையில் பங்கு ஒதுக்கீடு செய்வதற்கு வழி வகுக்கிறது.

(v) தொழில் நெறிமுறைகளை வலுப்படுத்துகிறது.

### 5 மதிப்பெண்கள்

**1. அதிகரித்து வரும் பன்னாட்டு நிறுவனங்களின் பலன்களை விவரி. [அல்லது]**
**பன்னாட்டு நிறுமங்களின் இயல்புகளில் ஏதேனும் ஆறினை எழுதுக. [HY. - 2019]**

விடை : (i) உலகளாவிய வாய்ப்புகள் இருப்பதாக கருதினாலும் சில நாடுகளில் மட்டுமே இந்நிறுவனங்கள் தொழிலை நடத்துகிறது.

(ii) பன்னாட்டு அளவில் தங்கள் சொத்துக்களில் ஒரு கணிசமான பகுதியை முதலீடு செய்கிறது.

(iii) இவ்வகை நிறுவனங்கள், மிகப்பெரிய நிறுவனங்கள்/ தொழில் அமைப்புக்களை கொண்டு இயங்கி வருகிறது.

(iv) இந்நிறுவனங்கள் பன்னாட்டு அளவில் உற்பத்தியை மேற்கொள்கிறது, மற்றும் பல நாடுகளில் தொழிற் கூடங்களையும் இயக்கி வருகிறது.

(v) உலகளாவிய கண்ணோட்டத்தில் நிர்வாக முடிவுகளை மேற்கொள்ள பன்னாட்டு நிறுமங்கள் வகை செய்கின்றது.

(vi) பன்னாட்டு நிறுமங்கள் ஒரு சில நாடுகளில் மட்டும் உற்பத்தி செய்து பல்வேறு நாடுகளில் விற்பனையை மேற்கொள்கிறது

(vii) பன்னாட்டு நிறுமங்களின் செயல்பாடுகள் அனைத்தும் ஒட்டுமொத்தமாக பெருநிறுவனங்களின் தொழிலில் ஒருங்கிணைக்கப்படுகின்றன.

## கூடுதல் வினாக்கள்

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக

**1 மதிப்பெண்**

**1. கீழ்வருவனவற்றுள் எது தொழில் நன்நெறி கிடையாது?**

அ. உயர்மட்ட மேலாண்மை

ஆ. நியாயமான ஊதியம் வழங்குதல்

இ. நுகர்வோர் குறைகளைக் கேட்டறிதல்

ஈ. மாசுக்கட்டுப்பாடு

**[விடை. (ஈ) மாசுக்கட்டுப்பாடு]**

**2. வியாபார நன்நெறி எனும் சொல் ______ மொழிச் சொல்லாகும்.**

அ. இலத்தீன்

ஆ. கிரேக்க

இ. பிரெஞ்சு

ஈ. தமிழ் **[விடை. (ஆ) கிரேக்க]**

www.Padasalai.Net
www.surabooks.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores



**3. கீழ்வருவனவற்றுள் எது தொழில் நன்நெறியாகும்?**

அ. பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுதல்

ஆ. அறக்கொடைகள் வழங்குதல்

இ. தரமானப் பொருட்களை நியாயமான விலையில் வழங்குதல்

ஈ. இவை அனைத்தும்

**[விடை. (இ) தரமானப் பொருட்களை நியாயமான விலையில் வழங்குதல்]**

**4. "தொழில் அமைப்புகள் தங்களின் தனிப்பட்ட நலனுக்கு அப்பாற்பட்டு சமுதாய நலனை உள்ளடக்கிச் செயல்பட வேண்டும்" - யார் கூற்று? [BEQ]**

அ. ரத்தன் டாடா ஆ. ஹென்றி ஃபோர்டு

இ. சென்

ஈ. இவற்றில் எதுவுமில்லை

**[விடை. (அ) ரத்தன் டாடா]**

**5. "பணம் சம்பாதிப்பதை மட்டுமே குறிக்கோளாக கொண்டுள்ள ஒரு தொழிலை ஓர் ஏழ்மை வகை தொழில் எனலாம்" - யார் கூற்று? [BEQ]**

அ. கால்டுவெர்ட் ஆ. ரத்தன் டாடா

இ. ஹென்றி ஃபோர்டு

ஈ. இவற்றில் எதுவுமில்லை

**[விடை. (இ) ஹென்றி ஃபோர்டு]**

**6. "நிறுமங்களில் முறையான ஆளுகை மூலம் அந்நாடுகளின் உலகப் பொருளாதாரம் தீர்மானிக்கப்படுகிறது என கூறியவர்" ______. [BEQ]**

அ. ஹென்றி ஃபோர்டு ஆ. கால்டுவெர்ட்

இ. ஜேம்ஸ் உல்சன் ஈ. ரத்தன் டாடா

**[விடை. (இ) ஜேம்ஸ் உல்சன்]**

## குறுவிடை வினாக்கள் 2 மதிப்பெண்கள்

**1. நெறிமுறை நடத்தைகள் பாதிக்கும் காரணிகளில் இரண்டைக் கூறு.**

விடை : (i) நியாயமற்ற முறையில் பொருட்களை விற்றல்.

(ii) தரமற்ற பொருட்களை விற்றல்.

(iii) நுகர்வோர்களின் குறைகளை தீர்ப்பதில்லை.

**2. பெரு நிறுவன ஆளுமையின் தேவை என்ன?**

விடை : (i) தனிப்பட்ட நபர்களின் இலக்குகள், சமுதாயத்தின் இலக்குகள், பொருளாதார இலக்குகள் போன்றவைகள் சமநிலையைப் பெற்றிட இது அவசியம்.

(ii) நிறுமத்தின் நோக்கங்களை வடிவமைத்து அதன் செயல்பாடுகளை உன்னிப்பாகக் கண்காணிக்க பெரு நிறுவன ஆளுமை தேவை.

**3. பன்னாட்டு நிறுவனங்கள் என்றால் என்ன?**

விடை : (i) பன்னாட்டு நிறுமம் MNC பல நாடுகளில் செயல்படும். ஆனால் அதன் தலைமை நிர்வாகம் ஒரு நாட்டிலிருந்து மட்டுமே நிர்வகிக்கப்படுகிறது என வரையறுக்கப்படுகிறது.

(ii) ஒன்றுக்கும் மேற்பட்ட நாடுகளில் தொழில் செய்யும் ஓர் அமைப்பே பன்னாட்டு நிறுமம் ஆகும். இது பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்கிறது.

## சிறுவிடை வினாக்கள் 3 மதிப்பெண்கள்

**1. தொழில் நெறிமுறைகள் - வரையறுக்க.**

விடை : (i) தொழிலின் உரிமையாளர்கள், நிர்வாகிகள் மற்றும் தொழில் செய்பவர்கள் போன்றவர்களுக்கு தொழில் நன்நெறி முறைகள், ஒழுங்குணர்வு தரத்திற்கு ஓர் இலக்கணமாகும்.

(ii) இத்தகைய தரநிலைகள் தொழில் செய்பவர்களின் நன்னடத்தையை தீர்மானிக்கின்றன.

(iii) தொழில் நெறிமுறைகள் வணிக நடத்தையை வெளிப்படுத்துகிறது.

**2. வணிகத்தில் நெறிமுறைகள் ஏன் அவசியம்?**

விடை : (i) வணிகம் என்பது சமுதாயத்தில் ஒரு பகுதி. அது சமுதாயத்தில் தான் செயல்படுகிறது.

(ii) எனவே வணிகம் தொழில் நன்நெறிகளைப் பின்பற்றுவது அவசியம். தொழில் நன்நெறிகள் வியாபாரத்தின் முன்னேற்றத்திற்கு மிக அவசியம்.

(iii) இது தொழில் முன்னேற்றத்திற்கான ஒரு கருவியாக செயல்படுகிறது.

(iv) தொழில் நடவடிக்கைகளை மேற்கொள்ள தொழில் நன்நெறிகளின் வழிகாட்டல் அவசியம்.

(v) சமுதாயத்தில் தொழில் நிறுவனத்தின் மீது நல்லெண்ணம் ஏற்பட வேண்டுமானால் தொழில் நன்நெறிகள் அவசியம்.

**3. பன்னாட்டு நிறுவனத்தின் வேலைவாய்ப்புப் பற்றி ஒரு உதாரணத்துடன் விளக்குக.**

விடை : (i) உலக அளவில் இந்தியா தொழிற்சாலை உற்பத்தியில் 10-வது இடத்தில் உள்ளது.

(ii) மொத்த உள்நாட்டு உற்பத்தியில் GDP 27.6 % உற்பத்தி துறையில் உள்ளது.

(iii) (எ.கா.) (IBM) ஐ.பி.எம். மைக்ரோசாப்ட் நிறுவனம், பெப்சிகோ, சோனி, வோடபோன், ரிபோக், நோக்கியா.

(iv) இந்தியாவில் பன்னாட்டு நிறுமங்களின் ஊடுருவல் அதன் பொருளாதார வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்காக மிகவும் பயன் உள்ளதாகவும், குறிப்பாக இளைய தலைமுறையினருக்கு வேலைவாய்ப்புகளையும் அளித்து வருகிறது.

www.Padasalai.Net
www.Surabooks.com
orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores



**பெருவிடை வினாக்கள் 5 மதிப்பெண்கள்**

**1. தொழில் நெறிமுறையின் குறியீடு பற்றி விவரிக்கவும்.**

**விடை :** நன்னெறி நெறிமுறை ஆவணம் நன்னெறி நடத்தைகள், கொள்கைகள் மதிப்புகள் மற்றும் அதன் நோக்கங்களை வரையறுக்கிறது. ஊழியர்கள் பின்பற்ற வேண்டிய தரம் பற்றி தெளிவான கருத்தை இது தெரிவிக்கிறது. அவர்கள் முடிவெடுப்பதற்கு இது வழிகாட்டியாகவும் விளங்குகிறது. கீழ்க்கண்டவை தொழில் நெறிமுறையில் உள்ளடங்கும். அவையாவன

1. நியாயமான விலையில் பொருள்களை வழங்குதல்.
2. நல்ல தரமான பொருள்களை வழங்குதல், போலியான மற்றும் தரக்குறைவான பொருள்கள் வழங்குவதை அறவே தவிர்த்தல்.
3. நுகர்வோர்க் குறைகளை கேட்டறிந்து அவற்றுக்கு உரிய காலத்திற்குள் தீர்வு காணுதல்.
4. பொருள்கள் விலையை நியாயமற்ற முறையில் அதிகரிப்பதை தவிர்த்தல்.
5. சந்தையிடுகையில் பதுக்கல் மற்றும் பற்றாக்குறையைச் செயற்கையாக ஏற்படுத்துதல் கூடாது.
6. போட்டியை ஒழிக்கும் ஒற்றை நோக்கத்தின் அடிப்படையில் விலை குறைப்பு செய்து போட்டியே இல்லாமல் செய்யக்கூடாது.
7. தவறான தகவல் அல்லது மிகைப்படுத்தப்பட்ட கூற்றுக்களை விளம்பரத்தில் உள் சேர்ப்பதைத் தவிர்த்தல்.
8. பணியாளர்களுக்கு நியாயமான ஊதியம் வழங்குதல்.
9. பணியாற்றுவதற்கு உகந்த சூழ்நிலையை ஏற்படுத்தி தருதல்.
10. தொடர்ந்து வரி செலுத்துதல்.

**2. இந்தியாவில் உள்ள நிறுவனங்களின் வேலைவாய்ப்புகள் பற்றிச் சர்வதேசத் தர நிர்ணயத்தின் பங்கு பற்றி விவாதிக்கவும்.**

**விடை : ஆசியா :**

(i) அனைத்து ஆசிய நாடுகளில் இயங்கி வரும் பட்டியலிடப்பட்ட நிறுவனங்களுக்கு, தன்னிச்சையுடன் செயல்படும் இயக்குனர்கள் தேவைப்படுகின்றனர்.

(ii) குறைந்தபட்சம் நிர்வாகக் குழுவில் மூன்றில் ஒரு பங்கு இயக்குனர்கள் தன்னிச்சையுடன் செயல்படும் நபர்களாக இருக்க வேண்டும். 2012 ல் சிங்கப்பூர் ஆளுகை குறியீடு அமைப்பு தன்னிச்சையாக செயல்படும் இயக்குனர்களை பரிந்துரை செய்கிறது.

**அமெரிக்க ஐக்கிய நாடுகள் :**

(i) நிறுவனங்களின் முதலீட்டாளர்களின் குழுவால் சி.ஐ.ஐ. (CII), நிறுமங்களின் ஆளுமைக்கான கொள்கை குறைந்தபட்சம் 2/3 பங்கு இயக்குனர்கள் சுதந்திரதன்மை கொண்டவர்களாக இருத்தல் வேண்டும் என கூறுகிறது.

(ii) ஒரு நியமனக் குழு மற்றும் நிறுவன ஆளுகைக்குழு ஆகியவை மூன்று தரநிலைக் குழுக்களில் ஒன்றாகும்.

**ஐரோப்பா :**

ஐரோப்பிய ஆணைக் குழு தனது உறுப்புநாடுகளில் இயங்கிவரும் நிறுமங்களில் சுதந்திரமான நிர்வாகம் நடைபெற சார்பற்று செயல்படும் மேற்பார்வை இயக்குனர்களை போதுமான அளவு சேர்க்க வேண்டும் என வலியுறுத்துகிறது. – ஜீ 20/ ஒ.சி.சி.டி.

**ஜப்பான் :**

2014–ஆம் ஆண்டில் இங்கிலாந்தின் தொழில் நிறுவனங்கள் தன்னார்வ இலக்குகளை முதலில் கொண்டிருந்தன. அதாவது 2015–ஆம் ஆண்டில் எப்.டி.எஸ்.சி 100 (FTSE 100) பைனான்சியல் டைம்ஸ் ஸ்டாக் எக்ஸ் சேஞ்ச் வங்கிகளில் 25 விழுக்காடு பெண்கள் பணியமர்த்தப்பட வேண்டும் என குழுவால் முடிவு செய்யப்பட்டது.

**கனடா :**

கனடாவின் மத்திய அரசு தற்போது இரண்டு மசோதாக்களை தாக்கல் செய்துள்ளது. இந்த மசோதாவில் பொது நிறுமங்கள் மற்றும் வறையறுக்கப்பட்ட நிறுமங்களாகிய வங்கிகள் மற்றும் நிறுமங்கள் போன்றவற்றின் குழு உறுப்பினர்களில் 40 விழுக்காடு பெண் உறுப்பினர்களுக்கு இடம் ஒதுக்க வேண்டும் என வலியுறுத்துகிறது.

**3. நிறுவன ஆளுகையின் முக்கியத்துவத்தைப் பங்குதாரர்களின் நிலையிலிருந்து விளக்குக. [BEQ]**

**விடை :** பெருநிறுவன ஆளுகை தத்தவத்தின் ஒரு முக்கியக் கூறான வெளிப்படைத்தன்மையான மேலாண்மையின் மூலம் எந்த ஒரு நாட்டிலும் சமச்சீரான பொருளாதார மேம்பாட்டை ஏற்படுத்த வாய்ப்புள்ளது. பெருநிறுவன ஆளுகை கோட்பாட்டின் மூலம் அனைத்து பங்குதாரர்களின் நலம் மற்றும் பாதுகாப்பு பெருமளவு பேணிக்காக்கப்படுகிறது.

**பெருநிறுவன ஆளுமையின் பயன்பாடுகள் :**

(i) முதலீட்டாளர்களின் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்துதல் மற்றும் அதன் மூலம் முதலீட்டை அதிகரிக்க செய்தல்.

(ii) நிறுமங்களுக்கான மூலதனச் செலவினைக் குறைக்கின்றன.

(iii) பங்கு விலையின் மீது எதிர்மறைத் தாக்கத்தைக் கொண்டுள்ளது.

(iv) பெருநிறுவன ஆளுகைக் குழு நிறுமங்கள் தங்களின் குறிக்கோள்களை அடைய மேலாளர்களுக்கு ஊக்கமளிப்பது.

(v) தேவையற்ற கழிவு / விரயம், ஊழல்கள், இடர்பாடுகள் மற்றும் தவறான மேலாண்மை போன்றவற்றை தவிர்த்தல்.

(vi) நிறுமம் மீதான மக்களின் கருத்துருவத்தைக் கூட்டுகிறது.

(vii) அமைப்புகள் பங்குதாரர்களின் பயன்பாட்டைச் சரியான முறையில் கையாளுகிறது.

(viii) வள ஆதாரங்கள் சிறந்த முறையில் ஒதுக்கீடு செய்வதற்கு வழி வகுக்கிறது. தொழில் நெறிமுறைகளை வலுப்படுத்துகிறது.

☆ ☆ ☆

orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or
Available at All Leading Bookstores

# அலகு 6 தொழில் நிதியியல்

## அத்தியாயம் 19 தொழில் நிதிமூலங்கள்

### பொருளடக்கம்

19.1. தொழில் நிதி – பொருள்
19.2. தொழில் நிதி ஆதாரங்களின் வகைகள்
19.3. தொழில் நிதிமூலங்களைத் தேர்ந்தெடுப்பதை வரையறுக்கும் காரணிகள்
19.4. சேமிப்பு – சேமிப்பின் முக்கியத்துவம்
19.5. தனிநபர் முதலீட்டு வழிகள்

www.Padasalai.Net
www.surabooks.com

### பயிற்சி

**I. சரியான விடையைத் தேர்ந்தெடு**

**1. நிறுவனங்களுக்குத் தேவைப்படும் நேரத்தில் பணத்தை ஒதுக்கீடு செய்தல் கீழ்க்கண்டவாறு வரையறுக்கப்படுகிறது.**

அ. நிதி மேலாண்மை ஆ. வங்கி
இ. பண மேலாண்மை ஈ. இவற்றில் ஏதுமில்லை

**[விடை. (அ) நிதி மேலாண்மை]**

**2. உட்புற நிதி மூலத்திற்கு எடுத்துக்காட்டு.......**

அ. கடனாளிகளிடமிருந்து பெறப்படும் தொகை
ஆ. வணிக வங்கி கடன்
இ. பங்கு வெளியீட்டின் மூலம் பெறப்படும் தொகை
ஈ. தொழில் நிறுவனத்திற்குள் திரட்டப்படும் நிதி

**[விடை. (ஈ) தொழில் நிறுவனத்திற்குள் திரட்டப்படும் நிதி]**

**3. கடன்பத்திரதாரர்கள் ஒரு நிலையான .............. விகிதம் பெறத்தகுதியுடையவர்கள்.**

**[BEQ; HY. - 2018; Mar. & QY. - 2019; Sep. - 2020; Aug. - 2022]**

அ. பங்காதாயம்
ஆ. இலாபம்
இ. வட்டி
ஈ. இவை எதுவும் இல்லை

**[விடை. (இ) வட்டி]**

**4. பொது வைப்பு............... இடமிருந்து நேரடியாகத் திரட்டப்பட்ட வைப்புத் தொகையாகும்.**

அ. பொதுமக்கள்
ஆ. இயக்குநர்கள்
இ. தணிக்கையாளர்கள்
ஈ. உரிமையாளர்கள்

**[விடை. (அ) பொதுமக்கள்]**

**5. நேர்மை பங்குதாரர்கள் ஒரு நிறுமத்தின்......** **[May - 2022]**

அ. கடனீந்தோர் ஆ. உரிமையாளர்கள்
இ. கடனாளிகள் ஈ. இவை எதுவும் இல்லை

**[விடை. (ஆ) உரிமையாளர்கள்]**



orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or
Available at All Leading Bookstores



## II. குறுவிடை வினாக்கள்

**1. கடன் பத்திரங்கள் பற்றிக் குறிப்பு வரைக.**

விடை : (i) கடன் பத்திரம் என்பது நிறுமத்தின் மூலம் திரட்டப்பட்ட கடன்கள் குறித்த வெளிப்படையான அத்தாட்சியாகும்.

(ii) கடன் பத்திரங்கள் நிறுமத்திற்கு தேவையான நீண்ட கால முதலைத் திரட்டுவதில் பெரும் பங்கு வகிக்கின்றன.

(iii) கடன் பத்திரங்களை வைத்திருப்பவர்கள் கடன் பத்திரதாரர் என்று அழைக்கப்படுகிறார்.

(iv) நிறுமம் இலாபம் ஈட்டினாலும் அல்லது நட்டம் ஏற்பட்டாலும் கடன் பத்திரதாரர்களுக்குக் கண்டிப்பாக வட்டி வழங்கப்பட வேண்டும்.

**2. கடனாகப் பெறப்பட்ட நிதியின் கீழ் வரும் ஏதேனும் இரண்டு நிதி ஆதாரங்களைக் குறிப்பிடுக.** [BEQ]

விடை : கடனாகப் பெறப்பட்ட நிதிகள் என்பது கடன் அல்லது புற மூலங்களினால் பெறப்பட்ட நிதிகளைக் குறிக்கிறது. (எ.கா)

(i) கடன் பத்திரங்கள்

(ii) வங்கி மற்றும் நிதி நிறுவனங்களிடமிருந்து பெறும் கடன்.

(iii) பொது வைப்பு

(iv) குத்தகை நிதி

(v) வணிகத்தாள்.

**3. அஞ்சலக சேமிப்பு திட்டங்கள் ஏதேனும் இரண்டை குறிப்பிடுக.** [May - 2022]

(i) அஞ்சலக சேமிப்பு கணக்கு

(ii) அஞ்சலக தொடர் வைப்புக் கணக்கு

(iii) அஞ்சலக நிலை வைப்பு கணக்கு

(iv) மூத்த குடிமக்கள் சேமிப்பு திட்டம்

## III. சிறுவிடை வினாக்கள்

**1. தொழில் நிதியியல் - வரைவிலக்கணம் தருக.** [HY. - 2019; Mar. - 2020]

விடை : (i) தொழில் நிதியியலுக்கு ஆர்.சி ஆஸ்போர்ன் கீழ்கண்டவாறு வரைவிலக்கணம் தருகிறார். "நிதியியல் செயல்பாடு என்பது, ஒரு வணிக நிறுவனம் நிதியினைத் திரட்டி, அதை முறையாகப் பயன்படுத்துவதற்கான செயலினைக் குறிப்பதாகும்".

(அல்லது)

(ii) பி.ஒ. வீலர் அவர்களின் கூற்றுப்படி "தொழில் நிதியியல் என்பது முதலீட்டுக்கான நிதியைப் பெறுவதும், அதை முறையாகப் பயன்படுத்துவதன் மூலம் தொழில் நிறுவனங்களின் ஒட்டு மொத்த நோக்கங்களை நிறைவேற்றுவது தொடர்பான வணிகச் செயல்பாடுகள் ஆகும்."

**2. அடகுக் கடன் என்றால் என்ன?** [Sep. - 2020]

விடை : (i) கடன் பெறுநர் அவசர நிதித் தேவையைப் பூர்த்தி செய்து கொள்ளத் தனக்கு சொந்தமான பொருளைக் கடன் வழங்குநரிடம் அடகு வைத்துக் கடன் பெறுகிறார்.

(ii) கடனைத் திருப்பிச் செலுத்தும் வரை அடகு வைக்கப்பட்ட பொருள் கடனாளரிடம் இருக்கும் கடனாளி கடனைத் திருப்பி அடைக்கத் தவறினால், கடனாளர் தகுந்த முன்னறிவிப்பை கடனாளிக்கு கொடுத்துவிட்டு, அடகு வைத்த பொருளை ஏலம் விடுவார்.

(iii) ஏலம் விடுவதன் மூலம் பெறப்பட்ட தொகையைக் கடனுக்கும் மற்றும் அதற்குண்டான வட்டிக்கும் எடுத்துக்கொண்டு மீதி தொகை ஏதும் இருப்பின் அதைக் கடனாளிக்கு வழங்குவார்.

**3. கால அளவின் அடிப்படையில் தொழில் நிதியின் வகைகளை குறிப்பிடுக.** [Aug. - 2022]

விடை : தொழில் நிதித் தேவைகளை தேவைப்படும் கால அளவின் அடிப்படையில் மூன்று பிரிவுகளாக வகைப்படுத்தலாம். அவை

(i) குறுகிய கால நிதி

(ii) நடுத்தர கால நிதி

(iii) நீண்டகால நிதி

## IV. பெருவிடை வினாக்கள்

**1. பல்வேறு வகையான குறுகிய கால நிதி ஆதாரங்களை விளக்குக. [ஏதேனும் 5]** [Sep. - 2021]

விடை : பல்வேறு வகையான குறுகிய கால நிதிகள் பின்வருமாறு:

(i) **கடன்களும் முன்பணங்களும்:** கடன் என்பது கடன் கோருபவரின் கடன் கணக்கில் ஒட்டு மொத்தக் கடன் தொகையையும் ஒரே வீச்சில் வரவு வைக்கப்பட்ட தொகையைக் குறிக்கும். கடன் மற்றும் முன்பணங்கள் வழக்கமாக நிலைவைப்பு ரசீது, சரக்குரிமை ஆவணங்கள், பங்குகள் மற்றும் கடன் பத்திரங்கள் போன்ற ஒரு சில பிணையங்களை ஈடாக பெற்றுக்கொண்டு வழங்கப்படுகிறது.

(ii) **வங்கி மேல்வரைப்பற்று:** வங்கி மேல்வரைப்பற்று என்பது வங்கியில் ஒரு குறிப்பிட்ட வரம்பிற்கு உட்பட்டு ஒரு வாடிக்கையாளரின் வங்கி நடப்பு கணக்கில் வரவில் இருக்கும் தொகையை விட அதிகமான தொகையை எடுத்துப் பயன்படுத்திக்கொள்ளும் ஒரு ஏற்பாடு ஆகும்.

(iii) **மாற்றுச்சீட்டை தள்ளுபடி செய்தல்:** சரக்குகளைக் கடன் அடிப்படையில் விற்கும்போது, விற்பவர்

www.Padasalai.Net
www.surabooks.com
orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or
Available at All Leading Bookstores



வாங்குபவரின் பேரில் மாற்றுச்சீட்டை எழுதுகிறார். மாற்றுச்சீட்டு சராசரியாக 15 நாள் முதல் அதிகபட்சம் 180 நாட்கள் வரையிலான காலத்திற்கு வரையறுக்கப்படுகிறது. மாற்றுச்சீட்டை தள்ளுபடி செய்தல் என்பது, அதன் முதிர்வு காலத்திற்கு முன்பாக வங்கிகளிடம் தள்ளுபடியில் விற்றுப் பணம் பெறும் ஒரு நடவடிக்கையைக் குறிக்கிறது.

(iv) **வியாபாரக்கடன்:** வியாபாரக்கடன் என்பது ஒரு வணிகர் பிறிதொருவருக்கு சரக்கு மற்றும் சேவையைப் பெறுவதற்காகத் தருகின்ற கடனைக் குறிக்கும். அதாவது தரப்படும் கடன் வாங்கிய பொருளுக்கான தொகையைப் பொருளை வாங்குபவர் உடனே செலுத்தாமல், ஒரு குறிப்பிட்ட தவணை காலத்திற்குப் பிறகு செலுத்த அனுமதிக்கப்படுகிறார் எனலாம்.

(v) **அடகு கடன்:** கடன் பெறுநர் அவசர நிதித் தேவையைப் பூர்த்தி செய்து கொள்ளத் தனக்கு சொந்தமான பொருளைக் கடன் வழங்குநரிடம் அடகு வைத்துக் கடன் பெறுகிறார். கடனைத் திருப்பிச் செலுத்தும் வரை அடகு வைக்கப்பட்ட பொருள் கடனாளரிடமே இருக்கும்.

**2. ஏதேனும் ஐந்து தனிநபர் முதலீட்டு வழிகளை விளக்குக.** [HY. - 2019; Mar. - 2020; May - 2022]

விடை : (i) **பொது வருங்கால வைப்பு நிதி :**

1. இந்தியாவில் உள்ள மிகச்சிறந்த முதலீட்டு வாய்ப்புகளில், இது மிகப்பாதுகாப்பான நீண்டகால முதலீட்டு வாய்ப்பாகும். இதற்கு முழுமையான வருமான வரி விலக்கு உண்டு.
2. இந்த வருங்கால வைப்பு நிதி கணக்கை வங்கி அல்லது அஞ்சலகத்தில் ஆரம்பிக்கலாம்.
3. இதில் செலுத்தப்படும் தொகை 15 ஆண்டுகளுக்கு முன்பாகத் திரும்பப்பெற முடியாது. பணத்தின் கூட்டு வட்டியைப் பெற முடியும்.

(ii) **பரஸ்பர நிதி :**

1. பரஸ்பர நிதி என்பது நிதிநிறுமங்கள் பொதுமக்களிடமிருந்து பல்வேறு பரஸ்பர நிதித்திட்டங்கள் மூலமாக திரட்டிய பணத்தை, பங்குச் சந்தையில் முதலீடு செய்து, அவை ஈட்டும் இலாபத்தை முதலீட்டாளர்களுக்கு பகிர்ந்தளிக்கும் ஏற்பாடு ஆகும்.
2. இதன் மூலம் சாதாரண மக்கள் மறைமுகமாக பங்குச் சந்தையில் பங்கு பெறும் வாய்ப்பை பெறுகின்றனர்.

(iii) **அசையாச் சொத்தில் முதலீடு செய்தல் :**

1. அசையாச் சொத்தில் முதலீடு செய்தல் என்பது இந்தியாவில் வேகமாக வளர்ச்சி பெற்று வரும் முதலீட்டு துறையாகும்.
2. ஒரு வீட்டு மனை (Plot) அல்லது அடுக்குமாடி குடியிருப்பு (Flat) வாங்குவது என்பது, மிகச் சிறந்த தனி மனித முதலீட்டு முறைகளில் ஒன்றாக விளங்குகிறது.
3. ஒரு நிலப்பிரிவு அமைந்துள்ள இடம் மற்றும் அங்குள்ள பிற அடிப்படை வசதிகளைப் பொறுத்து அசையாச் சொத்தின் மதிப்பு பல மடங்கு உயர்வதற்கான வாய்ப்பு உள்ளது.

(iv) **விலையுயர்ந்த உலோகங்களில் முதலீடு செய்தல்:**

1. தங்கம், வெள்ளி, பிளாட்டினம் போன்ற உலோகங்களில் முதலீடு செய்வது என்பது, மிகப்பழமையான மற்றும் எக்காலத்திற்கும் ஏற்ற முதலீட்டு வழிகளில் ஒன்றாகும்.
2. சந்தை நிலைக்கேற்றாற்போல், உலோகங்களின் மதிப்பு மெதுவாக ஆனால் உறுதியாக அதிகரித்துக் கொண்டு இருக்கிறது.
3. இவ்வகை முதலீட்டில், முதலீட்டாளர்கள் எந்தவித நட்டமும் இல்லாமல் அவற்றை உடனடியாக பணமாக மாற்றிக் கொள்ள இயலும்.

(v) **அஞ்சலகச் சேமிப்பு திட்டங்கள் :**

1. அஞ்சலகத்தில் வெவ்வேறு விதமான சிறுசேமிப்பு திட்டங்கள் உள்ளன. அவை
   அ. அஞ்சலக சேமிப்பு கணக்கு
   ஆ. அஞ்சலக தொடர் வைப்புக் கணக்கு
   இ. அஞ்சலக நிலை வைப்புக் கணக்கு
   ஈ. அஞ்சலக மாதாந்திர வருவாய் கணக்கு திட்டம்
   உ. மூத்த குடிமக்கள் சேமிப்பு திட்டம் ஆகியவை ஆகும்.
2. அஞ்சல் துறையில் உள்ள மேற்கண்ட திட்டங்களில் தங்கள் தேவைகளுக்கேற்ப முதலீட்டாளர்கள் முதலீடு செய்து பயன் பெறலாம்.

## அரசு தேர்வு வினாக்கள்

### 1 மதிப்பெண்

**1. ..... என்பது ஏட்டுக் கடனை விற்று அல்லது அதனை அடகு வைத்து நிதி திரட்டும் ஒரு முறையாகும்.** [June - 2019]

அ. கடன் வசூல் முகமை

ஆ. அடமானம்

இ. தூய கடன்

ஈ. வாடகை கொள்முதல் நிதி

[விடை. (அ) கடன் வசூல் முகமை]

www.Padasalai.Net www.surabooks.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or
Available at All Leading Bookstores



2. ............. வைத்திருப்பவருக்கு வாக்களிக்கும் உரிமை உண்டு. [Mar. - 2020; Sep. - 2021]

அ. கடனீட்டுப்பத்திரம்

ஆ. முன்னுரிமைப் பங்குகள்

இ. நேர்மைப் பங்குகள்

ஈ. பத்திரங்கள் [விடை. (இ) நேர்மைப் பங்குகள்]

## 2 மதிப்பெண்கள்

1. **பொது வைப்பு என்றால் என்ன?** [BEQ; HY. - 2018; Sep. - 2020]

விடை : (i) பொதுமக்கள் வங்கி மற்றும் நிதி நிறுவனங்களிடம் தங்கள் சேமிப்பை வைப்புத் தொகையாக முதலீடு செய்வதற்கு பொது வைப்பு என்று பெயர்.

(ii) நிறுமத்தின் நிலைவைப்பில் முதலீடு செய்ய விரும்பும் முதலீட்டாளர்கள் எந்தவிதச் சடங்குகளையும் பின்பற்றாமல், இதற்கென வழங்கப்படுகின்ற படிவங்களில் கேட்கப்படும் சிறு விவரங்களைப் பூர்த்தி செய்து அளிப்பதன் மூலமாக எளிய முறையில் முதலீடு செய்ய முடியும்.

2. **மாற்றுச் சீட்டை தள்ளுபடி செய்தல் என்றால் என்ன?** [Sep. - 2020]

1. சரக்குகளைக் கடன் அடிப்படையில் விற்கும்போது, விற்பவர் வாங்குபவரின் பேரில் மாற்றுச்சீட்டை எழுதுகிறார்.
2. மாற்றுச்சீட்டு சராசரியாக 15 நாள் முதல் அதிகபட்சம் 180 நாட்கள் வரையிலான காலத்திற்கு வரையறுக்கப்படுகிறது.
3. மாற்றுச்சீட்டை தள்ளுபடி செய்தல் என்பது, அதன் முதிர்வு காலத்திற்கு முன்பாக வங்கிகளிடம் தள்ளுபடியில் விற்றுப் பணம் பெறும் ஒரு நடவடிக்கையைக் குறிக்கிறது.

## 5 மதிப்பெண்கள்

1. **குறிப்பு வரைக அ] உரிமையாளர் நிதி ஆ] கடனாகப் பெறப்பட்ட நிதிகள்.** [BEQ; HY. - 2018]

விடை : (அ) **உரிமையாளர் நிதி :**

(i) நிறுவனங்களின் உரிமையாளரால் வழங்கப்படும் நிதி உரிமையாளர் நிதி எனப்படும்.

(ii) உரிமையாளர் என்பவர் ஒரு தனி மனிதராகவோ, நிறுவனத்தின் கூட்டாளிகளாகவோ அல்லது நிறும பங்குதாரர்களாகவோ இருக்கலாம்.

(iii) இது தனி நபர் முதல், கூட்டாளிகள் முதல், அல்லது பங்குகள் மூலம் திரட்டப்பட்ட நிதியைக் குறிக்கிறது.

(iv) இருத்திவைக்கப்பட்ட இலாபத்தை தொழிலில் மறுமுதலீடு செய்தல் (லாப மறு உழவு) உரிமையாளர் நிதியின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

(v) தொழில் நிறுவனங்களின் வாழ்நாளில் இந்த நிதி திருப்பித் தரப்பட வேண்டியதில்லை. நிறுவனத்தின் நிர்வாகத்தைக் கட்டுப்படுத்தும் உரிமையை உரிமையாளர் நிதி வழங்குகிறது.

(ஆ) **கடனாகப் பெறப்பட்ட நிதிகள் :**

(i) கடனாகப் பெறப்பட்ட நிதிகள் என்பது கடன் அல்லது புற மூலங்களினால் பெறப்பட்ட நிதிகளைக் குறிக்கிறது.

(ii) எடுத்துக்காட்டாக, கடன் பத்திரங்கள், வங்கி மற்றும் நிதி நிறுவனங்களிடம் பெற்ற கடன், பொது வைப்பு, தொழில் கடன், குத்தகை நிதி, வணிகத் தாள், கடன் வசூல் முகமை, முதலியவற்றைக் கூறலாம்.

1. இந்தக் கடன்கள் குறிப்பிட்ட காலத்தில் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும்.
2. கடனாளி குறிப்பிட்ட கால இடைவெளிகளில் ஒப்புக்கொண்ட, வட்டியைச் செலுத்துவதற்குச் சட்டப்படி கடமைப்பட்டவர் ஆவார்.
3. பத்திரங்கள், நிலம், கட்டிடம், சரக்கிருப்பு, வாகனங்கள், இயந்திரம், நிலைச்சொத்து ஆவணங்கள் போன்றவற்றைப் பிணையமாக வைத்து நிதி பெறப்படுகிறது.

2. **குறிப்பு வரைக. அ] இருத்திவைக்கப்பட்ட ஆதாயம் ஆ] குத்தகை நிதி** [Mar. - 2019]

விடை : அ) **இருத்திவைக்கப்பட்ட ஆதாயம் :**

(i) எந்த ஒரு நிறுமமும் தான் ஈட்டிய ஒட்டு மொத்த லாபத்தையும் பங்குதாரர்களுக்குப் பகிர்ந்து அளிப்பதில்லை.

(ii) மாறாக ஈட்டிய வருவாயின் ஒரு பகுதியைப் பங்குநர்களுக்கு பிரித்துக் கொடுத்துவிட்டு, மீதமுள்ள லாபத்தைச் சேமித்து நிறும வளர்ச்சியில் மறுமுதலீடு செய்கின்றன.

(iii) இதற்கு இருத்திவைக்கப்பட்ட ஆதாயம் (அல்லது) இலாபத்தை மறு உழவு செய்தல் (Ploughing Back of Profits) என்று பெயர்.

ஆ) **குத்தகை நிதி :**

(i) குத்தகை நிதி என்பது தேவைப்படும் சொத்துகளைக் குத்தகைக்கு எடுத்து உற்பத்தி நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தும் செயலைக் குறிக்கும்.

(ii) தொடக்க நிலையில் உள்ள சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களைப் பொறுத்தவரையில் தளவாடங்கள், கருவிகள் மற்றும் இதர சொத்துகளை ஒட்டு மொத்தமாக பணம் செலுத்தி வாங்குவது என்பது கடினமான ஒன்றாகும்.

www.Padasalai.Net www.surabooks.com
orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or
Available at All Leading Bookstores



(iii) இப்படிப்பட்ட சூழ்நிலையில் குத்தகை நிதி முறை இந்நிறுவனங்களுக்கு மிகப்பெரிய வரமாக விளங்குகிறது.

(iv) சொத்துகளின் மீது உரிமை கொண்ட நிறுவனங்களுக்கு குத்தகைக்கு விடுபவர் என்று பெயர். சொத்துகளைக் குத்தகைக்கு எடுத்துப் பயன்படுத்தும் தொழில் நிறுவனங்களுக்கு 'குத்தகை எடுத்தவர்' என்று பெயர்.

(v) இங்கு ஒப்பந்தமானது 'குத்தகை ஒப்பந்தம்' என்று அழைக்கப்படுகிறது.

## கூடுதல் வினாக்கள்

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக

**I மதிப்பெண்**

**1. ஒவ்வொரு ஆண்டும் உலக சேமிப்பு நாள் அனுசரிக்கப்படுவது**

அ. அக்டோபர் 31 ஆ. செப்டம்பர் 30

இ. மார்ச் 31 ஈ. ஜனவரி 31

**[விடை. (அ) அக்டோபர் 31]**

**2. இவ்வகைக் கடன் ஒரு சில நேர்மையான மற்றும் நற்பெயர் ஈட்டிய வாடிக்கையாளர்களுக்கு மட்டுமே வழங்கப்படும்.**

அ. பந்தகக் கடன் ஆ. அடகு கடன்

இ. பிணையக் கடன் ஈ. வியாபாரக் கடன்

**[விடை. (ஈ) வியாபாரக் கடன்]**

**3. கொள்முதல் செய்த சரக்கின் மதிப்பை தவணை முறையில் செலுத்த வகை செய்யும் ஏற்பாடே......... எனலாம்.**

அ. பந்தகக் கடன் ஆ. அடகு கடன்

இ. பிணையக் கடன் ஈ. வியாபாரக் கடன்

**[விடை. (ஈ) வியாபாரக் கடன்]**

**4. இவற்றுள் எந்த முறையில் சொத்தின் உடமையை வைத்து கடன் பெறப்படுகிறது.**

அ. அடகு கடன் ஆ. பந்தகக் கடன்

இ. அடமான கடன் ஈ. பிணையக் கடன்

**[விடை. (அ) அடகு கடன்]**

**5. சொத்தின் மூல ஆவணங்களைக் கடனாளரிடம் அடகு வைத்து பெறப்படும் கடன்**

அ. அடகு கடன் ஆ. பந்தகக் கடன்

இ. அடமான கடன் ஈ. வியாபாரக் கடன்

**[விடை. (ஆ) பந்தகக் கடன்]**

**6. ஒருவர் தனக்குச் சொந்தமான தங்க ஆபரணங்களை கடனாளரிடம் கொடுத்து பெறும் கடனுக்கு.......என்று பெயர்.**

அ. அடகு கடன் ஆ. பந்தகக் கடன்

இ. வியாபாரக் கடன்

ஈ. மாற்றுச்சீட்டை தள்ளுபடி செய்தல்.

**[விடை. (அ) அடகு கடன்]**

**7. வணிகத்தாள் (Commercial paper) குறைந்த பட்சம் ......... நாட்கள் முதல் ............... நாட்கள் தவணையில் முதிர்வடையுமாறு வெளியிடப்படுகிறது.** [BEQ]

அ. 7, 365 ஆ. 14, 165

இ. 24, 300 ஈ. 30, 275

**[விடை. (அ) 7, 365]**

**8. நடுத்தர கால நிதி என்பது .............. திருப்பிச் செலுத்துமாறு வழங்கப்படுகிறது.**

அ. 1 ஆண்டுக்கு மேல் 5 ஆண்டுகளுக்குள்

ஆ. 5 ஆண்டுகளுக்கு மேல் 10 ஆண்டுகளுக்குள்

இ. 10 ஆண்டுகளுக்கு மேல்

ஈ. ஓராண்டிற்குள்

**[விடை. (அ) 1 ஆண்டுக்கு மேல் 5 ஆண்டுகளுக்குள்]**

**9. நிதியியல் என்பது**

அ. நிதியைத் திரட்டுவது மட்டும்

ஆ. நிதியை பயனுள்ள வகையில் பயன்படுத்துதல் மட்டும்

இ. நிதியை பல்வேறு துறைகளுக்கு பகிர்ந்தளிப்பதை மட்டும்

ஈ. மேற்சொன்ன அனைத்தையும் குறிக்கும்.

**[விடை. (ஈ) மேற்சொன்ன அனைத்தையும் குறிக்கும்.]**

**10. நீண்டகால நிதி என்பது.............. திருப்பி செலுத்துமாறு வழங்கப்படுகிறது.**

அ. 5 ஆண்டுகளுக்கு மேல்

ஆ. 5 ஆண்டுகளுக்குமேல் ஆனால் 10 ஆண்டுகளுக்குள்

இ. 1 ஆண்டுக்கு மேல் ஆனால் 5 ஆண்டுகளுக்குள்

ஈ. 10 ஆண்டுகளுக்கு மேல்.

**[விடை. (அ) 5 ஆண்டுகளுக்கு மேல்]**

**11. மாற்றுச் சீட்டு சராசரியாக ........... நாள்முதல் அதிகபட்சம்..............நாட்கள் வரையிலான காலத்திற்கு வரையப்படுகிறது.**

அ. 15, 180 ஆ. 20, 200

இ. 30, 150 ஈ. 10, 100

**[விடை. (அ) 15, 180]**

orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores



**12. நடப்புச் சொத்துக்களை வாங்குவதற்குத் தேவையான நிதிக்கான ஒரு உதாரணம்.** [BEQ]

அ. நிலைமுதல்

ஆ. இருத்தி வைக்கப்பட்ட ஆதாயம்

இ. நடைமுறை முதல்

ஈ. குத்தகை நிதி [விடை. (இ) நடைமுறை முதல்]

**13. நிலைச்சொத்துக்களை வாங்க .............. ஐ பயன்படுத்துவது சிறந்த தேர்வாக இருக்கும்.**

அ. கடனீந்தோர்

ஆ. நீண்ட காலக் கடன்கள்

இ. வங்கி மேல்வரைப்பற்று

ஈ. உண்டியலை வட்டம் செய்தல்

[விடை. (ஆ) நீண்ட காலக் கடன்கள்]

## குறுவிடை வினாக்கள் 2 மதிப்பெண்கள்

**1. முதலீடு செய்வதற்கு முன்பு கருத்தில் கொள்ள வேண்டிய காரணிகள் யாவை?**

விடை : பணமாக்கும் தன்மை, இலாபமீட்டும் திறன், முதலீட்டு பாதுகாப்பு இவற்றைக் கருத்தில் கொண்டு சட்டபூர்வமான முறையில், நன்னெறிப்படி புத்திசாலித்தனமாக முதலீடு செய்தல் வேண்டும்.

**2. அஞ்சலங்கள் வழங்கும் பல்வேறு சேமிப்புத் திட்டங்களை குறிப்பிடுக**

விடை : அஞ்சலக சேமிப்பு கணக்கு, அஞ்சலக தொடர் வைப்புக் கணக்கு, அஞ்சலக நிலை வைப்புக் கணக்கு, அஞ்சலக மாதாந்திர வருவாய் கணக்கு திட்டம், மூத்த குடிமக்கள் சேமிப்பு திட்டம், பொது வருங்கால வைப்பு நிதி கணக்கு, கிசான் விகாஸ் பத்திரங்கள், சுகன்யா சம்ரித்தி கணக்கு.

**3. உட்புற நிதி மூலங்களின் கீழ் வகைப்படுத்தப்படும் ஏதேனும் இரண்டு நிதி ஆதாரங்களைக் குறிப்பிடுக.**

விடை : **உட்புற நிதி மூலங்கள் :**

(i) இருத்தி வைக்கப்பட்ட ஆதாயம்.

(ii) பெறுதற்குரிய மாற்றுச் சீட்டுகள்.

(iii) கடனாளிகளிடமிருந்து பெற வேண்டிய தொகை.

(iv) பழைய சொத்துகளை விற்பதன் மூலம் கிடைக்கும் ஆதாயம்.

**4. தொழில் நிதிமூலங்களைத் தேர்ந்தெடுப்பதை வரையறுக்கும் காரணிகளில் ஏதேனும் இரண்டினைக் குறிப்பிடுக.**

விடை : (i) **நிதி திரட்டும் செலவு :**

தொழில் நிறுவனங்கள் நிதி திரட்டுவதற்கு முன்பாக அதனைத் திரட்ட ஆகும் செலவுகளை ஆய்வு செய்ய வேண்டும்.

(ii) **நிறுவனத்தின் நிதித் திறன் :**

நிதிநிலையில் வலுவாக உள்ள நிறுவனங்கள், உடனடியாக வட்டி செலுத்தவும் மற்றும் குறிப்பிட்ட காலத்திற்குள் மூலதனத்தைத் திரும்பப் பெறும் திறனையும் கொண்டுள்ளன.

## சிறுவிடை வினாக்கள் 3 மதிப்பெண்கள்

**1. நீண்ட கால மற்றும் குறுகிய கால நிதிகளுக்கான மூலங்களைப் பட்டியலிடுக.**

விடை : **நீண்ட கால நிதி மூலங்கள் : பங்குகள் :**

(i) நேர்மைப் பங்குகள்,

(ii) முன்னுரிமைப் பங்குகள்,

(iii) கடன் பத்திரங்கள்,

(iv) இருத்திவைக்கப்பட்ட ஆதாயம்,

(v) பொது வைப்பு,

(vi) வணிக வங்கிகளின் இருந்து நீண்ட காலக் கடன் பெறுதல்,

(vii) நிதி நிறுவனக் கடன்கள்

**குறுகிய கால நிதி மூலங்கள் :**

(i) கடன்களும் முன்பணங்களும்

(ii) வங்கி மேல்வரைப்பற்று

(iii) மாற்றுச்சீட்டை தள்ளுபடி செய்தல்

(iv) வியாபாரக்கடன்

(v) அடகு கடன்

(vi) பந்தகக்கடன்

(vii) அடமானம் கடன்

(viii) பிணையக் கடன்

(ix) தூய கடன்

(x) வணிகத்தாள்

(xi) வாடகை கொள் முதல் நிதி

(xii) கடன் வசூல் முகமை

www.Padasalai.Net
www.surabooks.com
orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores



**2. தொழிலில் எந்த நோக்கத்திற்காக நிலை முதல் தேவைப்படுகிறது?**

விடை : (i) நிலைச் சொத்துக்களான நிலம், கட்டிடம், வளாகம், பொறி இயந்திரம், அறைகலன் போன்றவைகளை வாங்குவதற்கு நிலை முதல் தேவை.

(ii) ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிச் செலவுகள், தொடக்கச் செலவுகள் போன்றவைகளுக்காக நிலைமுதல் அவசியம்.

(iii) கண்ணுக்குப் புலனாகச் சொத்துக்களான நற்பெயர், வணிகக்குறி, காப்புரிமை, பதிப்புரிமை போன்றவைகளுக்கு நிலை முதல் அவசியம்.

**3. தொழிலில் நடைமுறை முதலின் தேவை என்ன?**

விடை : (i) ஒரு தொழிலின் அன்றாட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தேவைப்படும் முதல் நடைமுறை முதல் ஆகும்.

(ii) எடுத்துக்காட்டு : தொழிலின் அன்றாட செலவுகளான கச்சாப் பொருட்கள் வாங்குதல், பணியாளர்களுக்கு ஊதியம் மற்றும் கூலி வழங்குதல், தொலைபேசி கட்டணம், உள்தூக்கு கூலி மற்றும் வெளிதூக்கு கூலி, மின்சாரக் கட்டணம், காப்பீட்டு முனைமம், எழுதுபொருள் செலவுகள் ஆகியவற்றை செய்ய தேவைப்படும் முதல் ஆகும்.

## பெருவிடை வினாக்கள் 5 மதிப்பெண்கள்

**1. தொழில் நிதியியலின் இயல்புகள் [தன்மைகள்]அல்லது பண்புகள் யாவை?**

(i) தொழில் நிதி என்பது தொழிலில் பயன்படுத்தப்படும் குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட கால நிதிகளை உள்ளடக்கியதாகும்.

(ii) சிறிய, நடுத்தர மற்றும் பேரளவு நிறுவனங்கள் போன்ற அனைத்து வகை நிறுவனங்களுக்கும் நிதி தேவைப்படுகிறது.

(iii) தொழில் நிதியின் அளவு வியாபார நிறுவனங்களின் தன்மை மற்றும் செயல்பாட்டின் அளவை பொறுத்து மாறுபடும். அதாவது, சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு குறைந்த அளவு நிதி ஆதாரம் போதுமானது. ஆனால் பேரளவு நிறுவனங்கட்கு அதிக நிதி தேவைப்படுகிறது.

(iv) தொழில் நிதியின் தேவை காலத்திற்கு ஏற்ப மாறுபடும். இதை வேறு வகையில் கூறுவதனால், தொழிலும் சுறுசுறுப்பாக இயங்கும். உச்சகட்டக் காலத்தில் தொழில் நிதி தேவை அதிக அளவிலும், மந்தமான காலங்களில் நிதித் தேவை குறைவாகவும் இருக்கும்.

(v) ஒரு நிறுவனத்தின் தொழில் நடவடிக்கைகளின் அளவு மற்றும் அதன் செயல்பாட்டு எல்லையை அந்நிறுவனத்தின் தொழில் நிதியின் அளவே தீர்மானிக்கிறது.

**2. தொழில் நிதியின் முக்கியத்துவத்தை எழுதுக.**

(i) போதுமான நிதியைப் பெற்றுள்ள நிறுவனம் எளிதில் எந்த ஒரு புதிய தொழில் முயற்சியையும் மேற்கொள்ள முடியும்.

(ii) நிறுவனத்தின் பொருட்களை உற்பத்தி செய்யத் தேவையான மூலப்பொருட்களை விநியோகிப்பாளரிடமிருந்து எளிய சொற்பகர்வுகளில் வாங்குவதற்கு, தொழில் நிதி உதவுகிறது.

(iii) நல்ல நிதி நிலையில் உள்ள நிறுவனங்கள், சம்பளம், கூலி, வட்டி, பயன்பாட்டு கட்டணங்கள், செலவுகள் ஆகிய நிதி சார் பொறுப்புகளை உரிய நேரத்தில் தீர்க்க முடியும்.

(iv) வலுவான நிதி நிலையுடன் செயல்படும் நிறுவனங்கள் தொழில் சூழலில் இருந்து எழும் எதிர்பாராத இடர்களான பொருளாதார மந்தநிலை, வணிகச் சுழற்சி, கடுமையான போட்டி, நுகர்வோர் விருப்பத்தில் ஏற்படும் மாற்றங்கள் போன்றவற்றைத் திறமையாக கையாள முடியும்.

(v) வலுவான நிதி நிலையுடன் உள்ள நிறுவனங்கள், திறமையான மனித வளங்களைத் தன் வசம் கவர்ந்திழுக்க முடிகிறது. நவீன தொழில்நுட்பத்தை எந்த இன்னலுமின்றி அறிமுகப்படுத்த முடிகிறது.

**3. ஒரு நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு சேமிப்பு எவ்வாறு உதவுகிறது என்பதை எழுதுக.** [BEQ]

விடை : கீழே கொடுக்கப்பட்டுள்ள கருத்துகள் சேமிப்பின் முக்கியத்துவத்தைத் தெளிவாக்குகின்றன.

(i) வைப்புக் கணக்கு, சிறு சேமிப்பு திட்டங்கள், பரஸ்பர நிதிகள், ஆயுள் காப்பீட்டுத் திட்ட ஆவணங்கள்,அரசு நிறுமங்களின் பத்திரங்கள், பங்குகள் போன்றவற்றில் முதலீடு செய்யப்படும் பணம் ஒரு நாட்டின் ஒட்டுமொத்தப் பொருளாதார வளர்ச்சிக்கு வழிவகுக்கும்.

(ii) வங்கி வைப்புகளில் முதலீடு செய்யப்படும் பணம் பொருளாதாரத்தின் பல்வேறு பிரிவுகளில் வேலைவாய்ப்பினைத் தோற்றுவிக்கவும், வறுமையைப் போக்கவும் உதவியாக இருக்கிறது.

www.Padasalai.Net www.surabooks.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or
Available at All Leading Bookstores



(iii) வங்கி வைப்புகளில் முதலீடு செய்யப்படும் சேமிப்புகள், ஒரு நாட்டின் தொழில் மற்றும் வேளாண் முன்னேற்றத்திற்குப் பெரிதும் உதவுகிறது.

(iv) அரசு கடன் பத்திரங்கள் மற்றும் பலதரப்பட்ட நிறுவனங்களில் முதலீடு செய்யப்படும் சேமிப்புகள், ஒரு நாட்டின் உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தவும், மற்றும் அவற்றை வலுப்படுத்தவும் பெரும் அளவில் பயன்படுகின்றன.

(v) அதிக அளவு சேமிப்பு என்பது, ஒரு நாட்டின் பலத்தைக் குறிக்கிறது. இது பொருளாதார மந்த காலத்தில் ஏற்படக்கூடிய இன்னல்களை எதிர்கொள்ள உதவுகிறது.

(vi) சேமிப்பை அதிகரிப்பதால், பணவீக்கத்தால் ஏற்படும் மோசமான விளைவுகளை மிக எளிதாக எதிர்கொள்ள முடியும். அதன் விளைவாக அதிகரிக்கும் விலைவாசியினைக் கட்டுக்குள் வைத்திருக்க இயலும்.

**4. பல்வேறு நிதி ஆதாரங்களை வகைப்படுத்திப் பட்டியலிடுக.**

**விடை :** தொழில் நிதி ஆதாரங்களை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம் அவை.

(அ) கால அளவின் அடிப்படையில்
(ஆ) உரிமை அடிப்படையில்
(இ) உருவாக்க அடிப்படையில்

**(அ) கால அளவின் அடிப்படையில் :** கால அளவின் அடிப்படையில் மூன்று வகைகளாக பிரிக்கலாம்.

(i) குறுகிய கால நிதி
(ii) நடுத்தர கால நிதி
(iii) நீண்டகால நிதி

(i) **குறுகிய கால நிதி :** கடன்களும் முன்பணங்களும், வங்கி மேல்வரைப்பற்று, மாற்றுச்சீட்டை தள்ளுபடி செய்தல், வியாபாரக்கடன், அடகு கடன், பந்தகக் கடன், அடமான கடன், பிணையக் கடன், தூய கடன் / பிணையமற்ற கடன், வணிகத்தாள், வாடகை கொள்முதல் நிதி, கடன் வசூல் முகமை போன்றவை குறுகிய கால நிதியின் கீழ் உள்ளடங்கும்.

(ii) **நடுத்தர கால நிதி :** வங்கிக் கடன், நிதி நிறுவனக் கடன், குத்தகை நிதி போன்றவை நடுத்தர கால நிதியின் கீழ்வருபவை.

(iii) **நீண்டகால நிதி :** நீண்ட கால நிதி ஆதாரங்கள் – பங்குகள், – நேர்மைப் பங்குகள், முன்னுரிமைப் பங்குகள், கடன் பத்திரங்கள், இருத்தி வைக்கப்பட்ட ஆதாயம், பொது வைப்பு, வணிக வங்கிகளில் இருந்து நீண்ட காலக் கடன் பெறுதல், நிதி நிறுவனக் கடன்கள் போன்றவை அடங்கும்.

**(ஆ) உரிமை அடிப்படையில் :**

உரிமை அடிப்படையில் தொழில் நிதியை இரண்டு பிரிவுகளாக பிரிக்கலாம்.

(i) உரிமையாளர் நிதி
(ii) கடனாகப் பெற்றப்பட்ட நிதிகள்.

**(இ) உருவாக்குதல் அடிப்படையில் :**

இவை இரண்டு பிரிவுகளாக பிரிக்கப்படும்

(i) அக நிதி ஆதாரங்கள்
(ii) புற நிதி ஆதாரங்கள்

☆☆☆

www.Padasalai.Net
www.surabooks.com
orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or
Available at All Leading Bookstores

# அத்தியாயம் 20 பன்னாட்டு நிதி

## பொருளடக்கம்

20.1. பன்னாட்டு நிதி
20.2. அந்நிய நேரடி முதலீடு
20.3. பன்னாட்டு நிதிச் சந்தை
20.4. உலகளாவிய வைப்பு இரசீதுகள்
20.5. அமெரிக்க வைப்பு இரசீதுகள்
20.6. அந்நியச் செலாவணி மாற்றுப் பத்திரங்கள்

## பயிற்சி

### I. சரியான விடையைத் தேர்ந்தெடு

**1. அயல்நாட்டு பத்திர வெளியீட்டு உரிமை தரும் ஆவணம்.**

அ. உரிமை சான்றிதழ் ஆ. வைப்பு இரசீது
இ. உரிமை இரசீது ஈ. மாற்றுப்பத்திரம்

**[விடை. (ஆ) வைப்பு இரசீது]**

**2. வைப்பு இரசீது வெளியீடு இதன் தேவை அதிகரிப்பை அடிப்படையாகக் கொண்டது.**

அ. பன்னாட்டு சந்தை ஆ. உள்ளூர் சந்தை
இ. தற்போதைய பங்குதாரர்கள்
ஈ. மேற்கண்ட அனைத்தும்

**[விடை. (அ) பன்னாட்டு சந்தை]**

**3. அமெரிக்க வைப்பு இரசீது வெளியிடப்படுவது** [BEQ; HY. - 2018; June - 2019]

அ. கனடா
ஆ. சீனா
இ. இந்தியா
ஈ. அமெரிக்க ஐக்கிய நாடுகள்

**[விடை. (ஈ) அமெரிக்க ஐக்கிய நாடுகள்]**

**4. அமெரிக்க சந்தை தவிர்த்து, உலகச் சந்தையில் வெளியிடப்படும் வைப்பு இரசீது** [BEQ]

அ. உலகளாவிய வைப்பு இரசீது
ஆ. பன்னாட்டு வைப்பு இரசீது
இ. வெளிச்சந்தை வைப்பு இரசீது
ஈ. மாற்றுப்பத்திரம்

**[விடை. (அ) உலகளாவிய வைப்பு இரசீது]**

**5. …………… என்பது நிறுமங்கள் அயல்நாட்டு செலாவணியைப் பெறுவதற்காகவே வெளியிடப்படும் ஒரு சிறப்பு வகை பத்திரமாகும்.** [Mar. & HY. - 2019]

அ. அரசு பத்திரங்கள்
ஆ. அந்நியச் செலாவணி மாற்று பத்திரம்
இ. பெருநிறுவன பத்திரங்கள்
ஈ. உலகளாவிய வைப்பு இரசீது

**[விடை. (ஆ) அந்நியச் செலாவணி மாற்று பத்திரம்]**

### II. குறுவிடை வினாக்கள்

**1. அந்நிய நிறுவன முதலீட்டாளர்கள் என்பது குறித்து நீ அறிவது யாது?**

விடை : ஒரு தனிப்பட்ட முதலீட்டு நிறுவனம், முதலீட்டு நிதி, ஓய்வு கால நிதி ஆகியவை, வேறு நாட்டின் நிதிச்சந்தையில் முதலீடு செய்வதே, அயல்நாட்டு நிறுவன முதலீடு ஆகும். இது **குறுகிய காலத்தில் திரும்பப் பெறும்** வாய்ப்பு உள்ள முதலீடு ஆகும்.

**2. வைப்பு இரசீது என்றால் என்ன?** [June - 2019]

விடை : ஒரு வைப்புத் தொகை ரசீது என்பது, வெளிநாட்டு நிறுவனத்தின் நேர்மைப் பங்குகள் வாங்கியதற்கு சான்றாக, வங்கியால் வழங்கப்படும் ஒரு மாற்றுமுறை ஆவணமாகும்.



orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores



**3. உலகளாவிய வைப்பு இரசீது என்றால் என்ன?**

விடை : (i) அந்நிய நாட்டு முதலீட்டாளரிடமிருந்து நிதி திரட்டும் நோக்குடன், அந்நிய செலாவணியில், வெளிநாட்டில் வெளியிடப்படும் ஒரு மாற்று முறை ஆவணமே உலகளாவிய வைப்பு ரசீது எனப்படும்.

(ii) இது அமெரிக்கா தவிர பிற நாடுகளில் உள்ள வெளிநாட்டுப் பங்குச் சந்தைகளில் பட்டியலிடப்பட்டு வர்த்தகம் செய்யப்படுகிறது.

**4. அமெரிக்க வைப்பு இரசீது என்றால் என்ன?** [BEQ]

விடை : அமெரிக்க வைப்பு ரசீது என்பது, அமெரிக்காவைச் சாராத ஒரு நிறுமம், அமெரிக்க நிதிச்சந்தையில் கலந்து கொள்ளும் பொருட்டும், அமெரிக்க குடிமக்கள் அந்நியப் பிணையங்களில் முதலீடு செய்யும் வகையிலும், டாலரில் மதிப்பிடப்பட்டிருக்கும் மாற்றத்தக்க பிணையமாகும்.

## III. சிறுவிடை வினாக்கள்

**1. பன்னாட்டு நிதியின் முக்கியத்துவம் யாது? (ஏதேனும் 3)**

விடை : (i) பன்னாட்டு நிதியியல் பல்வேறு நாடுகளின் நாணய ஒப்பீட்டு மதிப்புக்களையும் மற்றும் அதன் மாற்று விகிதங்களையும் நிர்ணயிப்பதில் உதவி புரிகிறது.

(ii) இது பல்வேறு நாடுகளின் பணவீக்க வீதங்களை ஒப்பிட்டு, எந்த நாட்டுப் பத்திரங்களில் முதலீடு செய்வது என்ற முடிவுகளை முதலீட்டாளர்கள் எடுக்க உதவுகிறது.

(iii) இது பல்வேறு நாடுகளின் பொருளாதார நிலைமைகளை அறிந்து கொள்வதற்கும் மற்றும், சந்தை நிலவரங்களை தெரிந்து கொள்வதற்கும் உதவுகிறது.

**2. அந்நியச் செலாவணி மாற்றுப்பத்திரம் என்றால் என்ன?**

விடை : (i) அந்நியச் செலாவணி மாற்று பத்திரம் என்பது உள்நாட்டு பணத்தைத் தவிர, பிற நாட்டு நாணய மதிப்பில் வெளியிடப்படும் சிறப்புமிக்க ஒரு வகை பத்திரம் ஆகும்.

(ii) வேறுவகையில் சொல்வதானால் நிறுமங்கள் அயல்நாட்டு செலாவணியைப் பெறுவதற்காக வெளியிடப்படுவதே அந்நியச் செலாவணி மாற்றுப்பத்திரம் ஆகும்.

**3. அந்நிய நேரடி முதலீட்டினால் உண்டாகும் தீமைகளை விவரி?**

விடை : (i) **உள்நாட்டு வளங்களைத் தீர்த்தல் :**

1. அந்நிய நேரடி முதலீட்டாளர்கள் வரவேற்கும் நாடுகளில் உள்ள நீர், காடுகள், தாதுப்பொருட்கள் ஆகிய இயற்கை வளங்களை விரைவில் தீர்த்து விடும் அபாயம் உள்ளது.
2. இதனால் உள்நாட்டில் உள்ள சாதாரண குடிமகனுக்கு தேவைப்படும் இயற்கை வளங்கள் கிடைக்காமல் போகலாம்.

(ii) **அதிகப்படியான முதல் வெளியேறுதல் :**

1. அயல்நாட்டு நிறுமங்கள் பங்காதாயம், குத்தகைக் கட்டணம் போன்றவை மூலம் பெருமளவு உள்நாட்டு பணத்தை வெளியே கொண்டு செல்கின்றன.
2. இதனால் உள்நாட்டில் பணப்புழக்கம் குறைந்துவிடும் வாய்ப்புள்ளது.

(iii) **தொழில் நுட்பத்தை மாற்றாமை :**

1. சில அயல்நாட்டு நிறுவனங்கள் வளரும் நாடுகளுக்குத் தாங்கள் கண்டுபிடித்து வைத்துள்ள தொழில் நுட்பத்தை அப்படியே தருவதில்லை.
2. அவை பெரும்பாலும் இரண்டாம் தர தொழில்நுட்பத்தையே, முதலீடு செய்யும் நாட்டிற்கு கொண்டு வருகின்றன.
3. உயர் தொழில்நுட்பத்தினை தங்களின் சொந்த நாட்டிலேயே வைத்துக்கொள்கின்றன.

(iv) **உழைப்பு சுரண்டல் :**

1. அயல்நாட்டு நிறுமங்கள் வளரும் நாடுகளில் உள்ள தொழிலாளர்களின் உழைப்பை, மிகக்குறைவான கூலி மற்றும் ஊதியம் கொடுத்து சுரண்டி வருகின்றன.
2. அவர்கள் உள்ளூரில் உள்ள மக்களை, மேலாண்மையில் உயர்பதவியில் அமர்த்துவதில்லை.
3. தம் சொந்த நாட்டு தொழிலாளர்களுக்கு வழங்கும் எந்தச் சலுகைகளையும் முதலீடு செய்யும் நாடுகளில் உள்ள தொழிலாளர்களுக்கு அந்நிறுவனங்கள் வழங்குவதில்லை.

(v) **ஏகாதிபத்தியச் சூழலை உருவாக்குதல் :**

1. அந்நிய நேரடி முதலீட்டின் மூலம் ஒரு நாட்டில் நுழையும் பன்னாட்டு நிறுமங்கள், அந்த நாடுகளின் சந்தைகளைக் கைப்பற்றி ஏகாதிபத்திய நிலையை ஏற்படுத்துகின்றன.
2. அவைகள் அந்நிய முதலீட்டை பெறும் ஒரு நாட்டில் ஆரோக்கியமான போட்டிச்சூழலை உருவாக்குவதில்லை மாறாகப் போட்டியைப் அறவே ஒழித்து தம் மேலாதிக்கத்தைச் செலுத்துவதாகும்.

## IV. பெருவிடை வினாக்கள்

**1. உலகளாவிய வைப்பு இரசீதிற்கும் அமெரிக்க வைப்பு இரசீதிற்கும் உள்ள வேறுபாடுகள் யாவை? (ஏதேனும் 5)** [BEQ; June - 2019]

விடை : உலகளாவிய வைப்பு இரசீதிற்கும் அமெரிக்க வைப்பு இரசீதிற்கும் உள்ள வேறுபாடுகள்

www.Padasalai.Net www.surabooks.com
orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or
Available at All Leading Bookstores



| வேறுபாட்டின் அடிப்படைகள் | உலகளாவிய வைப்பு இரசீது (GDR) | அமெரிக்க வைப்பு இரசீது (ADR) |
|---|---|---|
| மதிப்பிடுதல் | இது எந்த நாட்டுப் பணத்தின் மதிப்பிலும் குறிப்பிடப்படும் | இது அமெரிக்க டாலரில் மட்டுமே குறிப்பிப்படும். |
| யாருக்கு இது வெளியிடப்படும் | ஒன்று அல்லது அதற்குமேல் உள்ள சந்தையில் உள்ள முதலீட்டாளருக்கு வெளியிடப்படும் | அமெரிக்கக் குடிமகனாக உள்ள முதலீட்டாளருக்கு மட்டுமே வெளியிடப்படும். |
| எங்குப் பட்டியலிடப்படும் | அமெரிக்கா தவிர்த்த இதர பங்கு மாற்றகங்கள். (எ.கா) இலண்டன் பங்கு மாற்றக வாரியம், லக்சம்பர் பங்கு மாற்றக வாரியம் போன்றவை | அமெரிக்கப் பங்கு மாற்றகங்களில் மட்டும் பட்டியலிடப்படும். |
| ஒப்புதல் | உலகளாவிய இரசீதை வெளியிட அந்நியச் செலாவணி கட்டுப்பாட்டு வாரியத்தின் ஒப்புதல் தேவையில்லை | அமெரிக்க வைப்பு இரசீதை வெளியிட அமெரிக்கப் பிணையங்கள் மற்றும் மாற்றக இயக்கத்தின் ஒப்புதல் தேவை. |
| வெளியீட்டு வழிமுறை | உலகளாவிய இரசீதுகள் பட்டியலிடப்பட்ட முழுமையான எண்ணிக்கை உடைய நேர்மைப்பங்குகளாக வெளியிடப்படும். | பல அமெரிக்க வைப்பு இரசீதுகள் தொடர்புடைய சிறு அலகுகளாக பிரிக்கப்பட்ட நேர்மை பங்குகளாக வெளியிடப்படும் |
| மாற்றுகைத்தன்மை | உலகம் முழுவதும் மாற்றக் கூடியது. | அமெரிக்காவில் மட்டும் மாற்றத்தக்கது. |

**2. அந்நியச் செலாவணி மாற்றுப்பத்திரத்தின் ஏதேனும் ஐந்து சிறப்பியல்புகளை விவரி.** [HY-2019]

**விடை : அந்நியச் செலாவணி மாற்று பத்திரத்தின் சிறப்பம்சங்கள்:**

(i) அந்நியச் செலாவணி மாற்று பத்திரம் என்பது இந்திய நிறுமங்கள் **அயல்நாட்டு செலாவணியில் வெளியிடும்** ஒரு வகை பத்திரம் ஆகும்.

(ii) இவை கடனீட்டுப்பத்திரங்களைப் போல பட்டியலிடப்பட்டு அயல்நாட்டு பங்கு மாற்றங்களில் வியாபாரம் செய்யப்படுகின்றன.

(iii) இது **மாற்றத்தக்க கடன் ஆவணமாகும்.** இதனுடன் வட்டிக்கான அனுமதி உரிமை ஆணை இணைந்திருக்கும்.

(iv) இதனை வைத்திருப்பவர்களுக்கு முன் குறித்த விலையில் குறிப்பிட்ட எண்ணிக்கையில் பங்குகளாக மாற்றிக்கொள்ளவும் உரிமை தரப்படுகிறது.

(v) குறிப்பிட்ட காலத்திற்குபின் இவைகளை நேர்மை பங்குகளாகவோ அல்லது வைப்பு இரசீதாகவோ மாற்றிக்கொள்ள முடியும்.

(vi) இந்தப் பத்திரம் மூலம் பெறப்படும் நிதியை, வெளிப்புற வணிகக் கடன் தொடர்பாக இயற்றப்பட்டுள்ள வழிகாட்டுதல் நெறிமுறைப்படியே பயன்படுத்தப்பட வேண்டும்.

## அரசு தேர்வு வினாக்கள்

**1. அந்நியச் செலாவணி மாற்றுப் பத்திரம் என்றால் என்ன?** [Mar. - 2020]

**விடை :** நிறுமங்கள் அயல்நாட்டுச் செலாவணியைப் பெறுவதற்காக வெளியிடப்படும் ஒரு சிறப்புமிக்கப் பத்திரமே "அந்நியச் செலாவணி மாற்றுப் பத்திரம்" எனப்படும்.

### 3 மதிப்பெண்கள்

**1. அமெரிக்க வைப்பு இரசீதின் ஏதேனும் மூன்று சிறப்பம்சங்களை விளக்குக.** [Sep. - 2020]

**விடை :** (i) அமெரிக்க வைப்பு இரசீதுகள் **அமெரிக்க டாலரில்** மட்டுமே குறிப்பிடப்படும்.

(ii) அமெரிக்க குடிமக்களாக இருக்கிற முதலீட்டாளருக்கு மட்டுமே வெளியிடப்படும்.

(iii) வெளியிடும் வைப்பக வங்கி அமெரிக்காவில் இருக்க வேண்டும்.

www.Padasalai.Net www.surabooks.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores



## கூடுதல் வினாக்கள்

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக

1 மதிப்பெண்

**1. அமெரிக்காவைச் சாராத ஒரு நிறுமம் அமெரிக்க நிதிச்சந்தையில் நிதி திரட்ட வெளியிடும் இரசீது............**

அ. அமெரிக்க வைப்பு இரசீது
ஆ. இந்திய வைப்பு இரசீது
இ. ஆஸ்திரேலிய வைப்பு இரசீது
ஈ. லண்டன் வைப்பு இரசீது

**[விடை. (அ) அமெரிக்க வைப்பு இரசீது]**

**2. பன்னாட்டு நிதியியல் என்பது ................**

அ. பல நாடுகளுக்கிடையேயான நிதிப்பரிமாற்றம்.
ஆ. அந்நிய நேரடி முதலீடு மற்றும் நாணய மாற்று விகிதம்.
இ. பன்னாட்டு நிறுவனங்களின் நிதி மேலாண்மையில் ஏற்படும் சிக்கல்களுக்கு தீர்வு காண்பது.
ஈ. மேற்கூறிய அனைத்தும்

**[விடை. (ஈ) மேற்கூறிய அனைத்தும்]**

**3. இவற்றுள் எவை பன்னாட்டு நிதித்தேவையை பூர்த்தி செய்யும் முகமை அல்ல?**

அ. பன்னாட்டு நிதிக்கழகம்
ஆ. ஏற்றுமதி இறக்குமதி வங்கி
இ. ஆசிய வளர்ச்சி வங்கி
ஈ. நிதி நிறுவனங்கள்

**[விடை. (ஈ) நிதி நிறுவனங்கள்]**

**4. .......... என்பது, வெளிநாட்டு நிறுவனத்தின் நேர்மை பங்குகளை வாங்கியதற்குச் சான்றாக, வங்கியால் வழங்கப்படும், ஒரு மாற்று முறை ஆவணமாகும்.**

அ. உரிமை சான்றிதழ் ஆ. உரிமை இரசீது
இ. வைப்பு இரசீது
ஈ. மேற்கண்ட ஏதுமில்லை

**[விடை. (இ) வைப்பு இரசீது]**

**5. இவற்றுள் எது அந்நிய நேரடி முதலீட்டின் நன்மை அல்ல?**

அ. தேசிய வருவானத்தை உயர்த்துதல்
ஆ. பாதகமான செலுத்து நிலையைத் தீர்த்தல்
இ. வேலைவாய்ப்புகளை உருவாக்குதல்
ஈ. அதிகப்படியான முதல் வெளியேறுதல்

**[விடை. (ஈ) அதிகப்படியான முதல் வெளியேறுதல்]**

**6. கீழ்க்கண்டவற்றில் எது உலக முழுவதும் மாற்றக்கூடிய இரசீது?** [BEQ]

அ. உலகளாவிய வைப்பு இரசீது
ஆ. அமெரிக்க வைப்பு இரசீது
இ. உரிமை இரசீது
ஈ. மேற்கண்ட ஏதுமில்லை

**[விடை. (அ) உலகளாவிய வைப்பு இரசீது]**

**7. அமெரிக்க வைப்பு இரசீது மதிப்பிடப்படுவது** [BEQ]

அ. டாலரில் மட்டும் (அமெரிக்க)
ஆ. ரூபாயில் மட்டும்
இ. அனைத்து நாடுகளின் பண மதிப்பில்
ஈ. மேற்கண்ட ஏதுமில்லை

**[விடை. (அ) டாலரில் மட்டும் (அமெரிக்க)]**

### குறுவிடை வினாக்கள் 2 மதிப்பெண்கள்

**1. இந்திய நிறுமங்கள் தங்களுக்குத் தேவையான நிதியை, அயல்நாட்டு நிதிச்சந்தையிலிருந்து எந்த வழிமுறைகள் மூலமாக திரட்டுகின்றன?**

விடை : பின்வரும் வழிமுறைகள் மூலமாக இந்திய நிறுமங்கள் தங்களுக்குத் தேவையான நிதியை பெறுகின்றன. அவை,

(i) வணிக வங்கிகள்
(ii) பன்னாட்டு முகமைகளும் வளர்ச்சி வங்கிகளும்
(iii) பன்னாட்டு மூலதன சந்தை
(iv) வைப்பு இரசீதுகள்

**2. அந்நிய நேரடி முதலீடு என்றால் என்ன?** [BEQ]

விடை : ஒரு நாட்டில் உள்ள தனிநபரோ அல்லது ஒரு நிறுமமோ, அயல்நாட்டில் உள்ள நிறுவனத்தின் வணிகச் சொத்துக்களின் உரிமைபெறும் நோக்குடன் அல்லது நிறுவனத்தை கட்டுப்படுத்தும் நோக்குடன் முதலீடு செய்வது அல்லது புதிய வணிக முயற்சியை ஏற்படுத்துவது அந்நிய நேரடி முதலீடு எனப்படும்.

### சிறுவிடை வினாக்கள் 3 மதிப்பெண்கள்

**1. உலகளாவிய வைப்பு இரசீதை வெளியிடும் வழிமுறைகள் யாவை?**

விடை : **உலகளாவிய வைப்பு இரசீதை வெளியிடும் வழிமுறைகள் : படிநிலைகள் :**

(i) உலகளாவிய வைப்பு இரசீதை வெளியிடும் நிறுமம், தன் பங்குகளை உள்நாட்டு காப்பக வங்கிக்கு மாற்றித்தரும்.
(ii) பிறகு உள்நாட்டு காப்பக வங்கி அயல்நாட்டில் உள்ள வைப்பு வங்கிக்கு உலகளாவிய வைப்பு இரசீதை வெளியிட வேண்டுகோள் வைக்கும்.
(iii) அயல்நாட்டு வைப்பு வங்கி உள்நாட்டு செலாவணியில் குறிப்பிடப்பட்டிருக்கும் பங்குகளை அந்நாட்டு செலாவணியின் மதிப்பில் அல்லது பொதுவாக ஏற்கப்படும் செலாவணியில் மாற்றும்.
(iv) இறுதியாக, அயல்நாட்டு வைப்பு வங்கி இந்தப் பங்குகளை விரும்பும் முதலீட்டாளர்களுக்கும் விற்கும்.

www.Padasalai.Net www.surabooks.com

orders@surabooks.com Ph:8124201000/8124301000

Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or
Available at All Leading Bookstores



**2. அமெரிக்க வைப்பு இரசீதை வெளியிடும் முறைகள் பற்றி கூறுக?**

**விடை : அமெரிக்க வைப்பு இரசீதை வெளியிடும் முறைகள் : படிநிலைகள் :**

(i) முதலாவதாக நிறுமங்கள் தங்களுடைய பங்குகளின் உரிமையை உள்நாட்டு வைப்பக வங்கிகளுக்கு மாற்றித்தர வேண்டும்.

(ii) பிறகு உள்நாட்டு வைப்பக வங்கிகள் அமெரிக்க வைப்பு வங்கிகளுக்கு வேண்டுகோள் விடுக்கும்.

(iii) ரூபாயின் மதிப்பில் இருக்கும் பங்குகளை டாலர் மதிப்பில் வைப்பு ரசீதுகளாக அமெரிக்க வைப்பு வங்கிகள் மாற்றித்தரும்.

(iv) இறுதியாக, தேவைப்படும் முதலீட்டாளருக்கு இவற்றை அமெரிக்க வைப்பக வங்கிகள் வெளியிடும்.

**3. எந்தெந்த வடிவங்களில் அந்நிய நேரடி முதலீடு செய்யப்படுகிறது?**

**விடை :** பின்வரும் வடிவங்களில் அந்நிய நேரடி முதலீடு செய்யப்படுகிறது.

(i) அந்நிய நாட்டில் புதிய கிளை அல்லது புதிய நிறுவனங்களை ஏற்படுத்துவது.

(ii) இப்போது இருக்கிற நிறுவனங்களுக்கு விரிவாக்கமாக, புதிய கிளை அல்லது துணை நிறுவனத்தை அந்நிய நாட்டில் ஏற்படுத்துவது.

(iii) அந்நிய நாட்டில் இருக்கிற நிறுவனங்களை வாங்குவது.

**4. உலகளாவிய வைப்பு இரசீதின் ஏதேனும் மூன்று சிறப்பம்சங்களை விளக்குக.**

**விடை :** (i) இது மற்ற மாற்றுமுறை சாதனங்களைப் போலவே தடையின்றி வியாபாரம் செய்யப்படும் மாற்றுமுறை பிணையமாகும்.

(ii) உலகளாவிய வைப்பு இரசீதுகள் அனைத்து நாட்டு முதலீட்டாளர்களுக்கும், அவர்கள் நாட்டுச் செலாவணியில் அல்லது பொதுவாக ஏற்கப்படும் செலாவணியில் வெளியிடப்படுகிறது.

(iii) உலகளாவிய வைப்பு இரசீதை வைத்திருப்பவர் அதில் குறிப்பிடப்பட்டுள்ள பங்கிற்கு உரிய பங்காதாயம் மற்றும் பங்கு மேலூதியம் பெற உரிமை பெற்றவராவார்.

**5. அந்நிய நேரடி முதலீட்டின் ஏதேனும் மூன்று நன்மைகளை விளக்குக. [BEQ]**

**விடை : நன்மைகள் :**

(i) **தேசிய வருமானத்தை உயர்த்துதல் :** வளர்ந்து வரும் நாடுகள் தங்களின் தேசியப் பொருளாதார வளர்ச்சி வீதத்தை அதிகரித்துக்கொள்ள இந்த அந்நிய நேரடி முதலீடுகள் பெரிதும் உதவுகின்றன.

(ii) **பாதகமான செலுத்து நிலையைத் தீர்த்தல் :** அந்நிய நேரடி முதலீடு ஒரு நாட்டிற்கு, அயல்நாட்டு செலவாணிகளைப் பெற்றுத்தருகிறது. இது அந்த நாட்டின் பாதகமான அயல்நாட்டு செலுத்து நிலையைத் தீர்க்க உதவுகிறது.

(iii) **வேலை வாய்ப்புகளை உருவாக்குதல் :** வளர்ந்து வரும் நாடுகளில் அந்நிய நேரடி முதலீடு, உயர்திறன் தேவைப்படும் பணிகளில், ஏராளமான வேலைவாய்ப்புகளை உருவாக்குகிறது.

**6. அந்நிய நேரடி முதலீட்டின் ஏதேனும் மூன்று தீமைகளை விளக்குக.**

**விடை : அந்நிய நேரடி முதலீட்டின் நன்மைகள் :**

(i) **தேசிய வருமானத்தை உயர்த்துதல் :** வளர்ந்து வரும் நாடுகள் தங்களின் தேசியப் பொருளாதார வளர்ச்சி வீதத்தை அதிகரித்துக்கொள்ள இந்த அந்நிய நேரடி முதலீடுகள் பெரிதும் உதவுகின்றன.

(ii) **பாதகமான செலுத்து நிலையைத் தீர்த்தல் :** அந்நிய நேரடி முதலீடு ஒரு நாட்டிற்கு அயல்நாட்டு செலவாணிகளைப் பெற்றுத் தருகிறது. இது அந்த நாட்டின் பாதகமான அயல்நாட்டு செலுத்து நிலையைத் தீர்க்க உதவுகிறது.

(iii) **பொருளாதார முன்னேற்றத்தைத் துரிதப்படுத்துதல்:** அந்நிய நேரடி முதலீடு, தொழில்நுட்பம், புதிய மேலாண்மைத்திறன், சந்தையிடுகை திறன்கள் ஆகியவற்றை முதலீடு செய்யும் நாட்டிற்கு கொண்டு வருகிறது. இவை வளர்ந்து வரும் நாடுகளின் பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்த உதவுகின்றன.

(iv) **வேலைவாய்ப்புகளை உருவாக்குதல் :** வளர்ந்து வரும் நாடுகளில் அந்நிய நேரடி முதலீடு, உயர்திறன் தேவைப்படும் பணிகளில், ஏராளமான வேலைவாய்ப்புகளை உருவாக்குகிறது.

(v) **வரவேற்கும் நாட்டில் போட்டியை ஊக்குவித்தல்:** அந்நிய நேரடி முதலீட்டின் மூலம், வரவேற்கும் நாட்டில் ஆரோக்கியமான போட்டி சூழல் உருவாகும் வாய்ப்புள்ளது. இதனால் வளரும் நாடுகளில் உள்ள நிறுவனங்கள் மிகுந்த செயல்திறனோடும் ஆற்றலோடும் செயல்பட வாய்ப்பு ஏற்படுகிறது. பொருட்கள் உயர் தரத்துடன் நியாயமான விலையில் கிடைக்க வாய்ப்புள்ளது.

**பெருவிடை வினாக்கள் 5 மதிப்பெண்கள்**

**1. பன்னாட்டு நிதியின் முக்கியத்துவத்தை விவரி.**

**விடை :** (i) பன்னாட்டு நிதியியல் பல்வேறு நாடுகளின் நாணய ஒப்பீட்டு மதிப்புகளையும் மற்றும் அதன் மாற்று விகிதங்களையும் நிர்ணயிப்பதில் உதவி புரிகிறது.

(ii) இது பல்வேறு நாடுகளின் பணவீக்க வீதங்களை ஒப்பிட்டு, எந்த நாட்டுப் பத்திரங்களில் முதலீடு செய்வது என்ற முடிவுகளை முதலீட்டாளர்கள் எடுக்க உதவுகிறது.

(iii) இது பல்வேறு நாடுகளின் பொருளாதார நிலைமைகளை அறிந்து கொள்வதற்கும் மற்றும் சந்தை நிலவரங்களை தெரிந்து கொள்வதற்கும் உதவுகிறது.

(iv) பன்னாட்டு நிதி அறிக்கை அமைப்பின் (IFRS) மூலம் பல்வேறு நாடுகளின் நிதி அறிக்கைகளை ஒப்பாய்வு செய்ய உதவுகிறது.

(v) இது பன்னாட்டு நிதி அமைப்புகளின் அடிப்படை கட்டமைப்புகளைப் அறிந்து கொள்ளவும் மற்றும் அவற்றிடையே சீர் நிலையைப் பராமரிப்பதற்கும் உதவுகிறது.

(vi) பன்னாட்டுப் பணவியல் நிதியம், உலக வங்கி போன்ற நிதி அமைப்புகள், பல்வேறு நாடுகளிடையே எழும் நிதி சார்ந்த பிரச்சினைகளில் தலையிட்டு அவற்றை சுமூகமாக தீர்க்க உதவுகின்றன.

☆☆☆

orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores

# அத்தியாயம் 21 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மற்றும் சுய உதவிக் குழுக்கள்

## பொருளடக்கம்

21.1. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள்
21.2. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் பங்கு மற்றும் முக்கியத்துவம்
21.3. இந்தியப் பொருளாதார வளர்ச்சியில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் பங்கு
21.4. தமிழ்நாட்டில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள்
21.5. சுய உதவிக் குழுக்கள்

www.Padasalai.Net
www.surabooks.com

## பயிற்சி

### I. சரியான விடையைத் தேர்ந்தெடு

**1. குறு, சிறு, மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் மேம்பாட்டு சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு** [Mar. - 2019 & 2020]

அ. 2004 ஆ. 2007
இ. 2006 ஈ. 2008

[விடை. (இ) 2006]

**2. நாட்டின் பொருளாதாரத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் ................. பங்களிப்பு இன்றியமையாதவை.**

அ. தொழில்துறை உற்பத்தி
ஆ. ஏற்றுமதி
இ. வேலைவாய்ப்பு
ஈ. மேற்கூறிய அனைத்தும்

[விடை. (ஈ) மேற்கூறிய அனைத்தும்]

**3. சுய உதவிக் குழுக்கள் தங்கள் சேமிப்புத் தொகையை வசூலித்து.............. ஏற்படுத்த வேண்டும்.** [BEQ; HY. - 2018]

அ. பொது நிதி
ஆ. குழு தொகுப்பு நிதி
இ. குழு நிதி
ஈ. மேலே குறிப்பிடப்பட்ட எதுவும் இல்லை

[விடை. (ஆ) குழு தொகுப்பு நிதி]

**4. சுய உதவிக் குழுக்களுக்குக் கடன் அளிக்க ................ வேறுபட்ட முறைகள் உள்ளன.** [HY-2019; May-2022]

அ. 1 ஆ. 2
இ. 3 ஈ. 4

[விடை. (இ) 3]

**5. உற்பத்தி துறையின் கீழ்ஒரு குறு நிறுவனத்தின் முதலீட்டு உச்ச வரம்பு.................லட்சத்திற்கு மிகக்கூடாது.** [BEQ; June - 2019]

அ. 10 ஆ. 20
இ. 25 ஈ. 50

[விடை. (இ) 25]



orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or
Available at All Leading Bookstores



## II. குறுவிடை வினாக்கள்

**1. குறு நிறுவனங்களுக்குச் சில எடுத்துக்காட்டுகள் தருக.** **[BEQ; Mar. - 2019]**

**விடை :** மண்பாண்டங்கள் செய்தல், பழங்கள் மற்றும் காய்கறி விற்பனையாளர்கள், போக்குவரத்து (மூன்று சக்கர டெம்போக்கள் மற்றும் ஆட்டோக்கள்) பழுதுபார்க்கும் கடைகள் குடிசைத் தொழில்கள், சிறிய கைத்தொழில்கள், கைத்தறி, கைவினை தொழில்கள் ஆகியவற்றை குறு நிறுவனங்களுக்கு உதாரணமாக கூறலாம்.

**2. புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டத்தின் நோக்கம் என்ன?**

**விடை :** (i) படித்த இளைஞர்களுக்குத் தொழில் முனைவோர் பயிற்சி அளித்தல்

(ii) தொழில் தொடங்கத் திட்டங்கள் தயாரித்தல்

(iii) புதிய தொழில் முயற்சிகள் மேற்கொள்ள நிதி நிறுவனங்களின் நிதியுதவி பெற உதவுதல் மற்றும்

(iv) பெருந்தொழில்நிறுவனங்களுடன் வணிகத் தொடர்பு அமைத்துத் தருதல் ஆகிய உதவிகளை அளித்து வருகிறது.

**3. சுய உதவிக் குழு என்றால் என்ன?**

**விடை :** சுய உதவிக் குழு என்பது ஒரு **சிறிய முறைசாரா தன்னார்வச் சங்கம்** ஆகும். உறுப்பினர்கள் ஒருவருக்கொருவர் பொருளாதார உதவி செய்து கொள்ளவும், ஒருமைப்பாடு மற்றும் கூட்டுப் பொறுப்பு ஆகிய பண்புகளைப் பெறவும் இக்குழுக்கள் உதவுகின்றன. சேமிப்பைத் திரட்டி, அதன் மூலம் கடன் வசதிகளை நல்குவதும் இக்குழுக்களின் முக்கிய நோக்கமாகும்.

## III. சிறுவிடை வினாக்கள்

**1. தமிழ்நாட்டில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் தயாரிப்புகளைப் பட்டியலிடுக.**

**விடை :** (i) தமிழ்நாட்டில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள், ஏறத்தாழ அனைத்துப் பிரிவுகளிலும், பல்வேறு விதமான பொருட்களைத் தயாரிக்கின்றன.

(ii) இவற்றில் முன்னிற்பவை ஜவுளி, மின்னணு பொருட்கள், பொறியியல் பொருட்கள், தானியங்கி உதவிப் பொருட்கள், தோல் பொருட்கள், இரசாயனம், நெகிழி (பிளாஸ்டிக்) பொருட்கள், ஆயத்த ஆடைகள் மற்றும் ஆபரணங்கள் முதலானவை.

(iii) தமிழ் நாட்டில் இத்துறையில் 12.94 இலட்சம் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டு, சுமார் 81 இலட்சம் நபர்களுக்கு வேலைவாய்ப்பினை ஏற்படுத்தியுள்ளது.

**2. இந்தியப் பொருளாதாரத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் பங்கு மற்றும் முக்கியத்துவத்தை விளக்குக. (ஏதேனும் 5)**

**விடை :** இந்தியப் பொருளாதார வளர்ச்சியில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் கீழ்கண்டவாறு முக்கிய பங்கு வகிக்கின்றன. அவை,

(i) மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 8 சதவீதமும்.

(ii) நாட்டின் மொத்த உற்பத்தி திறனில் 45 சதவீதமும்

(iii) ஏற்றுமதியில் 40 சதவீதமும் இந்த நிறுவனங்களில் பங்காக உள்ளன. மேலும் இவை 6000–க்கு மேற்பட்ட பொருட்களை உற்பத்தி செய்கின்றன. 3.6 கோடி நிறுவனங்கள் வாயிலாக, 8 கோடி நபர்களுக்கு இவை வேலைவாய்ப்பு அளிக்கின்றன.

**3. சுய உதவிக் குழுக்களின் ஏதேனும் மூன்று சிறப்பியல்புகளை விவரி.** **[BEQ; HY. - 2018; June - 2019; May - 2022]**

**விடை : சுய உதவிக்குழுவின் சிறப்பம்சங்கள் :**

(i) "**முதலில் சேமிப்பு, பிறகு கடன்**" என்பது ஒவ்வொரு குழு உறுப்பினரின் குறிக்கோளாக இருக்க வேண்டும்.

(ii) சுய உதவிக்குழு ஒரே மாதிரியான பொருளாதார நிலையில் உள்ளவர்களை உறுப்பினர்களாகக் கொண்டு அமைக்கப்படுகிறது.

(iii) சுய உதவிக்குழு என்பது **10 முதல் 20 உறுப்பினர்களைக்** கொண்டு அமைக்கப்படுகிறது.

## IV. பெருவிடை வினாக்கள்

**1. "முத்ரா" வங்கி விளக்குக.** **[BEQ; Aug. - 2022]**

**விடை :** (i) குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் நிதித்தேவைகளை பூர்த்தி செய்யவும், புதிய தொழில் தொடங்குபவர்கள் சந்திக்கும் நிதி பிரச்சனைகளுக்குத் தீர்வு காணவும், ₹20 ஆயிரம் கோடி முதலீட்டுடனும், ₹3 ஆயிரம் கோடி கடன் உத்திரவாத நிதியுடனும் மத்திய அரசால் "**குறுந்தொழில் பிரிவுகள் வளர்ச்சி மற்றும் மறுநிதி அளிப்பு முகமை**" (முத்ரா வங்கி) தொடங்கப் பட்டது.

(ii) குறுந்தொழில் முனைவோர் தங்களின் புதிய தொழிலைத் தொடங்கவும், தொழிலை மேம்படுத்தும் நிலையில் நிதி நாடுவோர், தொழிலை மேம்படுத்தவும், தொழிலை அடுத்த வளர்ச்சி நிலைக்குக் கொண்டு செல்வோர், தங்களின் தொழிலை விரிவுபடுத்தி கொள்ளவும் முத்ரா வங்கி கடன்களை வழங்குகிறது.

**2. சுய உதவிக் குழுக்களின் நோக்கங்களை விவரி? (ஏதேனும் 5)** **[Sep. - 2021 & Aug. - 2022]**

**விடை : சுய உதவிக் குழுவின் நோக்கங்கள் :**

(i) பெண்களுக்கு அதிகாரம் அளிப்பதை ஊக்குவிப்பது.

(ii) முறைசாரா கடன் கொடுப்போரின் பிடியிலிருந்து மக்களை மீட்டல்.

orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores



(iii) பெண்களின் திறமையை உருவாக்கி ஆக்கபூர்வமான செயல்பாடுகளில் அவர்களை ஈடுபடச் செய்வது.

(iv) பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள மக்களின் மனங்களில் சேமிப்பு பழக்கத்தை உருவாக்குதல்

(v) பெண்களிடம் தொழில் முனைவோருக்கான திறமைகளை வளர்த்தல் மற்றும் ஊக்குவித்தல்.

(vi) கடன் வட்டம் அல்லது சுழல் நிதி மற்றும் சுழற்சி கடன் ஆகியவை குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.

## அரசு தேர்வு வினாக்கள்

### 1 மதிப்பெண்

**1. பொருத்துக.** **[Sep. - 2021]**

| | |
|---|---|
| (1) பொதுத்துறை வங்கி | (i) முத்ரா |
| (2) தனியார்துறை வங்கி | (ii) SIDBI |
| (3) குறும நிதி நிறுவனம் | (iii) எச்.டி.எப்.சி |
| (4) வங்கி அல்லாத நிதி நிறுவனம் | (iv) கனரா வங்கி |

அ. (1) - (ii), (2) - (i), (3) - (iv), (4) - (iii)

ஆ. (1) - (i), (2) - (iii), (3) - (iv), (4) - (ii)

இ. (1) - (iii), (2) - (iv), (3) - (ii), (4) - (i)

ஈ. (1) - (iv), (2) - (iii), (3) - (i), (4) - (ii)

**[விடை. (ஈ) (1) - (iv), (2) - (iii), (3) - (i), (4) - (ii)]**

**2. முத்ரா வங்கி எவ்வகை நிறுவனங்களுக்குக் கடன் வழங்குகிறது?** **[Aug. - 2022]**

(அ) குறு நிறுவனங்கள் (ஆ) சிறு நிறுவனங்கள்

(இ) நடுத்தர நிறுவனங்கள் (ஈ) மேற்கூறிய அனைத்து

**[விடை. (ஈ) மேற்கூறிய அனைத்தும்]**

### 3 மதிப்பெண்கள்

**1. வங்கிகள், சுய உதவிக் குழுக்களுக்குக் கடன் வழங்கும் முறைகள் யாவை?** **[Sep. - 2021]**

**விடை :** சுய உதவிக் குழுக்களுக்கு கடன் அளிக்க மூன்று வெவ்வேறு முறைகள் உள்ளன.

(i) முதலாவது முறையில் வங்கிகள் சுய உதவிக்குழுக்களுக்கு, நேரடியாக கடன் வழங்குகின்றன.

(ii) இரண்டாவது முறையில் வங்கிகள் அரசு சாரா அமைப்பு (NGO) மூலம், சுய உதவிக்குழுக்களில் உள்ள சிறு தொழில்முனைவோருக்குக் கடன் வழங்குகின்றன.

(iii) மூன்றாவது முறையில் அரசு சாரா அமைப்புகளைச் செயலாக்குநராகக் கொண்டு வங்கிகள் சுய உதவிக்குழுக்களுக்கு கடன் அளிக்கின்றன. இந்த மூன்று முறைகளில் அரசு சாரா நிறுவனங்களைச் செயலாக்குநராகக் கொண்டு நேரடியாகக் கடன் அளிக்கும் முறையே பரவலாகப் பின்பற்றப்படுகிறது.

## கூடுதல் வினாக்கள்

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக

**1 மதிப்பெண்**

**1. தொழில் முனைவு**

அ. வேலை வாய்ப்பை உருவாக்கிறது.

ஆ. தொழில் மயமாக்க உதவுகிறது.

இ. வட்டார ஏற்றதாழ்வுகளைக் குறைக்கிறது

ஈ. மேற்கண்ட அனைத்தும்

**[விடை. (ஈ) மேற்கண்ட அனைத்தும்]**

**2. சேவைத் துறையில் குறு நிறுவனத்தின் முதலீடு .......... இருத்தல் வேண்டும்.** **[BEQ]**

அ. ₹ 25 இலட்சத்திற்குள் ஆ. ₹ 10 இலட்சத்திற்குள்

இ. ₹ 10 இலட்சத்திற்குள் ஆனால் ₹ 20 இலட்சத்திற்குள்

ஈ. ₹ 25 இலட்சத்திற்கு மேல் இருத்தல் வேண்டும்.

**[விடை. (ஆ) ₹10 இலட்சத்திற்குள்]**

**3. புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டு திட்டம் (NEEDS) தொடங்கப்பட்ட (தமிழ்நாட்டில்) ஆண்டு ..............**

அ. 2013 ஆ. 2014

இ. 2009 ஈ. 2008

**[விடை. (அ) 2013]**

**4. "முத்ரா" வங்கி யாரால் தொடங்கப்பட்டது?**

அ. மத்திய அரசால்

ஆ. மாநில அரசால்

இ. மத்திய மாநில அரசால்

ஈ. இந்திய ரிசர்வ் வங்கியால்

**[விடை. (அ) மத்திய அரசால்]**

**5. இவற்றுள் எது சுய உதவிக் குழுவின் நோக்கமாகும்?**

அ. உறுப்பினர்களின் குடும்ப பொருளாதார நிலையை உயர்த்துதல்

ஆ. பெண்களுக்கு அதிகாரம் அளிப்பதை ஊக்குவிப்பது

இ. முறைசாரா கடன் கொடுப்போரின் பிடியிலிருந்து மக்களை மீட்டல்

ஈ. மேற்கண்ட அனைத்தும்

**[விடை. (ஈ) மேற்கண்ட அனைத்தும்]**

**6. சுய உதவிக் குழுக்களை பதிவு செய்வது**

அ. கட்டாயம் ஆ. அவசியமில்லை

இ. விருப்பத்தின் பேரில்

ஈ. மேற்கண்ட அனைத்தும்

**[விடை. (ஆ) அவசியமில்லை]**

www.Padasalai.Net www.Surabooks.com
orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or
Available at All Leading Bookstores



7. **சுய உதவிக்குழுக்கள் ........... முதல் .............. உறுப்பினர்கள் வரை கொண்டு அமைக்கப்படுகிறது.**
அ. 10, 20 ஆ. 15, 25
இ. 20, 40 ஈ. 25, 35
**[விடை. (அ) 10, 20]**

8. **ஒரே மாதிரியான பொருளாதார தேவை உள்ளவர்களால் உருவாக்கப்படுவது**
அ. கூட்டாண்மை ஆ. கூட்டுப் பங்கு நிறுமம்
இ. சுய உதவிக் குழுக்கள்
ஈ. மேற்கண்ட அனைத்தும்
**[விடை. (இ) சுய உதவிக் குழுக்கள்]**

9. **சுய உதவிக் குழுவில்...............மட்டும் உறுப்பினர்களாக இருக்கும் வகையில் அமைக்க முடியும்.** [BEQ]
அ. ஆண்கள் ஆ. பெண்கள்
இ. ஆண்கள் அல்லது பெண்கள்
ஈ. மேற்கண்ட எதுவும் இல்லை
**[விடை. (இ) ஆண்கள் அல்லது பெண்கள்]**

10. **ஒவ்வொரு உதவிக் குழுவிலும் ஒரு குடும்பத்திலிருந்து..............மட்டுமே உறுப்பினராக இருக்க முடியும்.**
அ. ஒரு நபர் ஆ. இரண்டு நபர்கள்
இ. மூன்று நபர்கள் ஈ. அனைத்து நபர்களும்
**[விடை. (அ) ஒரு நபர்]**

11. **தமிழ்நாட்டில் எந்த மாவட்டத்தில் முதன் முதலில் சுய உதவிக் குழுக்கள் தோற்றுவிக்கப்பட்டது?**
அ. இரமநாதபுர மாவட்டம்
ஆ. கிருஷ்ணகிரி மாவட்டம்
இ. தா்மபுரி மாவட்டம்
ஈ. விழுப்புரம் மாவட்டம்
**[விடை. (இ) தா்மபுரி மாவட்டம்]**

12. **தமிழ்நாடு பெண்கள் மேம்பாட்டுக் கழகம் தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு**
அ. 1999 ஆ. 2000 இ. 1988 ஈ. 1983
**[விடை. (ஈ) 1983]**

13. **"மகளிர் திட்டம்" கொண்டு வரப்பட்ட ஆண்டு** [BEQ]
அ. 1997 - 98 ஆ. 1999 - 2000
இ. 2000 - 2001 ஈ. 2001 - 2002
**[விடை. (அ) 1997 - 98]**

14. **"முதலில் சேமிப்பு, பிறகு கடன்" என்பது இவ்வமைப்பின் குறிக்கோளாகும்** [BEQ]
அ. கூட்டாண்மை ஆ. கூட்டுப் பங்கு நிறுமம்
இ. சுய உதவிக் குழுக்கள்
ஈ. மேற்கண்ட அனைத்தும்
**[விடை. (இ) சுய உதவிக் குழுக்கள்]**

## குறுவிடை வினாக்கள் — 2 மதிப்பெண்கள்

1. **சுய உதவி குழு - வரைவிலக்கணம் தருக.**

விடை : தேசிய வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு வங்கி (NABARD) யின் கூற்றுப்படி "சுய உதவிக்குழு என்பது, ஒரே வகையான சமூகப் பொருளாதார நிலையில் உள்ள கிராமப்புற ஏழைகளின் ஒருங்கிணைந்த குழு ஆகும். பொது நிதியை உருவாக்க, அவர்கள் கூட்டாக இணைந்து, தங்களால் இயன்ற சிறுதொகையினை தொடர்ந்து முறையாகச் சேமித்து, அந்நிதியை உற்பத்தி செய்யும் நோக்கத்திற்காக அல்லது அவசர கடன் தேவைக்காக உறுப்பினர்களுக்கு வழங்க ஒப்பு கொண்டு இயங்கும் ஒரு அமைப்பாகும்.

2. **உற்பத்தி மற்றும் சேவைத் தொழில் துறைகளில் குறு நிறுவனங்களுக்கான முதலீட்டு வரம்பைக் குறிப்பிடுக.**

விடை : குறு நிறுவனங்களுக்கான முதலீடுகள் உற்பத்தி துறையில் ₹25 இலட்சத்திற்குள்ளும் இருத்தல் வேண்டும்.

3. **உற்பத்தித் தொழில் நிறுவனங்கள் என்றால் என்ன?**

விடை : தொழில்துறையின் நிறுவனங்கள் (அபிவிருத்தி மற்றும் ஒழுங்குமுறை) சட்டம், 1951 ன் படி முதல் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள தொழிற்துறை தொடர்பான உற்பத்தி அல்லது உற்பத்திப் பொருட்களில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களைக் குறிக்கின்றன. இவை இயந்திரம் மற்றும் தளவாடங்களில் செய்யப்படும் முதலீடுகளின் உச்ச வரம்பின் அடிப்படையில் வரையறுக்கப்பட்டிருக்கிறது.

4. **உற்பத்தி மற்றும் சேவைத் தொழில் துறைகளில் சிறு நிறுவனங்களுக்கான முதலீட்டு வரம்பைக் குறிப்பிடுக.**

விடை : (i) உற்பத்தி தொழில் நிறுவனங்களில் சிறு நிறுவனங்களின் முதலீடு ₹25 இலட்சத்துக்கு மேல் ₹5 கோடிக்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.

(ii) சேவைத் தொழில் துறையில் சிறு நிறுவனங்களின் முதலீடு ₹10 இலட்சத்துக்கு மேல் ₹2 கோடிக்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.

## சிறுவிடை வினாக்கள் — 3 மதிப்பெண்கள்

1. **சுய உதவிக் குழுவின் செயல்பாடுகளை எடுத்துக் கூறுக.**

விடை : சுய உதவிக்குழுவின் செயல்பாடுகள்
(i) உறுப்பினர்களின் முடிவு எடுக்கும் திறனை மேம்படுத்துகிறது.
(ii) உறுப்பினர்களுக்கு எழுத்தறிவு குறித்த பொது விழிப்புணர்வை அதிகரிக்கிறது.
(iii) வசதியற்றோருக்கு நிதி பரிமாற்றங்களில் திறன் பெற வாய்ப்பு அளிக்கிறது.
(iv) சரியான கணக்குகளை உறுதிப்படுத்தப் பல ஏடுகளும், பதிவேடுகளும் பராமரிக்கப்படுதல்.
(v) தேர்ந்தெடுக்கப்பட்ட துறைகளில் தேவையான பயிற்சி அளித்தல்.

orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or
Available at All Leading Bookstores



(vi) ஆண்டு தோறும் தகுதி பெற்ற தணிக்கையாளரிடம் ஆண்டுத் தணிக்கைக்காகக் கணக்குகளைச் சமர்ப்பித்தல்.

(vii) குழு உறுப்பினர்களுக்கு அனுமதிக்கக்கூடிய கடன் தொகையைத் தீர்மானித்தல்

**2. குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு நிதி உதவி வழங்கும் நிறுவனங்கள் பற்றி குறிப்பிடுக.**

விடை : குறு சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்குப் பல வங்கிகளும் மற்றும் நிதி நிறுவனங்களும் நிதி உதவி வழங்கி வருகின்றன. அவையாவன

(i) **வணிக வங்கிகள் :**

1. பொதுத்துறை வங்கிகள்
(எ.கா) பாரத ஸ்டேட் வங்கி, இந்தியன் வங்கி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, கனரா வங்கி.
2. தனியார் துறை வங்கி
(எ.கா) ஐசிஐசிஐ, ஆக்சிஸ் வங்கி, சிட்டி யூனியன் பாங்க், எச்டிஎப்சி, கரூர் வைஸ்யா பாங்க், தமிழ்நாடு மெர்கண்டைல் வங்கி

(ii) **வட்டார ஊரக வங்கிகள் :** (எ.கா) பாண்டியன் கிராம வங்கி, பல்லவன் கிராம வங்கி, வள்ளலார் கிராம வங்கி.

(iii) **கூட்டுறவு வங்கிகள் :** (எ.கா) தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி (TNSC Bank) மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள்.

(iv) **குறும நிதி நிறுவனங்கள் :** (எ.கா) முத்ரா வங்கி.

**3. உற்பத்தி மற்றும் பணிகள் துறையில் நடுத்தர நிறுவனங்களுக்கான முதலீட்டு வரம்பைக் குறிப்பிடுக.**

விடை : (i) உற்பத்தி தொழில் நிறுவனங்களில் நடுத்தர நிறுவனங்களின் முதலீடு ₹5 **கோடிக்கு மேல் ₹10 கோடிக்கு மிகாமல்** இருத்தல் வேண்டும்.

(ii) சேவை தொழில் நிறுவனங்களில் நடுத்தர நிறுவனங்களின் முதலீடு ₹2 **கோடிக்கு மேல் ₹5 கோடிக்கு மிகாமல்** இருத்தல் வேண்டும்.

## பெருவிடை வினாக்கள் — 5 மதிப்பெண்கள்

**1. இந்தியா மற்றும் தமிழ்நாட்டில் சுய உதவிக்குழுவின் தோற்றம், வளர்ச்சி பற்றி குறிப்பு வரைக.**

விடை : (i) **இந்தியாவில் சுய உதவிக் குழுக்கள் :**

1. டிசம்பர் 2017 ன் படி இந்தியாவில் 45,67,090 சுய உதவிக் குழுக்கள் உள்ளன. இந்தச் சுய உதவிக் குழுக்களில் உறுப்பினர்கள் எண்ணிக்கை 5,02,65,933 ஆகும்.
2. அடிப்படை அல்லது தொடக்க நிலையில் மேம்பாட்டு திட்டங்களைச் செயல்படுத்துவதில், சுய உதவிக்குழுக்களின் முக்கியத்துவத்தை அறிந்து, இந்திய அரசின் ஐந்தாண்டுத் திட்டங்கள் இவற்றுக்கான முறையான அங்கீகாரம் அளித்துள்ளன.

(ii) **தமிழ்நாட்டில் சுய உதவிக்குழுவின் தொடக்கம், வளர்ச்சி :**

1. பெண்களின் சமுதாய, பொருளாதார மேம்பாட்டிற்காகவும், ஊரகப் பெண்களின் திறனை மேம்படுத்தும் நோக்குடன், தமிழ்நாட்டில் 1983ல் தமிழ்நாடு பெண்கள் மேம்பாட்டுக்கழகம் என்ற நிறுவனம் தோற்றுவிக்கப்பட்டது.
2. தமிழ்நாடு அரசு 1989 செம்படம்பரில் விவசாய முன்னேற்றத்திற்கான உலக நிதியத்தின் (International Fund for Agricultural Development) உதவியோடு தர்மபுரி மாவட்டத்தில் சுய உதவிக்குழுக்களை துவங்கி வைத்தது
3. இத்திட்டத்தின் வெற்றியினால் "மகளிர் திட்டம்" என்ற திட்டம், 1997-98ல் மாநில அரசின் நிதி உதவியோடு, பிற மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது.
4. இந்தச் சுய உதவிக்குழு மிகச் சக்தி வாய்ந்த இயக்கமாக செயல்பட்டு, இன்று மாநிலத்தில் பல வசதியற்ற மகளிரின் வாழ்க்கைக்கு ஒளியூட்டும் திட்டமாக செயல்பட்டு வருகிறது.

**2. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் - வரையறை தருக.**

விடை : (i) **குறு தொழில் நிறுவனம் :** ஒரு நிறுவனம் **உற்பத்தி** தொழில்துறையில் **₹25 இலட்சத்திற்குள்ளும் சேவைத் தொழில் துறையில் ₹10 இலட்சத்திற்குள்ளும்** முதலீடு செய்திருந்தால் அது குறு தொழில் நிறுவனம் என்று அழைக்கப்படும்.

(ii) **சிறு தொழில் நிறுவனம் :** ஒரு நிறுவனம் **உற்பத்தி தொழில் துறையில், இயந்திரம் மற்றும் ஆலைகளில் ₹25 இலட்சத்துக்கு மேல் ₹5 கோடிக்கு மிகாமலும், சேவைத் தொழில் துறையில் உபகரணங்களில் ₹10 இலட்சத்துக்கு மேல் ₹2 கோடிக்கு மிகாமலும் முதலீடு செய்திருந்தால்** அந்நிறுவனம் சிறு தொழில் நிறுவனம் என்று அழைக்கப்படும்.

(iii) **நடுத்தர தொழில் நிறுவனம் :** ஒரு நிறுவனம் **உற்பத்தி தொழில் துறையில் இயந்திரம் மற்றும் ஆலைகளில் ₹5 கோடிக்கு மேல் ₹10 கோடிக்கு மிகாமலும், சேவை தொழில் துறையில் உபகரணங்களில் ₹2 கோடிக்கு மேல் ₹5 கோடிக்கு மிகாமலும் முதலீடு செய்திருந்தால்** அந்நிறுவனம் நடுத்தர தொழில் நிறுவனம் என்று அழைக்கப்படும்.

orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores

11 ஆம் வகுப்பு

# உடனடித் தேர்வு - ஆகஸ்ட் 2022

PART - III

பதிவு எண் :

காலஅளவு : 3.00 மணி நேரம்] **வணிகவியல்** (விடைகளுடன்) [மொத்த மதிப்பெண்கள் : 90

**அறிவுரைகள்:** (1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

## பகுதி - I

**குறிப்பு:** (i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **20 × 1 = 20**

(ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1. பாண்டியர் ஆட்சிக் காலத்தில் பொருட்கள் விற்பனை செய்யும் இடத்திற்கு __________ என்று பெயர்.
(அ) அங்காடி (ஆ) சந்தை
(இ) நாளங்காடி (ஈ) அல்லங்காடி

2. ஒரு முழுப் பொருள் தயாரிக்கப் பல நிலைகளைக் கடக்கும் உற்பத்தி முறை என்பது :
(அ) பகுப்பாய்வு உற்பத்தித் தொழில்
(ஆ) செயற்கை பொருள் உற்பத்தித் தொழில்
(இ) தொடர்முறை உற்பத்தித் தொழில்
(ஈ) ஒன்று திரட்டும் உற்பத்தித் தொழில்

3. தனியாள் வணிகத்தின் குறைபாடு :
(அ) வரையறு பொறுப்பு (ஆ) வரையறாப் பொறுப்பு
(இ) அமைப்பெளிமை (ஈ) விரைவான முடிவு

4. அரசு நிறுவனங்களின் முதன்மையான நோக்கம் :
(அ) லாபம் ஈட்டுதல்
(ஆ) வேலை வாய்ப்பை உருவாக்குதல்
(இ) மக்களுக்கு சேவை செய்தல்
(ஈ) மேற்கூறிய அனைத்தும்

5. RTGS மூலம் குறைந்தபட்சம் எவ்வளவு பணம் பரிமாற்றம் செய்ய முடியும்?
(அ) எவ்வளவு தொகை வேண்டுமானாலும்
(ஆ) ₹ 50,000
(இ) ₹ 2 லட்சம் (ஈ) ₹ 5 லட்சம்

6. பின்வருவனவற்றுள் எது கடல்சார் காப்பீடு வகையினைச் சார்ந்தது :
(அ) பணம் திருப்பத் திட்டாவணம்
(ஆ) பொருள்சார் காப்பீடு
(இ) கப்பல்சார் காப்பீடு (ஈ) (ஆ) மற்றும் (இ)

7. மின்னணு வலைதளத்தின் மூலம் பொருட்களை வாங்குதல் மற்றும் விற்றல் __________ எனப்படுகிறது.
(அ) மின்னணு வர்த்தகம் (ஆ) மின்னணு வங்கியியல்
(இ) மின்னணு சில்லறை வியாபாரம்
(ஈ) மேற்கண்ட எதுவுமில்லை

8. அன்பு மற்றும் பாசம் அல்லது சமூக சேவை உள்நோக்கம் ஆகியவற்றால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் :
(அ) பொருளாதாரச் செயல்பாடுகள்
(ஆ) பண நடவடிக்கைகள்
(இ) பொருளாதாரச் சார்பற்ற செயல்பாடுகள்
(ஈ) நிதி நடவடிக்கைகள்

9. கடன் பத்திரத்தாரர்கள் ஒரு நிலையான __________ விகிதம் பெறத் தகுதியுடையவர்கள்.
(அ) பங்காதாயம் (ஆ) இலாபம்
(இ) வட்டி (ஈ) விகிதம்

10. முத்ரா வங்கி எவ்வகை நிறுவனங்களுக்குக் கடன் வழங்குகிறது?
(அ) குறு நிறுவனங்கள் (ஆ) சிறு நிறுவனங்கள்
(இ) நடுத்தர நிறுவனங்கள் (ஈ) மேற்கூறிய அனைத்தும்

11. உற்பத்தியாளருக்கும், நுகர்வோருக்கும் இடையே இணைப்புச் சங்கிலியாக இருப்பது :
(அ) வியாபாரம் (ஆ) தொழிற்சாலை
(இ) வணிகம் (ஈ) வர்த்தகம்

12. உற்பத்தியாளரிடம் பொருட்களை வாங்கிச் சில்லறை வியாபாரிகளுக்கு விற்பனை செய்பவர் __________.
(அ) உற்பத்தியாளர் (ஆ) மொத்த வியாபாரி
(இ) சில்லறை வியாபாரி (ஈ) நுகர்வோர்

13. __________ சட்டத்தின்படி ஆண் வாரிசுகள் மட்டுமே வம்சாவழி சொத்தில் உரிமையுள்ளவர்கள்.
(அ) இந்து சட்டம் (ஆ) மிடாக்சரா சட்டம்
(இ) தயாபாகா சட்டம் (ஈ) மேற்கண்ட எதுவுமில்லை

14. நாடுகளுக்கிடையே சரக்கு, சேவை, அறிவுசார் உரிமைகள், தொழில் நுட்பம் மற்றும் மனித உழைப்பு ஆகியவை இடம் பெயருவது :
(அ) பன்னாட்டு வணிகம் (ஆ) பன்னாட்டு வியாபாரம்
(இ) மறு ஏற்றுமதி வியாபாரம் (ஈ) உள்நாட்டு வியாபாரம்

15. சட்டத்தால் நடைமுறைப்படுத்தப்படும் ஓர் உடன்படிக்கை :
(அ) நிறைவேற்றக்கூடிய ஏற்பு
(ஆ) ஏற்றுக் கொள்ளப்பட்ட முனைவு
(இ) ஒப்புக்கொண்ட வாக்குறுதி
(ஈ) ஒப்பந்தம்



orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com
www.Padasalai.Net www.Surabooks.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores



16. இரு தரப்பு ஒப்பந்தம் மூலம் விடுவிக்கப்படுவது :
(அ) பரிமாற்றம் (ஆ) ரத்து செய்தல்
(இ) திருத்தம் (ஈ) மேற்கூறிய அனைத்தும்

17. வருமான வரி என்பது :
(அ) வியாபார வரி (ஆ) நேரடி வரி
(இ) மறைமுகவரி (ஈ) சேவை வரி

18. IGST என்பது :
(அ) ஒருங்கிணைந்த சரக்கு மற்றும் சேவை வரி
(ஆ) இந்திய சரக்கு மற்றும் சேவை வரி
(இ) ஆரம்ப சரக்கு மற்றும் சேவை வரி
(ஈ) பன்னாட்டு சரக்கு மற்றும் சேவை வரி

19. கீழ்க்கண்டவற்றுள் எது நாடாளுமன்ற அல்லது மாநிலச் சட்ட மன்றங்கள் இயற்றிய சட்டத்தின்மூலம் உருவாக்கப்படுகிறது?
(அ) பட்டய நிறுமம் (ஆ) அயல்நாட்டு நிறுமம்
(இ) அரசு நிறுமம் (ஈ) சட்ட முறை நிறுமம்

20. கூட்டுறவு அமைப்பில் உறுப்பினர்கள் :
(அ) யார் வேண்டுமானாலும் உறுப்பினர் ஆக முடியாது
(ஆ) தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்
(இ) யார் வேண்டுமானாலும் இருக்கலாம்
(ஈ) மேற்கண்டவற்றில் எதுவுமில்லை

## பகுதி - II

குறிப்பு : **எவையேனும் ஏழு** வினாக்களுக்கு விடையளிக்கவும். அவற்றில் வினா எண் 30-**க்கு கட்டாயமாக** விடையளிக்கவும்.

**7 × 2 = 14**

21. வணிகத்தை வரையறுக்கவும்.
22. கர்த்தா என்பவர் யார்?
23. வருமான வரி என்றால் என்ன?
24. கடன் அட்டை (Credit Card) – சிறுகுறிப்பு வரைக.
25. ஆயுள் காப்பீட்டுத் திட்டாவண வகைகளை குறிப்பிடுக.
26. தொழில் செயல்முறை புறத்திறனீட்டல் (BPO) என்றால் என்ன?
27. சிறப்பு பண்டகச் சாலைகள் என்றால் என்ன?
28. இறக்குமதி வியாபாரம் என்றால் என்ன?
29. ஒப்பந்தம் என்றால் என்ன?
30. திரு. இராம் அவர்கள் பல்வேறு இடங்களில் கடைகளை அமைத்து ஒரே மாதிரியான தரமான பொருட்களை விற்பனை செய்து வருகிறார். இவை எவ்வகையான சில்லறை வியாபார கடைகள்?

## பகுதி - III

குறிப்பு : **எவையேனும் ஏழு** வினாக்களுக்கு விடையளிக்கவும். அவற்றில் வினா எண் 40-**க்கு கட்டாயமாக** விடையளிக்கவும்.

**7 × 3 = 21**

31. தொழில் – சிறு குறிப்பு வரைக.
32. கூட்டாண்மை ஒப்பாவணம் என்றால் என்ன?
33. துறைவாரி நிறுவனம் என்றால் என்ன?
34. இந்திய ரிசர்வ் வங்கியின் நிர்வாகத்தில் ஈடுபட்டுள்ள நபர்கள் யார்?
35. கால அளவின் அடிப்படையில் தொழில் நிதியின் வகைகளைக் குறிப்பிடுக.
36. உள்நாட்டு வியாபாரத்தின் வகைகள் யாவை? விளக்குக.
37. உடன்படிக்கை என்றால் என்ன?
38. நபர் என்ற சொல்லில் யாரெல்லாம் அடங்குவர்?
39. குளிர் சாதன பண்டகக் காப்பு என்றால் என்ன?
40. இந்தியா, இங்கிலாந்திற்கு தேயிலையை விற்பனை செய்கிறது. இது எவ்வகையான பன்னாட்டு வியாபாரம்? விவரிக்கவும்.

## பகுதி - IV

குறிப்பு : **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

**7 × 5 = 35**

41. (அ) பண்டமாற்று முறைக்கான நிபந்தனைகளாகக் கூறப்பட்டுள்ளன யாவை?
(அல்லது)
(ஆ) முத்ரா வங்கி – விளக்குக. சுய உதவிக் குழுவின் நோக்கங்கள் ஏதேனும் மூன்றினை எழுதுக.

42. (அ) தனியாள் வணிகத்தின் குறைபாடுகளை விளக்குக.
(அல்லது)
(ஆ) ஒப்பந்தம் மற்றும் உடன்படிக்கைக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?

43. (அ) கூட்டுறவின் கொள்கைகள் யாவை?
(அல்லது)
(ஆ) மொத்த வியாபாரியின் பணிகள் யாவை?

44. (அ) அமைப்பு முறையேட்டில் அடங்கியுள்ள பொருளடக்கங்கள் யாவை?
(அல்லது)
(ஆ) வணிக வங்கிகளால் நிகழ்த்தப்படும் பல்வேறு வகையான முதன்மை செயல்பாடுகளை விவரிக்கவும்.

45. (அ) பண்டகக் காப்பின் நன்மைகளை விவரிக்கவும்.
(அல்லது)
(ஆ) உள்நாட்டு வணிகத்திற்கும் பன்னாட்டு வணிகத்திற்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?

46. (அ) சில்லறை வியாபாரிகளின் வகைகளை விவரிக்கவும்.
(அல்லது)
(ஆ) காப்பீட்டின் வகைகளை விவரிக்கவும்.

47. (அ) சரக்கு மற்றும் சேவை வரியின் வகைகளை விளக்குக.
(அல்லது)
(ஆ) தொழிலின் சிறப்பியல்புகள் யாவை?

# விடைகள்

## பகுதி - I

1. (அ) அங்காடி
2. (இ) தொடர்முறை உற்பத்தித் தொழில்
3. (ஆ) வரையறாப் பொறுப்பு
4. (இ) மக்களுக்கு சேவை செய்தல்
5. (இ) ₹ 2 லட்சம்
6. (ஈ) (ஆ) மற்றும் (இ)
7. (அ) மின்னணு வர்த்தகம்
8. (இ) பொருளாதாரச் சார்பற்ற செயல்பாடுகள்
9. (இ) வட்டி
10. (ஈ) மேற்கூறிய அனைத்தும்
11. (அ) வியாபாரம்
12. (ஆ) மொத்த வியாபாரி

www.Padasalai.Net www.Surabooks.com
orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com